RR. No 1734/55/79

# பண்டைய வேதத் தத்துவங்களும் வேத மறுப்புப் பௌத்தமும்

பேராசிரியர் நா. வானமாமலை

104

R
N 76
111409

மக்கள் வெளியீடு

# பண்டைய வேதத் தத்துவங்களும் வேத மறுப்புப் பௌத்தமும்

## ஒரு மார்க்சீய அறிமுகம்


**பேராசிரியர் நா. வானமாமலை**

சிறப்புப் பேராசிரியர்

**கர்நாடகப் பல்கலைக்கழகம்—தார்வார்**

ஆசிரியர் : **ஆராய்ச்சி**



**மக்கள் வெளியீடு**

மக்கள் வெளியீடு

சிறப்பு வெளியீடு-4

முதற் பதிப்பு : மார்ச்சு 1976

© நா. வானமாமலை

விலை : ரூபாய் மூன்று

○ பதிப்பாசிரியர் : மே. து. ராசுகுமார்

○ மக்கள் வெளியீடு
24 உனிசு அலி சாகிப் தெரு
எல்லிசு சாலை சென்னை-600002

○ மக்கள் அச்சகம் சென்னை-600002

# பதிப்புரை

படித்த வர்க்கத்துக்கு மட்டுமே தத்துவம் சொந்தமானது என்ற கருத்து பொதுமக்களிடம் நிலவி வந்த காலம் ஒன்று உண்டு.

இன்று எளிய பொதுமக்கள்கூடத் தத்துவப்போக்குகளைத் தெரிந்து கொள்ளவும் புரிந்து கொள்ளவும் ஆர்வம் காட்டுகிறார்கள்.

புரியாத மொழியில் தெளிவற்ற தர்க்க வாதங்களைத் துணைக்கு வைத்துக்கொண்டு ஒரு சிலருக்கு மட்டுமே உரிமையாக இருந்த தத்துவ விசாரங்களின் உண்மைப் பொருளை இன்று எல்லோரும் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் தருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழில் இத்தகைய நூல்கள் மிகமிகக் குறைவு என்றுதான் சொல்லவேண்டும். இந்தியத் தத்துவ மரபையும் பண்பாட்டு வளர்ச்சியையும் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தும் அரிய நோக்குடன் பேராசிரியர் நா. வா. அவர்கள் இந்நூலினைத் தந்திருக்கிறார்கள்.

தத்துவக் கருத்துக்களைப் பற்றிய முன்னறிவு இல்லாதவர்களும் புரிந்துகொள்ளும் பொருட்டு புராதன இந்தியத் தத்துவங்களிலிருந்து தொடங்கி பல்வேறு போக்குகளையும் விளக்கியிருக்கிறார்கள்.

இது ஒரு தரமுள்ள ஆராய்ச்சி நூலாக மட்டும் அமையாமல் ஒரு அறிமுக நூலாகவும் அமைந்திருப்பது நூலின் பயனை முழுமையாக நுகர வழியமைத்துத் தருவதாக உள்ளது.

அடுத்துத் தமிழகத்தில் உயர் வர்க்கங்களின் தத்துவங்
களாயிருக்கிற வைணவ, சைவ சமயங்களைப் பற்றியும் எழுதக்
காலம் வரும் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால்
இந்நூலினைப் படிக்கின்ற அனைவரும் அத்தகைய காலத்தைக்
கனிய வைக்க உதவுவார்கள் என்ற ஆர்வத்தில் ஊக்கம்
தருவார்கள் என்ற நம்பிக்கையில் இந்த நூலினை வெளியிடு
கின்றோம்.

பேராசிரியர் அவர்கள் பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருக்
கிறார்கள். தற்போது கர்நாடகப் பல்கலைக் கழகத்தின் சிறப்புப்
பேராசிரியராகவும் திராவிட மொழியியல் கழகத்தின் தமிழ்ப்
பகுதி ஆய்வுப் பொறுப்பாளராகவும் பணியாற்றிக் கொண்டி
ருக்கும் பேராசிரியர் நா. வா. அவர்களுக்கு இந்நூலைப் படிக்கின்ற
நீங்கள் அனைவரும் தருகின்ற வரவேற்புதான் அடுத்த நூல்களை
அவர் உடனடியாக முடிக்க வற்புறுத்தலாக அமையும் என்று
கருதுகின்றோம்.

இந்நூலினை வெளியிடக் கிடைத்திருக்கின்ற வாய்ப்பினால்
'மக்கள் வெளியீடு' புதிய கட்டத்தில் காலடி எடுத்து வைத்திருக்
கின்றது. அதற்கு உறுதுணையாக இருக்கும் பேராசிரியர் அவர்
களுக்கு என்றும் கடப்பாடுடையோம்.

மே. து. ராசகுமார்

## வாசகர்களுக்கு

வணக்கம்

இந்நூல் எழுதப்பட்ட வரலாறு குறித்துச் சில வார்த்தைகள் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

டில்லியில் 1972ல் நடைபெற்ற இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியப் பள்ளியில் இரண்டு நாட்கள் இந்தியத் தத்துவத்தை மார்க்சீயக் கண்ணோட்டத்தில் மதிப்பிட்டுப் பேசுமாறு எனக்குப் பொறுப்பளிக்கப்பட்டது.

அதற்காக நான் குறிப்புகள் தயாரித்தேன். முக்கியமாக இந்தியத் தத்துவ வரலாற்றில் சமூக வளர்ச்சியோடு சிந்தனை வளர்ச்சியேற்பட்ட விதத்தையும், முரண்பாடுகளின் காரணமாகப் புதிய சிந்தனைகள் தோன்றிய பாதையையும் விளக்க வேண்டுமென்பது எனது நோக்கம். முதல் நாள் பேச்சில் இந்துத் தத்துவங்களில் முக்கியமானவற்றின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் பற்றிப் பேசுவதென்றும், இரண்டாம் நாள் பேச்சில் பௌத்தம் பற்றிப் பேசுவதென்றும் வரையறுத்துக் கொண்டேன்.

இது ஓர் அறிமுக விளக்கமாதலால், இந்துத் தத்துவங்கள் ஒவ்வொன்றின் கருத்தமைப்புக்களை விரிவாக விளக்குவதோ, பௌத்தப் பிரிவுகளின் தத்துவப் பிரிவுகளை விரிவாக ஆராய்வதோ எனது நோக்கமாக இருக்கவில்லை. நமது தத்துவங்களின் முக்கியமான சிந்தனைப் போராட்டங்களையும், அதனால் தோன்றிய புதிய சிந்தனைகளையும் சுட்டிக் காட்டுவதே எனது நோக்கமாயிருந்தது. இரண்டாவது முறை மத்தியப் பள்ளிக்கு இந்தியத் தத்துவத்தைப் போதிக்கச் சென்ற போது, இந்நோக்கத்துக்குட்பட்டு, தென்னிந்தியத் தத்துவங்களில் பழமையான கருத்து முதல் ஒருமைவாதம் மாறுபடும் விதத்தையும் அதன் காரணங்களையும் சுருக்கமாகக் கூறுவதற்காக எனது பாடத் திட்டத்தில் அவ்விஷயத்தைச் சேர்த்துக் கொண்டேன். பௌத்தத்திற்குள்ளேயே பௌத்தரது ஒழுக்கக் கொள்கை, கருத்துமுதல்வாதமாக மாற்றம் பெற்று சூன்யவாதம், சௌந்திராந்திகம், யோகாச்சாரம், விஞ்ஞானவாத

மெனப் பிரிவதற்குரிய காரணங்களை இப்போது புதிதாகச் சேர்த்துள்ளேன். தமிழகத்தில் பௌத்தம் மஹாயானப் பிரிவுகளின் ஆரம்ப காலத்திலேயே தோன்றிவிட்டது ஆகலால், அதன் கொள்கைகளை மிகத் தெளிவாக விளக்கும் மணிமேகலையிலுள்ள செய்திகளை மேற்கோள் காட்டியுள்ளேன்.

இந்நூல் ஒரு விரிவான ஆய்வு நூல் அன்று. மார்க்சீயவாதிகளுக்கும், முற்போக்குவாதிகளுக்கும் நமது பண்டைய தத்துவங்களை அவற்றின் சமுதாய வளர்ச்சிப் பின்னணியில் அறிமுகப் படுத்துவதே இந்நூலின் நோக்கம். இவ்வறிமுகம்கூட மிகவும் கடினமாக இருக்கிறது என்று தொழிலாளித் தோழர்களும், கம்யூனிஸ்டுக் கட்சி ஊழியர்களும் உணரக் கூடும். இது ஒரு சிக்கலான பிரச்சினை. தத்துவம் புரிந்து கொள்ளக் கடினமானது. அதை எளிதில் புரியும்படி விளக்கவேண்டும். ஆனால் நமது தொழிலாளர்களுக்கு எந்தத் தத்துவத்தைப் பற்றியும் தெரியாது எளிய தத்துவ நூல்களும் தமிழில் கிடைப்பதில்லை. இங்கேதான் எங்கே தத்துவத்தை விளக்கத் தொடங்குவது என்பது எனக்குப் புரியவில்லை. ஆயினும் இந்தியத் தத்துவப் பரம்பரையையும், பண்பாட்டுப் பரம்பரையையும், புரட்சிகரமான தொழிலாளி வர்க்கம் தெரிந்து கொள்ள வேண்டியது, எதிரி வர்க்கங்களின் தத்துவங்களை எதிர்த்துப் போராட அவசியமாகும். எனவே இவ்வறிமுக நூல் வெளியான பின்னர் வரப்போகும் விமர்சனத்தை எதிர்நோக்கியே, எவ்வளவு எளிதாக எழுத என்னால் முடியுமோ, அவ்வளவு எளிதாகவே எழுதியிருக்கிறேன்.

தற்காலத்தில் தமிழகத்தில் உயர் வர்க்கங்களின் தத்துவங்களாயிருக்கிற வைணவ, சைவ தத்துவங்களைப் பற்றி எழுத எண்ணியுள்ளேன். காலம் வரும். அதுவரை காத்திருப்போம்.

இதை வெளியிடுகின்ற மக்கள் வெளியீட்டார் முற்போக்குச் சிந்தனை வளர்ச்சிக்கு ஒரு சிறிய பணியைச் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நா. வானமாமலை

## உள்ளுறை


1. புராதன இந்துத் தத்துவங்கள் 1

அ. பல்வேறு தத்துவங்கள்
ஆ. வைதிகத் தத்துவங்கள்
இ. வேதங்கள்
ஈ. பிரம்மம்—ஆன்மா
உ. வேதாந்தம்

2. இந்தியத் தத்துவங்களின் பண்டைய வகுப்பு முறை 6

அ. சட்தரிசனங்கள் (ஆறு அங்கங்கள்)
—அவைதிக சமயங்கள்
ஆ. வேதங்கள்
இ. மந்திரம்—வழிபாடு
ஈ. பிற்கால வேதப் பாடல்கள்—வேதாந்தம்
—தத்துவத்தின் துவக்கம்
உ. புதிய அறிவு—உபநிஷதம்
ஊ. புதிய அறிவு—பிரம்ம ஞானம்
எ தத்துவப் பிரச்சினைகள்
ஏ. எது அறிவு?

3. இந்திய ஆன்மீகவாதத்தின் மூலங்கள் 22

அ. ஆளும் வர்க்கத்தின் பிராமண—க்ஷத்திரிய
முரண்பாடும் ஒற்றுமையும்
ஆ. சமுதாய வளர்ச்சியும் ஆன்மீகக் கருத்து
வளர்ச்சியும்

4. மீமாம்சகம்—நாத்திகவாதம் 27
அ. மீமாம்ச நாத்திகம்—காரணம்

5. சாங்கியம்—ஜட பரிணாமவாதம் 32

அ. சாங்கியத்தின் நல்வரங்கள்
ஆ. மணிமேகலையில் சாங்கியம்
இ. ஈசேஸ்வர சாங்கியம்
ஈ. பிரம்ம பரிணாமவாதம்—சங்கரர்—
ராமானுஜர்—மத்வர்—மெய்கண்ட தேவரும்
அருள் நந்தி சிவாச்சியாரும்

6. லோகாயதம்—முரணற்ற பொருள்முதல்வாதம் 47

அ. மணிமேகலையில் பூதவாதம்
ஆ. இந்திய லோகாயத்தின் குறைபாடுகள்

7. பௌத்தம் 55

அ. புத்தர் காலத்துப் பௌத்தம்
ஆ. ஆரிய சத்தியம்
இ. ஆரிய சத்தியக் கொள்கையின்
வரலாற்றுப் பின்னணி
ஈ. முதல் பிரிவினை

8. புதிய பௌத்தம் 68

அ. மகாயானம்—நாகார்ச்சுனர்
ஆ. அப்பாலைத் தத்துவம்
இ. தத்துவ வேறுபாடுகள்—தேரவாதம்
மஹாயானம்
ஈ. மஹாயானப் பிரிவுகள்—பழைய மாத்யமிகமும்
புதிய மாத்யமிகமும்
உ. உயர்ந்த உண்மையும் தாழ்ந்த உண்மையும்
ஊ. மஹாயானமும் சங்கரரும்
எ. தமிழகத்தில் பௌத்தம்

# 1. புராதன இந்துத் தத்துவங்கள்

## அ. பல்வேறு தத்துவங்கள்

பண்டைய இந்தியத் தத்துவங்கள் மிகப் பழைமையானவை. அவை ஒன்றோடொன்று முரண்பட்டு, போராடி, மாறுபட்டும், வளர்ந்தும், அழிந்தும் வந்துள்ளன. இந்தியத் தத்துவங்களுக்கு ஒரு சிறப்புத் தன்மை உண்டு. கிரீஸிலோ, ஐரோப்பாவிலோ தத்துவாதிகள் ஒருவருக்குப் பின் ஒருவராகத் தோன்றி புதிய சிந்தனை அமைப்புக்களைப் புதிய கண்ணோட்டங்களில் உருவாக்கினார்கள். ஆனால் நம் நாட்டில் ஒவ்வொரு தத்துவ வாதியும் தம்முடைய தத்துவம் மிகப் பண்டைக் காலத்தில் தோன்றியதாகக் கூறிக் கொள்வதுண்டு. வேதங்கள் மனிதனால் எழுதப் பட்டதில்லை, அது அபௌருஷேயம் என்று வேதவாதிகள் கூறினர். நடுக்காலத்தில வளர்ந்து வந்த தத்துவங்களைக் கூட வேத கால முனிவர்கள் இயற்றியதாக அவ்வத்தத்துவ வாதிகள் கூறுவர்.

மிகப் பிற்கால தத்துவங்கள் கூட வேதங்களிலிருந்தோ, உபநிடதங்களிலிருந்தோ தமது தத்துவச் சிந்தனைகள் தோன்றின என்று கூறினர். பௌத்தர்கள் கூட தங்கள் கருத்துக்கள் வேத காலத்திலேயே வேத கருத்துக்களை எதிர்த்துத் தோன்றிவிட்டன என்றனர். பிற்கால பௌத்தர்கள் தங்களுடைய புதிய கருத்துக்களைத் தத்துவ வாதிகள் ஏற்றுக் கொள்ளும்படிச் செய்வதற்காகத் தங்களுடைய தத்துவங்கள் புத்தர் எழுதி வைத்து மறைந்து போய்விட்ட நூல்களில் உள்ளவை என்றனர்.

## ஆ. வைதீக தத்துவங்கள்

இந்துத் தத்துவங்கள் என அழைக்கப்படும். தரிசனங்களில் சாங்கியம், லோகாயதம் தவிர மற்றவை அனைத்தும் தங்கள்

சிந்தனைகள் வேதங்களிலிருந்து தோன்றியவை என உரிமை கொண்டாடுகின்றன. சாங்கிய வாதிகள் வேதங்களைத் தம் முதல் நூலாகக் கொள்வதில்லை. பூதவாதிகள், சார்வாகர்கள் என்றழைக் கப்படும் லோகாயத வாதிகளும் வேதத்தின் புனிதத் தன்மையை யும், முதன்மையையும் மறுத்தனர். அவ்வாறே பௌத்தர்களும், ஜைனர்களும் வேதத்தை மறுத்தவர்கள் என்றே தம்மை அழைத்துக் கொண்டனர். ஆயினும் தங்களுடைய தத்துவ முதலாசிரியர்களான கௌதமபுத்தரும், வர்த்தமான மகாவீரரும் புதிதாக இரு தத்துவங்களை உருவாக்கினார்களென்று அவர்கள் ஒப்புக் கொள்வதில்லை. புத்தருக்கு முன் பௌத்த சிந்தனையை உலகில் பரப்பிய ''எண்ணில் கோடி புத்தர்''கள் இருந்தனர் என்றும், அவர்கள் தர்மப் பிரச்சாரம் செய்தார்கள் என்றும் பௌளத்தர்களும் ரிஷப தீர்த்தங்கரர் முதலாக மகாவீர தீர்த்தங் கரர் ஈறாக 23 தீர்த்தங்கரர்கள் பல கற்பகாலங்களாக ஜைன தத்து வத்தைப் பரப்பி வந்துள்ளார்கள் என்று ஜைனர்களும் நம்பு கின்றனர்.

## இ. வேதங்கள்

ஆனால் உண்மையில் வரலாற்று ரீதியில் நாம் அறியக் கூடிய அளவில் தத்துவக் கருத்துகளும் கருத்தமைப்புகளும், முரண் பாடுகள் மூலமாக வளர்ச்சி பெற்றுள்ளன. வேத காலம் முதல் பௌத்த ஜைனக் காலம் வரை, தத்துவக் கருத்துக்களை அளவை ரீதியாக ஆராய்ந்தால் இது தெளிவாக விளங்கும். ரிக் வேதத் தின் ஆரம்ப காலப் பகுதிகளில் பல தெய்வ நம்பிக்கை அதாவது மனிதனுடைய இனக்குழு வாழ்க்கையில் அவன் இயற்கையோடும், மக்களோடும் கொண்டிருந்த உறவுகள், அவன் அக உலகில் பல தெய்வீக சக்திகளுடன் கொண்டிருந்த உறவுகளாகப் பிரதி பலித்தது. இவ்வாறே இயற்கைப் பொருள்களும், இயற்கைச் சக்திகளும் அவனுக்குத் தெய்வங்களாகவும், தெய்வீக சக்திகளாக வும், தெய்வக் கூறுகளாகவும் தோன்றின. காற்று—வாயு தேவன்; அதன் சக்தி—அவன் மனைவி அஞ்சனாதேவி. அவள் மகன் அனுமான். பாறையையும், மரங்களையும் பிடுங்கி எறியும் அனுமான் உடல் வலிமையுள்ளவர்கள் வாயு புத்திரர்கள்—பீமன் இவ்வாறே

வருணன், சூரியன், மித்திரன் முதலிய பல தெய்வங்களை இயற்கைப் பொருட்களிலிருந்தும், சக்திகளிலிருந்தும் அவர்கள் கற்பனையால் படைத்தார்கள். அவர்கள் இத் தெய்வங்களோடு கொண்ட உறவு, வாழ்க்கையில் குழு உணர்வைப் போன்றதே. இதைக் கூட்டுச் செயல் பாடான யக்ஞம் என்றழைத்தார்கள். சிறு குழு வாழ்க்கை பெருங் குழு வாழ்க்கையாக பரிணமித்த காலத்தில் போர்த் தலைவர்கள் தோன்றினர். போர்த்தலைவர்களின் தெய்வீக அம்சமாக இந்திரன் தோன்றினன். இவன் தேவேந்திரன், விண்ணவர்கோன் என அழைக்கப்பட்டான். அவன் இடி, மின்னல்களுக்கு அதிதேவதை எனக் கருதப்பட்டான். அவனது ஆயுதம் எலும்பினால் செய்யப்பட்ட வஜ்ராயுதம். உலோக காலத்தில் இந்திரனைவிட வலிமை மிக்க உலோக ஆயுதம் கொண்ட கடவுளர்கள் கற்பனையில் படைக்கப்பட்டனர், அல்லது பழைய கடவுளர்களுக்குப் புதிய ஆயுதங்கள் வழங்கப்பட்டன. ருத்ரனும், சுப்ரமணியனும் இதற்கு உதாரணங்கள்.

### ஈ. பிரம்மம்—ஆன்மா

இனக் குழுக்கள் மறைந்து பெருங் குழுக்கள் தோன்றிய காலத்தில், பெருந் தெய்வங்களுள் ஒன்று சர்வ வல்லமையுடைய தெய்வமாகக் கருதப்பட்டது. சிவனும், திருமாலும், நமது நாட்டின் சில பகுதிகளில் தனிப் பெருந் தெய்வங்களாக வணங்கப்பட்டனர். பல தெய்வ வழிபாடு அதனின்றும் முரண்பட்ட ஒரு தெய்வ வழிபாடாக மாறியது. இதனோடே தெய்வக் கருத்தினின்றும் முரண்பட்ட, பிரம்மம் என்ற ஒரு முழுமைக் (Absotlut) கருத்தும் உருவாயிற்று. மனிதனது புற வாழ்க்கையில், உடலுக்கு முரணான உயிர், ஆன்மா என்ற கருத்துக்கள் உருவாயின. பௌத்தர்கள் இவற்றிக்கு முரண்பட்ட என்றும் நிலைப்பதான பிரம்மம், ஆன்மா போன்ற வஸ்துகளுக்கு இல்லையென்ற அனாத்மத் கொள்கை என்ற கருத்தை உருவாக்கினர். அதாவது பிரம்மம், ஆன்மா என்று நிலையானதொன்றும் இல்லை—மாறுதல் ஒன்றே நிலையானது. எந்த நிலையும் ஒரு கணத்திற்கு மேல் நிலைக்காது. நீரோடையின் ஒரு குமிழில் நாம் காணும் நீர் முந்திய நீர்க் குமிழ் அன்று; சுவாலையில் ஒரு துளியில் காண்பது முந்திய கணத்தில்

நாம் கண்ட துளியன்று. கணந்தோறும் மாறிக் கொண்டேயிருப் பது. இதற்கு க்ஷய வாதம் என்று பெயர். அவர்களோடு முரண் பட்ட பிற்கால வேதாந்திகளும், புதிய பௌத்த வாதிகளும், பிரம்ம வாதத்தை மாற்றுருவங்களில் மாற்றியமைத்தனர். பரிபூரணம், விஞ்ஞானம், சூன்யம் என்ற கருத்துக்கள் தரிசன காலத்திற்குப் பின் தோன்றின. இவற்றை முழுமையான ஒருமை வாதம் என்று கூறலாம். அதாவது அவர்கள் கூறும் ஒன்றே உள்ளது. அதாவது பிரம்மம், விஞ்ஞானம், சூன்யம், இவற்றில் ஒவ்வொன்றே உள்ள பொருள். மற்றவை இல்லாதவை. இருமைக்குப் பிரபஞ்சத்தில் இடமில்லை. வேறுபட்டுக் காணப் படும் காட்சிகள் அனைத்தும் பிரம்மத்திலிருந்தோ, சூன்யத்தி லிருந்தோ தோன்றியதுதான் என்ற ஒருமை வாதம் தோன்றியது.

## உ. ஒருமை வாதம்

இந்தியத் தத்துவத்தில் ஒருமை வாதம் உள்ளடக்கத்தில் இரு வகைப்படுகிறது. ஒன்று அகவயமானது (Sulijectivc); பிர மத்திலிருந்தே பிரபஞ்சம் பரிணமிக்கிறது. இது அகவய ஒருமை வாதம். சாங்கியத்தில் பிரதானம் அல்லது பிரகிருதியிலிருந்து பரிணமத் தோற்றத்தில் 24 தத்துவங்கள் தோன்றுகின்றன. ஆனால் அவை அனைத்திற்கும் மூலம் பிரகிருதி. இது புறவிய பொருள் முதல் ஒருமை வாதம்.

இவ்வாறு சிந்தனைகளின் முரண்பாடுகளினால் தத்துவங்கள் வளர்ச்சி பெற்றுள்ளன. ஆயினும் இந்தியத் தத்துவங்களில் மிகப்பல தங்கள் சிந்தனைகளில் வேதக் கருத்துகளிலிருந்து நேர் எதிராக முரண்பட்டிருந்த போதிலும் அவற்றிலிருந்து தாங்கள் தோன்றியதாகச் சொல்லிக் கொள்ளுகின்றன. அக் கருத்துக்கள் வேதக் கருத்துக்களின் வளர்ச்சியே எனக் கூறிக் கொள்ளுகின்றன. இது ஒரு மரபாக ஆகிவிட்டது. உதாரணமாகக் காலத்தால் பிற் பட்ட ராமானுஜரின் வசிட்டாத்வைதமும், சங்கரரது அத்து விதமும், மத்துவரது துவைதமும் வேத கருத்துக்களோடு அடிப் படைக் கூறுகளில் வேறுபட்டனவாயினும் தங்கள் சிந்தனைகள் பிரம்ம சூத்திரம், உபநிஷதங்களின் வழி வேதங்களிலிருந்து

இறுதிப் பகுதிகளின் வளர்ச்சியே எனக் கூறிக் கொண்டன. இவர்கள் மூவருமே ஒருவர், மற்ெருருவருடைய தத்துவக் கூற்றுக் களை மறுத்தெழுதும்போது தர்க்க ரீதியாக மட்டுமல்லாமல் ஆட்களையே கீழ்த்தரமாகத் தாக்கி கொள்கின்றனர். இவ்வளவு முரண்பாடுகள் கருத்துக்களில் உள்ள இம் மூன்று தத்துவங்களும் ஒரே வேதாந்தம் என்றும் மூன்றுமே உபநிஷத்திலிருந்து தோன்றியவை என்றும், பிரம்ம சூத்திரம் வேதங்களின் சாரம் என்றும், தர்க்க ரீதியான முரண்பாடுகளை மறந்துவிட்டு இம் மூன்று தத்துவங்களையும் பின்பற்றுவோர், தாங்கள் ஒரே தத்துவத்தைப் பின்பற்றுவதாகக் கூறிக் கொள்கிருர்கள். நமது நாட்டில் பழமைக்கு இருக்கும் கௌரவத்திஞல் பிற்கால கருத்துக்கள், தத்துவங்கள், சிந்தனைகள் கூட தம்மை, தம்மிட மிருந்து வேறுபட்ட வேதக் கருத்துக்கள், சிந்தனைகள், கொள்கை களோடு பிணைத்துக் கொள்ள முயலுகின்றன. இது பிற்கால தத்துவங்கள் அனைத்திற்கும் பொருந்தும். உபநிஷத கருத்துக்களை எதிர்த்துப் புதிய கருத்துக்களை முன் வைக்கிற தமிழ் நாட்டுச் சைவ சித்தாந்தம் தன்னுடைய கருத்துக்கள் புதியவை அன்று என்றும் வேதங்களிலிருந்தும், சிவாகமங்களிலிருந்தும், பாலிலிருந்து வெண்ணெய் திரட்டுவதைப்போல சைவ சிந்தாந்தத் தத்துவக் கருத்துக்கள் உருவாக்கப்பட்டன என்று கூறும் தத்துவங் களிலிருக்கும் முரண்பாடுகளை மெழுகிப் பூசுவதற்கே இவ்வாறு வேதத்தின் புராதன கௌரவம் உதவியுள்ளது. வேதாந்தத்தின் பல பிரிவுகளுக்கும் கூட அடிப்படையான தத்துவக் கூறுகளில் வேறுபாடுகளும் முரண்பாடுகளும் இருப்பினும் இவை யனைத்திற் கும் ஊற்றுக் கண்ணுக இருப்பது பிரம்ம சூத்திரம் என்று கூறி இவை யாவும் பிரம்ம சூத்திரத்தின் வெவ்வேருன விளக்கங்கள் என்று தோன்றும் படியாகக் கூறுவர். வேதத்தை மறைமுகமாக மறுக்கும் தத்துவங்கள்கூட தாங்கள் வேதத்திலிருந்து தோன்றி யவை எனப் பெருமையாகக் கூறிக் கொள்கின்றன. இந்தத் தன்மையே இந்தியத் தத்துவ உலகத்தின் ஒரு சிறப்பான தன்மை யாகும். புதுமை, புதுமை என்று கூருமல் பழைமையின் அடித் தோன்றியது என்றுக் கூறிக் கொள்வது இந்தியத் தத்துவ வாதிகளின் மரபாகும்.

# 2. இந்தியத் தத்துவங்களில் வகுப்பு முறை

## அ. சட்தரிசனங்கள் 6. அவைதிக சமயங்கள் பல

இந்தியத் தத்துவங்கள் மரபு வழியாக முற்கூறிய வழியி லேயே வேதத் தத்துவம், வேதத்திற்கு எதிரான தத்துவம் என்ற அடிப்படையில் வைதீக மதம்—அவைதீக மதம் என பண்டைக் காலத்திலிருந்தே பிரித்தறியப்பட்டன. இப் பகுப்பு முறை 3000 ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிவிட்டது. வைதீக மதங்கள் என்பவை (1) பூர்வ மிமாம்சம் (2) உத்திர மிமாம்சம் அல்லது வேதாந்தம் (3) சாங்கியம் (4) யோசம் (5) நியாயம் (6) வைசேடிகம் என்பவை. இவை சட்தரிசனங்கள் (ஆறு) எனப் பண்டைக் காலம் முதல் அழைக்கப் படுகின்றன.

வேதங்களின் முதன்மையை ஒத்துக்கொள்ளாத தத்துவங்கள் அவைதீக தத்துவங்களாகும். இவை யாவும் வைதீக தத்துவ நூல்களில் கண்டனம் செய்யப்படும். அவை (1) லோகாயதம் (2) பௌத்தம் (3) ஜைனம் (4) ஆஜீவகம் முதலியன.

இவற்றுள் மிகப்பெரும்பாலானவை உள்ளடக்கத்தில் கருத்து முதல் அம்சங்கள் கொண்டவை. லோகாயதம் முற்றிலும் மாறுனது. அது முரணற்ற பொருள் முதல் கூறுகளைக் கொண்டது. வைசேடிகமும், சாங்கியமும் ஆரம்பக்காலத்தில் பொருள் முதல் வாதத்திலிருந்து தொடங்கி, கருத்து முதல் வாதமாக மாற்றம் பெற்றன. மிமாம்சத்தின் பண்டைய பிரிவு, பூர்வ மிமாம்சம். இதுவே வேத யக்ஞங்களின் தத்துவ விளக்கம்.

இது பலதெய்வ நம்பிக்கை கொண்டது. முழு முதற்காரணமான கடவுள் என்ற ஒரு சக்தியை ஒப்புக்கொள்ளாதது. எனவே நாத்திகத் தன்மை கொண்டது. இதுவே பிற்காலத்தில் மாறி உத்திர மீமாம்சம் ஆயிற்று. முற்காலக் கருத்துக்களுக்கு நேர் முரணான தீவிரமான ஒருமை வாதமான பிற்கால அத்வைதமாக மாறியது. இத் தத்துவ வாதங்களின் வரலாற்றில் முரண்பாட்டையும் வளர்ச்சியையும் காணலாம். இவற்றின் உள் கருத்து அமைப்பில் பிற தத்துவ சிந்தனைகளின் தாக்கத்தையும் காணலாம். முரண்பாடுகளால் மாற்றமும், வளர்ச்சியும், சிதைவும் இத் தத்துவச் சிந்தனைகளில் உண்டாயின.

## ஆ. வேதங்கள்

இந்தியத் தத்துவங்கள் அனைத்தும் வேதங்களிலிருந்தோ, வேதங்களை எதிர்த்தோ தோன்றியவை என்று தம்மைத் தாமே அழைத்துக் கொள்வதால் வேதங்களின் சிந்தனை உள்ளடக்கம் என்னவென்று தெரிந்து கொள்வது அவசியமாகிறது. வேதங்கள் கி. மு. 3000-லிருந்து 1000 வரை எழுதப்பட்ட பாடல்கள் என்று வேதங்களின் காலத்தை ஆராய்ந்த இந்திய ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இப் பாடல்களை இயற்றியவர்கள் அறிவு மிக்க மகரிஷிகள், ஞானிகள் என்று அழைக்கப்பட்டனர். வேதப் பாடல்கள் ஆரம்பத்தில் எழுதப்படவில்லை. தந்தை—மகன் பரம்பரை வழியாகவோ, குரு—சிஷ்ய பரம்பரை வழியாகவோ அவை பரப்பப்பட்டன. வேதங்கள் என்ற இவ் வாய் மொழி நூல் ஆயிரக் கணக்கான செய்யுள்களையும் உரைப்பகுதிகளையும் கொண்டதாக இருந்தது. மொத்தத்தில் இவற்றை இயற்ற 2000 ஆண்டுகள் ஆயின. பிற்காலத்தில் இவை தொகுக்கப்பட்டு நான்கு தொகை நூல்களாக வாய்மொழி மூலமாகவே பரப்பப்பட்டு வந்தன. இவற்றைச் சுருதி என்றழைத்தார்கள். தொகை நூல்கள் நான்கு எழுதப்பட்டன. இவற்றில் ரிக்வேத சம்கிதையே மிகவும் பழைமையானது. அவற்றுள் மிகப் பழைமையான பாடல்கள் தமிழகத்து முல்லை நிலவாழ்க்கை போன்றதோர் கால்நடை வளர்ப்பு வாழ்க்கையைக் குறிக்கின்றன. வேதங்களை வரலாற்று ரீதியாக ஆராய்ந்தவர்கள், வேதகால

மக்கள் நாடோடியாக அலைந்து கால் நடைகளை பராமரித்து வாழ்ந்தவர்கள் என்ற முடிவிற்கு வருகிறார்கள். இந்த முடிவிற்கு வருவதற்கு அந்தப் பாடல்களை இயற்றியவர்களது, ஆசைகள், விருப்பங்கள், கண்ணோட்டங்கள்—இவற்றை அப் பாடல்களி லிருந்தே ஆய்வாளர்கள் ஆராய்ந்ததே காரணமாகும். ஆரம்பக்கால ரிக் பாடல்களில் சூட்சுமமான தத்துவச் சிந்தனைகள் எதுவுமில்லை.

இப் பாடல்களின் உள்ளடக்கத்தைச் சிறிது கவனிப்போம். சில பாடல்கள் மழையை வரவேற்றுப் பாடுகின்றன. மழை பெய்ய வேண்டுமென்ற ஆசையை வெளியிட்டுப் பாடுகின்றன. தானியம் நன்கு விளைந்து மகசூல் காணவேண்டும் என்ற ஆசையை வெளியிடும் பாடல்கள் மிகப்பல. கால்நடைகள் செழிக்க வேண்டும்—உணவு தடையின்றி கிடைக்கவேண்டும். இயற்கை யாலும் வனவிலங்குகளாலும் ஏற்படும் ஆபத்துக்கள் தவிர்க்கப் பட வேண்டும் தாம் ஈடுபடும் போர்களில் வெற்றிபெற வேண்டும்—இது போன்ற ஆசைகளை வெளிப்படுத்தும் பாடல்கள் ஏராளம் உள்ளன. இவற்றுள் தத்துவக் கருத்து எதுவும் இல்லை. ஆனால் இப் பாடல்களின் தொன்மை பிற்கால இந்தியரிடையே இவற்றிற்கு மரியாதையை ஏற்படுத்தின. தற்காலத்திலும் கூட கால்நடை வளர்த்து வாழும் இனக்குழுக்கள் நம் நாட்டில் உள்ளன. உதாரணமாக நீலகிரித் தோடர்களைக் கூறலாம். அவர்கள் தற்கால கால்நடை வளர்ப்பு இனக்குழு மக்கள். அவர்களுடைய வாய்மொழி இலக்கியங்களை டபிள்யூ. ரிவர்ஸ், எம். பி. எமனோ என்ற இரு மானிடவியல், மொழியியல் ஆய்வாளர்கள் சேகரித்து ஆய்ந் துள்ளார்கள். எமனோ அவர்களுடைய நாட்டுப்பாடல் தொகுப்பை ஒரு நூலாக வெளியிட்டுள்ளார். எருமை வளர்ப்பு வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட தோடர்களது நாட்டுப் பாடல்களை வேதத்தின் துவக்க கால பாடல்களோடு ஒப்பிட்டால் இவ் விரண் டிற்கும் பல கூறுகளில் ஒற்றுமை இருப்பதைக் காணலாம். இத் தோடர் மக்களுடைய எண்ணங்கள், கருத்துக்கள், ஆர்வங்கள் எல்லாம் வேதகால கவிஞர்களுடைய உணர்வுகளை ஒத்திருப்பதைக் காணலாம்.

தேவர்கள், வேத கால ரிஷிகளுடைய நண்பர்களே. தெய்வங் களைப் போல வழிபாட்டுக் குரியவர்களல்ல. முன்னர் குறிப்பிட்ட

இயற்கைப் பொருள்கள், இயற்கை சக்திகளைத் தவிர வேறு சில சாதாரணப் பொருள்களே தேவர்களாகக் கருதப்பட்டுள்ளன. அவற்றில் சில குன்றுகள், மூலிகைகள், காடு, மரம், வில், அம்பு போன்றவை. சில தேவர்கள் இளவேனில் முதலிய காலங்களாகவும், அவர்களின் ஆசைகளின் கற்பனை உருவங்களாகவும் உள்ளன. கருவீழ்தல், கெட்ட கனவுகள், க்ஷயரோகம் முதலியவை நடவாமல் தடுக்கும் தேவர்களும் உள்ளனர். ஒரு வேடிக்கையான தேவனைப் பற்றி ரிக்வேதம் முற்பகுதியில் 157-வது பாடலில் அகஸ்தியர் பாடுகிறார். அந்த தேவர் யாருமல்ல; உணவுதான். அதை 'பிது' என்று அகஸ்தியர் அழைக்கிறார். அப் பாடலின் மொழி பெயர்ப்பு வருமாறு.

*பிதுவே! உன்னைப் போற்றுகிறேன்.*
*வாழவைப்பவனே! வலிமையுடையவனே!*
*உன்னுடைய சக்தியால்தான் திருதன்*
*விருத்திரனை சித்திரவதை செய்து*
*வலிமையை அழித்தான்.*
*மணமிக்க பிதுவே!*
*தேனைப் போன்ற இனிய பிதுவே!*
*உன்னை நாங்கள் வரவேற்கிறோம்.*
*எங்களைப் பாதுகாப்பவனாக நீ இருப்பாயாக!*

பிது—வேதக் கடவுளர்களில் முக்கியமானவன் அல்லன். ஆயினும் வேத மக்களின் தெய்வம் பற்றிய கருத்தை விளக்கவே இதை உதாரணமாகக் குறிப்பிட்டேன். இயற்கை சக்திகளில் வலிமை மிக்கதான, மழை, தீ, காற்று இவை தேவர்களாக்கப் பட்டன. அக்கினி, இந்திரன் இவை வேத ரிஷிகளது பிரதான தெய்வங்கள். இயற்கை சக்திகளது மனித உருவப் படிமங்களே இவை என்பதில் ஐயமில்லை.

இப் பழைய பாடல்கள் பயன்பாட்டுச் சடங்காச்சாரங்களில் உச்சரிப்பதற்காகத்தான் இயற்றப்பட்டன என்பது தெளிவு. இவை யக்ஞங்களின்போது அதாவது கூட்டுச் சடங்குகளின் போது கூட்டுப் பாடல்களாகப் பாடப்பட்டன. ஆயினும் பிற்கால

இந்துத் தத்துவ வாதிகள் வேதங்களிலிருந்து தங்கள் தத்துவக் கருத்துக்களுக்கு ஆதாரம் தேடினார்கள்.

யக்ஞங்கள் நடக்கும்போது இப் பாடல்கள் பாடப்பட்டன என்று குறிப்பிட்டோம். யக்ஞங்கள், சடங்காசார பலிகள். பலி உயிர்ப்பலியாகவும் இருக்கலாம். இப் பலிகள் பயன்தர,மந்திரங்கள் போல் வேதப் பாடல்கள் பாடப்பட்டன. இவற்றை அனுசரணை மந்திரச் செயல்கள் (Sympathetic magical rites) என்றும் கூறலாம். இப் பாடல்கள் மூலம், மழை பெய்யும், நல்ல விளைச்சல் கிடைக்கும், செல்வம் பெறலாம் என்று இப் பாடல்களை இயற்றியவர்களும், பாடியவர்களும் நம்பினார்கள். இதை சமயம் (religion) என்று சொல்வதா அல்லது மந்திரம் (magic) என்று சொல்வதா? மந்திரத்திற்கும் சமயத்திற்கும் உள்ள வேறு பாட்டைப் புகழ்பெற்ற மானிடவியல் அறிஞர் கார்டன் சைல்டு விளக்குகிறார்.

''உலகம் இயற்கைக்கு அதீதமான ஒரு சக்தியினால் கட்டுப் படுத்தப்படுகிறது. அந்தச் சக்தியைப் பலிகளினாலும்,பிரார்த்தனை களினாலும் வசப்படுத்தலாம். அந்தச் சக்தியை நம்பிக்கையால் உணரலாம். இந்த நம்பிக்கையின் அடிப்படையில் எழுகின்ற உபநம்பிக்கைகளும், செயல்களும். பழக்கங்களும் கொண்ட ஓரிணைப்பே சமயம் ஆகும்''.

## இ. மந்திரம்—வழிபாடு

''மந்திரம் என்பது ஒரு மாயையை நாம் உண்டாக்கி, அதனால் இயற்கையை நாம் கட்டுப் படுத்துவதாக எண்ணி அவ்வாறு கட்டுப்படுத்துவதன் மூலம் உண்மையாகவே இயற்கையைக் கட்டுப்படுத்துவதாக நம்புவதாகும்''.

இவ் விரண்டையும்—உதாரணங்களால் தருவோம். காவிரிப் பூம்பட்டினத்தில் இந்திரனைப் பூஜித்து, நகரையழிக்க வந்த பூதத்தைத் தடுக்க சோழ மன்னர்கள் பலிகொடுத்தது சமய வழி பாடாகும். வங்காளத்தில் மழை வருவிக்க ஒரு சடங்கு உண்டு. இது மந்திரத்திற்கு உதாரணம். ஒரு மரத்திலிருந்து ஒரு நீர் நிரப்பிய

பானையைக் கட்டித் தொங்கவிட்டு—அதனடியில் ஒரு சாணி உருண்டையை வைப்பார்கள். கிராமத்திலிருக்கும் கன்னிப் பெண்கள், வருணனைப் பிரார்த்தித்துக் குச்சிகளால் பானையினடியில் துவாரமிடுவார்கள். பானைநீர் ஒழுகி சாணி உருண்டையை அடித்துச் செல்லும். இப்படி மழைபோன்ற மாயையை ஏற்படுத்தி இந்த மாயையையே மழை பின்பற்றும் என்பது இச் சடங்கின் நம்பிக்கை. இங்கே மனிதன் இயற்கைச் செயலைப் போன்ற ஒன்றை தான் செய்து, தன்னை இயற்கை பின்பற்றும் என நம்புகிறான். இது மந்திரம். ஆனால் சமய வழிபாட்டில், இயற்கை தன்னைவிட அதிக சக்தியுடையதென்றும், அதைப் பணிந்து வேண்டியும், பலிகொடுத்தும் செயல்படச் செய்ய வேண்டும் என்றும் மனிதன் நம்புகிறான்.

இந்த இரண்டு அக நிகழ்ச்சிகளையும் வேதத்தில் நாம் காண்கிறோம். ஆரம்ப காலத்தில் யக்ஞங்களுக்குரிய மந்திரங்களில் மந்திர சிந்தனைகளையே (magical) காண்கிறோம். பிற்பகுதியில் அக்னி, வருணன், இந்திரன்—இவர்களுக்குரிய புகழ்ச்சிப் பாடல்களைக் காணுகிறோம். இதற்குமப்பால் சிவன் என்ற முழுமுதற் கடவுள் எழுச்சி பெறுகிறார். பழைய சடங்காசார மந்திரங்கள் அனைத்தும் யஜுர் வேதத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. பழைய வேண்டுகோள்களும், பிரார்த்தனைகளும் காயத்திரிகளில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

வேதங்களின் கருத்து உள்ளடக்கத்தைச் சற்று விரிவாகவே கண்டோம். அது தான் என்ன?

1. மந்திர உச்சாடனங்கள்.

2. யாக, யக்ஞங்களின்போது உச்சரிக்கும் மந்திரங்கள். இதன் நோக்கம் உலக நன்மைகளைப் பெறுவதே.

3. மகிழ்ச்சியான வாழ்க்கை விருப்பம்.

4. மந்திர நம்பிக்கை ஒன்றைக் கொடுத்து ஒன்றைப் பெறுவது புறவாழ்க்கையில் பண்ட மாற்றின் அகவாழ்க்கைப் பிரதிபலிப்பு.

## ஈ பிற்கால வேதப்பாடல்கள்—தத்துவத் துவக்கம் வேதாந்தம்

இனி பிற்கால வேதப் பாடல்களின் உள்ளடக்கத்திற்கு வருவோம். இவற்றில் தத்துவ சிந்தனை சிறிது சிறிதாகத் தோன்றத் தொடங்குகிறது. ஒரு உலகக் கண்ணோட்டம் படிப் படியாக எழுகிறது. பிற்கால வேதப் பாடல்கள் **பிராம்மணங்கள்** என்றும் **ஆரண்யகங்கள்** என்றும் வகைப்படுத்தப் பட்டுள்ளன. இவை இரண்டிற்கும் பின் இயற்றப்பட்டவை **உபநிஷதங்கள்.** இவற்றில் காணப்படும் சிந்தனை உள்ளடக்கத்தை வேதாந்தம் என அழைகின்றனர். இவை வேதத்தின் முடிவான பகுதியாக இருப்பதால், இதை வேதாந்தம் என அழைக்கின்றனர். ஆரண் யகங்களில் தத்துவச் சிந்தனை துளிக்கத் தொடங்கி விடுகிறது. இது முதிர்ச்சி அடைவது உபநிஷதங்களில். ஆரம்பத்தில் தோன்றிய முன்னிலைப் பொருள்முதல் வாதம் (Proto Materia- lism) பல கடவுள் உண்மை வாதத்தால் மறுக்கப் பட்டு, பின் அதுவே முழுமையான ஒரு தெய்வ வாதத்தால் மறுக்கப்படுகிறது. சிந்தனையில் பெரிய மாறுதல் ஏற்பட வாழ்க்கையில் என்ன மாறுதல் ஏற்பட்டிருக்க வேண்டும்?

இந் நூல்கள் எழுகிற காலத்தில் இனக்குழுக் கூட்டுவாழ்க்கை அழிந்து அரசுகள் தோன்றி விட்டன. ஆரண்யகங்களிலும் உபநிஷதங்களிலும் பல அரசுகள், அரசர்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. சில உபநிஷதங்களின் ஆசிரியர்கள் அரசர்களே. இச் சமுதாயத்தின் ஆளும் வர்க்கங்களாகப் பிராம் மணரும் அரசர்களுடன் இணைந்து கொள்ளுகிறார்கள். வருணாசிரமம் தெளிவாகத் தோன்றிவிட்டது. இச் சமுதாயத்தில் சூத்திரர் உழைப்பே செல்வத்திற்கு அடிப்படையாகிவிட்டது. ஆளும் வர்க்கத்தினர் உடலுழைப்பிலிருந்து **விடுதலை** பெற்றனர். அவர்கள் தங்கள் அறிவுத் திறனை வளர்த்தனர். இந்தச் சமுதாய அமைப்பில் தங்களுடைய நிலையைப் பாதுகாத்துக் கொள்ளு வதற்காக உலகக்கண்ணோட்டங்களை உருவாக்கினர். உழைப்பினால் மாற்றப்படும் இயற்கையோடு தொடர்புடைய புறவாழ்க்கையை அவர்கள் புறக்கணித்தனர். பிரபஞ்சம் அனைத்தும் பிரம்மம்

எனும் ஒரே பொருளிலிருந்து உண்டானவை என்று கூறினர். அவர்களது அகவுணர்வு, அவர்களது புறச்சூழல்களினால் உருவாக்கப் பெற்றது.

பண்டைக் கால வேத மக்கள் இனக்குழுக் கூட்டு வாழ்க்கை வாழ்ந்தனர். கூட்டு உழைப்பே அவர்களது உடனடி வாழ்க்கை. அவர்களது அன்றாட வாழ்க்கை பொருளாயத (material) வாழ்க்கையே. தங்களது உற்பத்திக் கருவிகளை விருத்தி செய்து கொள்ள அவர்கள் விரும்பினர். தங்கள் கருவிகளை விருத்தி செய்து கொள்ள அந்தச் சக்தி துணை செய்யுமென்று தேடிப் பார்த்தனர். இதனால்தான் அவர்களது எண்ணங்கள் காடு, தீ, பஞ்சம், நோய், சந்தானம், பூமியின் செழிப்பு, கால்நடை அபிவிருத்தி போன்ற புற வாழ்க்கைச் சாதனங்கள் குறித்தே சுற்றிச் சுழன்றது. யாகங்கள் போன்ற மந்திர சடங்காசாரங்கள் மூலம் இதனைச் செய்ய முயன்றனர். இந் நோக்கத்தோடு கூட்டு ஆடல், பாடல் நிகழ்த்தினர். ஆரம்பக் கால வேதப் பாடல்கள் இனக்குழு மனிதனுடைய வாழ்க்கையின் மதிப்புகளையும் இனக் குழுவோடு தனிமனிதன் கொண்டிருந்த கூட்டுழைப்பு எனும் உறவையும், அச் சமுதாயத்தில் உற்பத்திச் சாதனங்கள் பொது வுடைமையாக இருந்ததையும் புலப்படுத்துகின்றன.

வேதக் காலத்திற்குப் பின் இனக் குழு வாழ்க்கை முற்றிலும் மாறிவிட்டது. மாறிய வாழ்க்கை புதிய சிந்தனைகளைத் தோற்றுவித்து விட்டது. இப் புதிய சிந்தனை மதிப்புகள் ஒரு புதிய சிந்தனை அமைப்பைத் தோற்று வித்தன. ஒரு புதிய சமுதாய அடிப்படையின் மீது ஒரு புதிய சமுதாய அமைப்பு, மேற்கோப்பாக எழுந்தது. இரண்டு காரணங்களால் பழைய சமுதாய அடித்தளம் அழிக்கப்பட்டது. கூட்டு வாழ்க்கைச் சமுதாயத்தின் உள்ளிருந்தும், அச் சமுதாயத்திற்கு வெளியே வளர்ந்த புறச் சூழல்களாலும் அது அழிக்கப்பட்டது. அதாவது, சூத்திரர் உழைப்பு என்ற நிலைமை அச் சமுதாயத் திற்கு உள்ளேயும், வெளியிலும் தோன்றி கூட்டுழைப்பை யும், கூட்டுடைமையையும் அழித்து விட்டது. சூத்திரர்

உழைப்பால் தோன்றிய உபரிசெல்வத்தை ஆளும் வர்க்கத்தினர் கைப்பற்றிக்கொள்ளக் கூடிய சமுதாய அமைப்பும், அரசும், நிறுவனங்களும் தோன்றிவிட்டன. இவ் வரசு உழைக்கும் வர்க்கத்தை அடக்கியாளும் கருவியாகப் பயன்பட்டது. வன்முறை யால் மட்டுமன்றி கருத்துக்களினாலும் இந்த வர்க்கச் சமுதாயத் தைப் பாதுகாக்கத் தத்துவச் சிந்தனைகளை உருவாக்கியது. சமுதாய அமைப்பில் ஏற்பட்ட புரட்சிகர மாறுதல்கள், சிந்தனையிலும் அத்தகையதோர் மாறுதலை ஏற்படுத்தியது. பழைய கருத்து மதிப்புகள் புதியவற்றிற்கு இடம் தந்து விலகின. உயர்ந்தது தாழ்ந்தது; தாழ்ந்தது உயர்ந்தது : முன்பு அறிவெனக் கருதப்பட்டது இப்பொழுது அறியாமையெனக் கருதப்பட்டது. அறிவைப்பற்றியே ஒரு புதிய கருத்து உதித்தது.

## உ. புதிய அறிவு—உபநிஷதம்

யஜுர் வேதத்தில் மந்திரங்களே பெரிதும் இடம் பெறு கின்றன. ஆயினும் பிராம்மணங்களில் கூறப்படும் தத்துவக் கருத்துக்களின் துவக்கப்பொறிகள் இந்நூலில் தலைகாட்டுகின்றன. பிராம்மணங்கள் யஜுர் வேதத்தை மந்திர நூலாகவே கருது கிறது. பெரிடேல் கீத், ''பிராம்மணத் தத்துவத்தில், பலிகளுக்கு மந்திர சக்தியுண்டு என்பது ஒப்புக் கொள்ளப்படுகிறது. மந்திரங் கள் எந்த நோக்கத்திற்காக உச்சரிக்கப்படுகின்றனவோ, அந் நோக்கங்களை நிறைவேற்றும் சக்தி அதற்கு உண்டென பிராம் மணங்கள் கூறுகின்றன. இவற்றைப் பெற மந்திரங்களுக்குச் சுதந்திரமான சக்தியுண்டு'' என்பார்.

பிராம்மணங்களுக்குப் பின் அவற்றின் வளர்ச்சியான ஆரண்யகங்கள் எழுந்தன. இவ் விரண்டு தொகை நூல்களும் புதிய தத்துவ ஒளியைச் சிதறின. ஆரண்யகங்களின் இறுதிப் பகுதிதான் உபநிஷதங்கள். இச் சொல்லுக்கு ரகசிய ஞானம் என்பது பொருள். உபநிஷதங்கள் தோன்றிய காலத்தில் அறிவாளிகள், இப் புதிய ரகசிய ஞானத்தைப் பெறப் பெரிதும் விரும்பினர். இப் புதிய ஞானத்தின் கவர்ச்சியை வளர்க்க உபநிஷதங்களிலேயே பல கதைகள் கூறப்பட்டுள்ளன.

ஒரு செல்வன் இந்த ஞானத்தைப் பெற ரைக்குவன் என்னும் ரிஷிக்கு 1000 பசுக்களையும், ஒரு தங்கச் சங்கிலியையும், தனது மகளையும் கொடுப்பதாக வாக்களித்தான். பல அரசர்கள் ஏராள மான கிராமங்களை இந்த ஞானத்தைக் கற்பிப்பவர்களுக்குத் தானமாக அளித்தார்கள்.

ரிஷிகளில் சிறந்தவரான நாரதர், இந்த ஞானத்தைக் கற்றுக் கொள்ளஉலகமெல்லாம் அலைந்து, அந்த ஞானத்தைப் பெற்றிருந்த சனத் குமாரரிடம் சென்று, பேசிய கதை உபநிஷதங்களிலேயே காணப்படுகிறது. நாரதர் சனத் குமாரரிடம் சென்று புதிய ஞானம் பற்றிக் கேட்டு அதனைத் தமக்குக் கற்பிக்குமாறு வேண்டிக் கொண்டார். சனத் குமாரர், தம்மிடம் மாணவனாக வந்துள்ள நாரதரின் அறிவைச் சோதிக்க விரும்பி, அவர் கற்றுள்ள கலைகள் எவையென்று கேட்டார்.

நாரதர் நான்கு வேதங்கள், இசை, நடனம், குதிரை நூல், ஆயுள் நூல், ரத்தின பரீட்சை, பயிர் வளர்ப்பு, ஆயுதக்கலைகள், ஓவியம், வான நூல், அர்த்த சாஸ்திரம், நியாய நூல், தர்க்கம் முதலியனவற்றையெல்லாம் கற்றிருப்பதாகச் சொன்னார். அக் காலத்து உலகாயத நூல்களனைத்தும் இதில் அடங்கும். நாரதரின் கல்வியின் பரப்பு நமக்குப் பிரமிப்பை உண்டாக்குகிறது. ஆனால் அது சனத் குமாரருக்குப் பிரமிப்பை உண்டாக்கவில்லை. அவருக்கு இது பழைய அறிவாகவும், பயனற்றதாகவும் தோன் கிறது. அவர் பலதுறைகளில் நாரதர் பெற்றிருக்கும் அறிவையும், அத் துறைகளில் பெற்ற கல்வியையும் பயனற்றது என்று கூறுகிறார். இவையெல்லாம் பெயர்கள் மட்டுமேயன்றி பொருளுடையனவல்ல என்று சொல்லுகிறார். "நாம ஏவ"— பெயர்மாத்திரம் என்று சொல்லுகிறார்.

### ஊ. புதிய அறிவு—பிரம்மஞானம்.

நாரதர் அதற்குமேல் அவருடைய புதிய அறிவு பற்றிக் கேட்கிறார்.

புலன்களா? புலனறிவா, மனமா, சித்தமா, புத்தியா, என்று ஒவ்வொன்ருக அறிவோடு சம்பந்தப்பட்டதையெல்லாம் கேட்கிருர்.

ஆனல் இவர் அவையெல்லாம் இல்லையென்று கூறுகிருர். இவையெல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டது. பிரம்மஞானம் என்று சொல்லுகிருர். பிரம்மம் என்ருல் என்ன? என்று நாரதர் கேட்கிருர்.

''பிரம்மத்தை விளக்க முடியாது. பிரமத்தை அறியமுடியாது. அறிபவனும், அறியப்படுவதும் அதுவே. துவிதம் அதில் இல்லை. அதுகுணமற்றது. நிர்க்குணம். அதுவே நீ. நீயே அது. அதுவன்றி வேறில்லை''. என்ருர் சனத்குமாரர்.

நாரதருக்கு என்ன புரிந்ததோ! ஆயினும் இக் கதையால், நாரதர் பெற்றிருந்த உலகாயத அறிவு, பழமையாகிப்போய் விட்டது என்பதும், புதிய அறிவு ஒன்று தோன்றி, அறிவாளிகளைக் கவர்ந்து வந்ததென்பதும் விலங்குகிறது. இதனைப் பிராம்மணர்களும், அரசர்களும் போட்டி போட்டுக் கொண்டு கற்றனர். இக் கருத்தைப் பரப்ப நூல்கள் இயற்றியவர்களும், கற்பித்தவர்களும், பிராம்மணர்களும் அரசர்களும் ஆவார்கள்.

முன்பு உலகம் பற்றிய அறிவே முற்கால வேதங்களின் அறிவாக இருந்தது. நாரதருடைய அறிவு அதுதான். அது புதிய அறிவு தோன்றிய பின் பயனற்ற, பெயர்கள் மாத்திரமாகவும் கருதப்பட்டது.

பழைய அறிவு தர்மகாண்டமெனவும், புதிய அறிவு ஞானகாண்டமெனவும் அழைக்கப்பட்டது. அறிவு இரண்டாகப் பிளவுபட்டு, ஞானகாண்டம், ஆளும் வர்க்கத்தினரால் மேன்மையாகப் போற்றப்பட்டது. பழைய அறிவு புற உலகில் மனித உறவுகளின் அகப் பிரதிபலிப்பு. அது மனித உழைப்பையும் செயல்பாட்டையும் ஏற்றுக் கொண்டது. உலக உண்மையை ஒத்துக் கொண்டது. உலகில் மனிதன் இன்பமாக வாழத் தேவையான அறிவு அது. அது வாழ்க்கை உவப்பு உணர்வாக இருந்தது.

இதனை முன் நிலைப் பொருள் முதல் வாதம் எனக் கூறலாம். இது கூட்டு உழைப்பு, கூட்டு உடைமை என்ற சமூக அடித்தளத்தில் எழுந்த கருத்து மேற்கோப்பு.

இச் சமூக அடித்தளம், வர்க்கப் பிரிவினையால், சூத்திரர் உழைப்பு, கூட்டு உழைப்பை ஒழித்துவிட்டதால், முற்றிலும் மாறி, வர்க்கச் சமுதாய அடித்தளமாக அமைந்து விட்டது. மேற் கோப்பு அதற்கேற்ப பிளவுபட்டு மாறியது. புதிதாகத் தோன்றிய ஆளும் வர்க்கம் புதிய உலகக் கண்ணோட்டத்தை உருவாக்கியது. அதன் சமூக இருப்பிற்கு (Social being) ஏற்ற, சமூக உணர்வை அது தத்துவமாகப் படைத்தது. இது பிரம்மம், ஆன்மா என்ற கருத்தமைப்பைப் படைத்தது. முன்பிருந்த கருத்தமைப்புகளுக்கெல்லாம் இது வேறானதென வாதித்தது.

சூட்சுமமான ஒரு கருத்தை (Abstract idea) இது பரிபூரண மானதாக மிகைப்படுத்தியது (absloute action of an abstract idea).

தமது உள்ளுணர்வை (conscouisness) அவர்கள் ஆன்மா என்றனர். பழைய சக்திவாய்ந்த உண்மையான கூட்டு வாழ்க்கை யின் கூட்டுச் சமூக உணர்வை, ஆன்மீகவயமாக்கி, அதையே முழுமுதலாகக் கருதி, அதனை அதன் இருப்பிலிருந்து பிரித்துப் பரிபூரணமாக்கிப் "பிரம்மம்" என்ற கருத்தாக்கினார்கள். இக் கருத் தொன்றுதான் இருப்பது, பிரபஞ்சம் அதன் பரிணாமம் அல்லது தோற்றம் என்றனர். இந்த அகவயக் கருத்தின் அடிப்படையில் ஆன்மாவுக்கும், பிரம்மத்திற்கும் உறவுகளைச் சிந்தித்தனர். இவை யிரண்டும் ஒன்றென்பதே "அஹம் பிரம்மாஸ்மி", "தத்வமஸி" என்ற மூலமந்திரங்களின் உட்பொருளாகும்.

இக் காலத்தில் சிந்தனை, மந்திரம், யக்ஞம் முதலிய விலங்குகளிலிருந்து பகுதி விடுதலை (partial release) பெற்றது. ஆயினும் மந்திர நம்பிக்கையை, உபநிஷத தத்துவம் முற்றிலும் நிராகரித்து விடவில்லை. பல உபநிஷதங்கள் யக்ஞங்களைப் பற்றி மரியாதையுடன் பேசுகின்றன. அது பழைய அறிவென்றும்

கர்மகாண்டமென்றும் கூறி, அதை முற்றிலும் கண்டித்துவிடாமல் தங்களது புதிய அறிவிக்கு ஞானகாண்டமெனப் பெயரிட்டு, அதுவே உயர்ந்தது என்று கூறினர்.

இவ்வளவு பெருமையடைந்து விட்ட இப் புதிய அறிவுதான் என்ன? அதன் உள்ளடக்கம் யாது? அது பிராம்மணர்களாலும் அரசர்களாலும் மிக உயர்வாக மதிக்கப்பட்டது ஏன்?

### எ. தத்துவப் பிரச்சினைகள்

உபநிஷதங்கள், வேதங்களில் காணப்படும் யக்ஞச் **செயல்கள்** மந்திரங்கள் முதலியவைபற்றிய விவாதங்களிலிருந்து தத்துவப் பிரச்சினைகளுக்குக் கவனத்தைத் திருப்புகிறது. **உபநிஷதங்கள்** கீழ்வரும் பிரச்சினைகளில் கவனம் செலுத்துகிறது.

இப் பிரபஞ்சத்திற்குக் காரணம் என்ன?

பிரபஞ்சத்தின் அடிப்படை மூலம் எது?

அதனை நாம் எப்படி அறிகிறோம்?

சடங்காசாரங்களும் விவாதிக்கப்படுகின்றன என்றாலும் முக்கியமான கவனம் ஞானத்தைப் பற்றியே இருக்கிறது. **புதிய ஞானத்தின் உள்ளடக்கம் தத்துவ சிந்தனையாக ஆகிவிட்டது.**

உபநிஷதங்களில் 13 முக்கியமானவை. தருக்க ரீதியான இசைவு எல்லாக் கருத்துக்களிலும் காணமுடியாவிட்டாலும், ஓர் **ஒருமை இணைப்பு** (monism) அவையனைத்திலும் பொதுவாக இருக்கிறது.

''ஆன்மாவைத்தான் நாம் காணவேண்டும். அதனைத்தான் கேட்கவேண்டும். அதனைத்தான் சிந்திக்கவேண்டும். அதனைக் கண்டு, அதனைக் கேட்டு, அதனைச் சிந்தித்தால்—**அனைத்தையும்** அறியலாம்''—யாக்ஞவல்கியர்.

நமது உணர்வு பற்றிய அறிவு (ஆன்மா) உலகம் (புறச்சூழல்) பற்றிய அறிவைவிட நாமம்படுத்திக் கூறப்பட்டுள்ளது. நாரதரிடம் சனத்குமாரர் உலக அறிவை ''நாம ஏவ'', என்று குறிப்பிட்

டார் என்று முன்னரே கண்டோம். சனத் குமாரர், நாரதர் கற்ற வேதங்கள், இதிகாசங்கள், இலக்கணம், யக்ஞ—ஞானம், கணிதம், ஜோசியம், வானநூல், ஆட்சிநூல், பாம்பு வசியம், சிற்பம், அஸ்ராலஜி முதலிய உலகாயத அறிவுத்துறைகளெல்லாம் வெறும் பெயர்கள் என்று கூறிவிட்டு, உண்மையான ஞானம் எது வென்று விளக்குகிறார்.

'தான்' என்பது பற்றிய அறிவே மெய்யான ஞானம். இந்தத் 'தான்' அல்லது ஞானம், எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது. அது மேலும் உள்ளது, கீழும் உள்ளது. மேற்கிலும் உள்ளது, கிழக்கிலும் உள்ளது. தெற்கிலும் உள்ளது, வடக்கிலும் உள்ளது. தானே இவ் வுலகம். 'தானே' உலகம் (தான் என்பது ஆன்மா என்ற கருத்தைக் குறிக்கும்).

ஆன்மவித்தை, பிரம்மவித்தை (Conscious reasoning) ஆகிய தத்துவ ஞானத்தில் தானறி தருக்கச் சிந்தனை எதுவுமில்லை. உலகாயத அறிவுத்துறைகள் அனைத்தையும் பிரம்மஞானம் கீழ்த் தரமான அறிவு என்று ஒதுக்குகிறது. உலக உண்மையையும், புறவயவாழ்க்கையையும் அது மறுக்கிறது. இயற்கையை அறிவதையும், அதன் இயக்க நியதிகளின் மீது வெற்றிகொள்ளுவதையும் அது தடுக்கிறது.

"ஆன்மா, எதிர்மறையாகவே அறியப்படுகிறது, அது உடல் இல்லை; மனம் இல்லை; இவ்வுலக மில்லை; நம் புலன்களால் அறியப்படும் எதுவும் ஆன்மாவில்லை; அதற்கு அழிவில்லை; அது தவிர வேறெதுவும் இல்லை. ஒன்று தவிர, இரண்டு இல்லை; ஆன்மா தான் அறிபவன்; அறிபவனை அறியமுடியாது."

ஆன்மாவும், பிரம்மாவும் ஒன்றென்று சில உபநிஷதங்கள் கூறுகின்றன. ஆன்மாவே படைப்புச் சக்தி. வேறுபாடுகள் கனவில் தோன்றும் காட்சிகள்போல் வெறும் தோற்றங்களே.

மேற்குறிப்பிட்ட 13 உபநிஷதங்கள் வெவ்வேறு கருத்துக்களை முன்வைக்கின்றன. இவற்றுள் அடிப்படைப் பொருள்களைப் பற்றியே முரண்பட்ட கருத்துக்கள் உண்டு. பிரம்மவாதிகள்

கி. மு. 2-ம் நூற்றாண்டில் முரண்பட்ட கருத்துக்களைச் சீராக்கி முரண்பாடுகளைப் போக்க முயன்றனர். இம் முயற்சியின் விளைவே பிரம்ம சூத்திரம் என்னும் வேதாந்த சூத்திரம்.

அதன் பின்னர் ஆன்மா, பிரம்மா ஆகிய கருத்துக்களின் வளர்ச்சியாகப் புதிய கருத்துக்களைக் கூறியவர்கள் அவற்றைப் புதிய தத்துவச் சிந்தனைகளாகக் கூறாமல், வேதாந்த சூத்திரத்தின் உரைகள் என்று, பழைய நூலின் பின் மறைந்து கொண்டு உரைகாரர்கள் என்று மாறுவேடம் தரித்துக் கொண்டார்கள். தாங்கள் பிரம்மசூத்திரத்தின் மறை பொருளைத் தெளிவாக்குவதற்காக விளக்கம் எழுதுவதாகக் கூறிக்கொண்டார்கள். இவர்களுள் காலத்தால் முந்தியவர் **பாதராயனர்**. அவருக்குப்பின் தோன்றியவர்கள் சங்கரர், ராமானுஜர், மாத்வர் முதலியவர்கள்.

இவர்கள் தங்களுக்குள்ளே பகைவர்களைப்போல போரிட்டுக் கொண்டார்கள். பிற்கால ஆன்மீக வாதிகளிடம் சங்கரர் பெருஞ்செல்வாக்குப் பெற்றுள்ளார். சங்கரருடைய அத்வைதம், அகவய கருத்துமுதல் வாதத்தில் தீவிரமானதாகும். அது ஆரண்யகம், உபநிஷதம், பிரம்மசூத்திரம் முதலிய நூல்களின் ஆன்மீக, பிரம்மவாத, ஒருமை வாதச் சிந்தனையை (monism) திறம்பட வளர்த்து ஒரு கருத்து முதல்வாத சிந்தனையாக உருவாக்கியுள்ளது.

முற்றிலும் வளர்ச்சியடைந்த அத்துவிதத்தின் முக்கியமான தத்துவக் கூறுகள் எவை?

## ஏ. எது அறிவு

புலன்களால் அறியப்படும் அறிவு மாயை (Illusion) தோற்றம் (appearance) உண்மையற்றது. சுத்த அறிவு ஆன்ம ஒளியாகும். இருமையை (Dvality)—உடல், உள்ளம், அகம், புறம் என்ற இருமைகள் அழிந்தால் சுத்த அறிவு துலங்கும். அதாவது ஆன்மா பிரம்மத்தோடு ஒன்றும்போது சுத்த அறிவு ஒளிவிடும். பிரம்மம் அறிய முடியாதது. துவிதம் (இரட்டை இயல்பு) அதன் தன்மையன்று. அதனை கனவற்ற உறக்கத்தோடு சங்கரர் ஒப்பிடுவதுண்டு. கனவு

நிகழ்ச்சியின்போது புலன் உறுப்புகள் செயலற்றிருக்கின்றன. ஆன்மா, உருவங்களைப் புறத்தோற்றங்களாகப படைகின்றன. இதுபோன்றே பிரம்மம் பிரபஞ்சத்தை உருவெளித் தோற்றங் களாகப் படைக்கின்றன. விழிப்புநிலையில் ஆன்மா கைதிபோல் சிறைப்பட்டிருக்கிறது. கனவு நிலையில் புலன்களாகிய சிறைச் சுவர்களின் அடைப்பு இல்லாமல் அது **பகுதி விடுதலை** (Partial freedom) பெற்றிருக்கிறது. கனவும் இல்லாத நிலையில் ஆன்மா முற்றிலும் விடுதலை பெற்றிருக்கிறது.

மரணத்தில் ஆன்மா எல்லா பந்தங்களிலிருந்தும் விடுதலை பெறுகிறது. உயிருள்ளபோதே ஆன்மா உடலோடு உள்ள பந்தங்களை விலக்கிக் கொண்டால் மரணத்தில் ஆன்மா இருப் பதைப் போலவே விடுதலை பெறமுடியும். இக் கருத்தை ஜீவன் முக்தி என்பர். இதற்கு நேர்மாறான கருத்தைச் சார்வாகர்கள் முன் வைத்தார்கள். உடலின் ஒரு செயல்தான் உணர்வு என்று அவர்கள் கூறினார்கள். உடலில்லாமல் உணர்வு இல்லை என்று அவர்கள் நிரூபித்தார்கள். ஆனால் அத்வைதவாதிகள் உடலையும் உணர்வையும் பிரித்து உணர்வு மட்டும்தான் உண்மையானது என வாதித்து அதனையே ஆன்மா என்றும் பிரம்மம் என்றும் மிகைப்படுத்தினார்கள். அவர்கள் உணர்வையே பிரபஞ்சத்தைப் படைப்பது என்று கூறினார்கள். உடலின் செயலான உணர்வை உடலைப் படைப்பதாகக் கருதினார்கள். இதை நிலைநாட்டுவதற்குப் புறவியல், அறிவியல் துறைகள் அனைத்தையும் அவர்கள் கண்டனம் செய்தார்கள். பிரம்மசூத்திர காலத்திற்கும் சங்கர ருடைய காலத்திற்கும் இடையில் பகவத்கீதையில் கடவுள்வாத சிந்தனை முக்கியத்துவம் பெறுகிறது. பிரபஞ்சம் அனைத்திற்கும ஆதிமூலம் அல்லது முழுமுதலாக ஒரு சக்தி கருதப்படுகிறது. அதுவே படைத்து காத்து அழிக்கும் சக்தி என நம்பப்பட்டது. இந்த முழுமுதலே உபநிஷத, பிரம்மசூத்திர பிரம்மத்தோடு இணைக்கப்பட்டு ஆன்மாவிற்கும் இம் முழுமுதலுக்கும் உள்ள தொடர்புகள் கருத்துவழியாக உருவாக்கப்பட்டன. பகவத் கீதையின் இந்த மத்தியக் கருத்து ஆறுதரிசனங்களில், நியாயத் திலிருந்து பெறப்பட்டதாகும்.

# 3. இந்திய ஆன்மீக வாதத்தின் மூலங்கள்

## அ ஆளும் வர்க்கத்தின்—முரண்பாடும்-ஒற்றுமையும்

சனத் குமாரர், அவருக்கு முன் அறிவென்று கருதப்பட்ட எல்லாவகையான மரபுவழி அறிவுத்துறைகளையும் வெறும் பெயர்கள் என்று அழைத்தார் என்று முன்னர் கூறினேம். அவரும் அவரைப்போன்ற பிரம்மவாதிகளும் பிரம்மம் அல்லது ஆன்மாவைப்பற்றிய அறிவையே உயர்நிலை அறிவென்று கருதினர்கள். தங்கள் காலத்திற்கு முன்பு அறிவெனக் கருதப்பட்டதையெல்லாம் கீழ்நிலை அறிவென்று கண்டனம் செய்தார்கள். இச் சிந்தனை மாற்றத்திற்குக் காரணம் என்ன?

கிரேக்க நாட்டில் சமூக உழைப்பிலிருந்து ஓர் அறிவாளிப் பிரிவினர் விடுதலை பெற்ற பின்னரே தத்துவத்தில் ஆன்மீக வாதம் எழுச்சி பெற்றது. இதுவே பிளேட்டோவின் காலம். இக் காலத்தில் சமூக உற்பத்தியில் அடிமை வர்க்கம் மட்டுமே ஈடுபட்டிருந்தது. இந்த வர்க்கப் பிரிவினையால் மூளை உழைப்பும் உடலுழைப்பும் பிரிந்துவிட்டன. செயலும் சிந்தனையும் பிரிந்தன. சிந்தனை உயர்வு பெற்றது. கருத்திலிருந்துதான் பொருள் பிறக்கிறது என்ற கண்ணேட்டம் வளர்ந்தது. இதுபோலவே தான் இந்தியாவிலும் நான்கு வருணப் பிரிவு ஏற்பட்டபோது சமுதாய உற்பத்திக்குக் காரணமான அமைப்பு, சூத்திரர்களிட மிருந்தது. க்ஷத்திரியர் ஆளும் வர்க்கமாயினர். பிராம்மணர்கள் அவர்களது ஆதரவில் வாழ்ந்தனர். சில சமயங்களில் இவர்கள் ஒன்று பட்டும் வேறு சமயங்களில் முரண்பட்டும் செயல்பட்டுக்

கின்றனர். ஆயினும் தங்கள் வர்க்க நலன்களுக்காக இவர்கள் பெரிதும் சமரசம் செய்து கொண்டே செயல்பட்டிருக்கின்றனர். பிரகத் ஆரண்ய உபநிஷத்தில் இவ் வுண்மை உருவகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

"உலகம் தோன்றிய காலத்தில் பிரம்மம் மட்டுமே இருந்தது. அதாவது அதுவே உலகமாயிருந்தது. அது தன்னைவிட மேன்மையான உருவத்தில் க்ஷத்திரிய தன்மையைப் படைத்தது." இந்த வாக்கியத்திற்குச் சான்றாக ராஜசூய யாகங்களில் பிராம்மணன் க்ஷத்திரியன் உட்காரும் ஆசனத்தைவிட தாழ்ந்த ஆசனத்தில் அமருவதைக் காட்டலாம். அரசர் மேன்மையடைந்தாலும் அவன் பிராம்மணத்துவத்தையே சார்ந்திருக்க வேண்டும். இது ஒரே வர்க்கத்தினுள் போர்வீரனும் அறிவாளியும் தம்மிடையே செய்துகொண்ட சமரசம் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. இந்த வர்க்கம் சமுதாய உழைப்பில் ஈடுபட்டிருந்த சூத்திரரையும் சண்டாளரையும் நாய்களோடும் பன்றிகளோடும் சமமாக நினைத்து இழிவாகக் கருதியது.

வேத காலத்து ஜாதிகள் சமூக உற்பத்தியோடு எவ்வித தொடர்பு கொண்டிருந்தன? இதற்குப் பிரம்மசூத்திரத் தொகுப்பாசிரியர் பௌதாயனர் கருத்தையே விடையாகக் கூறலாம்— "வேதங்களும் உழவுத் தொழிலும் ஒன்றையொன்று அழிக்கும் விரோதபாவம் கொண்டவை."

இதுபோன்றே மனு கூறுகிறார்—"வறுமைக் காலத்தில் பிராம்மணனும் க்ஷத்திரியனும் வைசியனுடைய வாணிகத் தொழிலைச் செய்யலாம். ஆனால் அடிமைகளின் தொழிலான உழவுத் தொழிலை அவர்கள், ஒருபோதும் செய்யக் கூடாது"— இவ்வாறு உயர் வருணத்தார், வாணிபம் செய்வதை ஆபத்—தர்மம் என்று மனு கூறுவார். இவ்வாறு உற்பத்திக்கான உழைப்பில் ஈடுபடுவது, பிராமண, ஷத்திரிய ஜாதிகளுக்குத் தடை செய்யப்பட்டுள்ளது. இத்தகைய கருத்தும் ஜாதி, ஒழுக்க விதிகளும் ரிக் வேத காலத்தில் காணப்படவில்லை. ரிக்வேதப் பாடல்களில் பல கூட்டுழைப்பைப் பெரிதும் புகழ்ந்து பேசுகின்றன. யக்ஞம் என்பது

குழு உறுப்பினர்கள் அனைவரும் கூட்டாக ஈடுபடும் கூட்டுச் சடங்காசாரமாகும். ரிக்வேத ஸ்மிருதிகள் கூட்டு உழைப்பி லிருந்து விலகியவை அல்ல. அவர்களது சடங்காசார செயல் கள் அனைத்தும் உலக நலன்களைக் கருதியே செய்யப்பட்டன வாகும். உலகத்திலிருந்து விடுதலை பெறும் நோக்கம் அல்லது உடல் பந்தங்களிலிருந்து விடுதலை பெறும் நோக்கம், அதாவது துறவு இலட்சியம் ரிக்வேத காலத்தில் இல்லை. பிற்காலத்தில் அவற்றைத் துறப்பதே மனிதனது மிக உயர்ந்த குறிக்கோளான மோட்சம் எனக் கருதினர். ரிக்வேத காலத்தில் வர்க்கச் சமுதாயம் தோன்றி விடவில்லை.

உற்பத்தி சக்திகளும், உபரிச் செல்வம் கிடைக்கும் அளவிற்கு வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. உபரிச் செல்வத்தின் தோற்றத்தினுல் தான் வர்க்கங்கள், வர்க்கப் பிரிவினைகள் தோன்றுகிறன. அவ்வாறு தோன்றி உபரிச் செல்வத்தைக் கைப்பற்றிக் கொள்ளுகிற வர்க்கம் உற்பத்திமுறையிலிருந்து தனித்து உழைப்பின்றியே உபரிச் செல்வத்தினுல் வாழக்கூடிய நிலைமை ஏற்படும்போது அதன் புற நிலை மாற்றத்தால் சிந்தனைகளும் மாறுகின்றன. சமுதாய அடிப்படைகள் மாறியதும், சமுதாய உறவுகளும் மாறுகின்றன. இவ் வுறவுகளில் பங்கு கொள்ளும் வர்க்கங்களில் ஆதிக்கம் பெற்ற ஆளும் வர்க்கம் தனது வர்க்க உணர்வை, சமூதாயத்தின் சமூதாய உணர்வாக மாற்ற முயற்சி செய்கிறது. அது தன்னை வலுப்புறுத்திக் கொள்ளும் போது புற நிலை உண்மையை மறைத்து ஆன்மீக வாதத்தை உருவாக்கி வலுப்படுத்துகிறது.

## ஆ. சமுதாய வளர்ச்சியும் ஆன்மீக வளர்ச்சியும்

இவ்வாறு தோன்றி வளர்ச்சி பெற்ற ஆன்மீக வாதம், கூட்டு வாழ்க்கையில் தோன்றி, கூட்டுச் சமுதாயத்தை இணைத்து வைப்பதற்குக் காரணமாக இருந்த கருத்துகளும் சிந்தனைகளும் இப்போது மறுக்கப்பட்டன. யக்ஞ சடங்காசாரங்களும், அவற்றை ந்யாயப் படுத்தும் சிந்தனைகளும் ஆன்மீக வாதத்தில் எதிர்ப்புக் குள்ளாயின. இவற்றை முற்றிலும் ஒழிக்க முடியாது. ஏனெனில் இவை உழைப்பை ஊக்குவிக்கின்றன. உழைப்பின்றி சமுதாயம்

வாழமுடியாது. உழைக்காதவர் ஆதிக்கம் செலுத்தும் சமுதாயத்தில் அடிமைப்பட்டவர்கள் உழைப்பில் ஈடுபடவேண்டும். ஆளுவோர்களுடைய செயல் உழைப்பைச் செயல் படுத்துவது, அடிமைப்பட்டவர்கள் உடலால் உழைக்கிறார்கள். இவர்கள் உள்ளத்தால் உழைக்கிறார்கள். எனவே இவ் விரு தொழில்களில் ஞானம் உயர்வானதாகவும், தர்மம் தாழ்வானதாகவும் கருதப் பட்டது. தர்மம் உழைப்போடு தொடர்புடையது. ஞானம் அறிவோடு தொடர்பு உடையது. ஆன்மீக வாதிகள் இக் கருத்தை வலியுறுத்தினர். ஆனால் பழைய சடங்காசார வாதிகள், புரோகிதர்கள் இந்த ஆன்மீக வாதத்தையே எதிர்த்தனர். இவர்கள் மீமாம்சர்கள். இவர்கள் இயற்கைத் தெய்வங்களையும் கூட்டுச் சடங்காசாரங்களையும் ஆதரித்தனர். ஒரு கடவுள் என்ற கொள்கையையோ, பிரம்மம் ஒன்றே உண்மை என்ற கருத்துமுதல் ஒருமை வாதத்தையோ ஏற்றுக் கொள்ளவில்லை. இவர்கள் வர்க்கச் சமுதாயம் வலுப்பெற்ற பின்னர் பண்டையக் கூட்டுச் சமுதாய மரபுகளுக்குத் திரும்ப முயன்றனர்.இது ஒரு பின்னோக்குச் சிந்தனை. ஆயினும் கூட இவர்கள் கருத்து முதல் வாதத்தை எதிர்ப்பதில் **நாத்திக வாதத்தை** வளர்த்தனர். இந்த ஆன்மீக வாதத்திற்குப் பழைய தத்துவச் சிந்தனைப் போக்கு களிலிருந்து சிலவற்றிக்கு வந்தனர்.

## இ. சுபாவ வாதம்

வேதங்களிலேயே சுபாவ வாதம் என்றதொரு சிந்தனைப் போக்குக் காணப்படுகிறது. அது பொருள்களின் இயல்பினாலேயே மாற்றங்களும் இயக்கமும் நிகழ்கிறது என்று கருதுகிறது. அப்படியானால் மாற்றங்களுக்கும் இயக்கங்களுக்கும் அவற்றின் வேறானதொரு சக்தி தேவையில்லை என்றாகிறது. இதனால் மாற்றங் களுக்கும் இயக்கத்திற்கும் இயற்கைக்கு அப்பாலான சக்தியோ எல்லா சக்திக்கும் அடிப்படையான ஒரு முழு முதல் தெய்வமோ அல்லது பிரம்மமோ அவசியமில்லை என்று ஆகிறது. சுபாவ வாதிகள் ஆன்மீக வாதத்தை எதிர்க்கும் தர்க்க ரீதியான பல சிந்தனைகளை இந்தியத் தத்துவத்திற்கு அளித்தார்கள். முரணற்ற

பொருள் முதல் வாதத்தைப் பண்டைய இந்தியத் தத்துவத்திற்கு அளித்த லோகாயத வாதிகள் முரணின்றி எதிர்த்தார்கள். சடங்காசாரச் சிந்தனைகளான மிமாம்சத்தையும் எதிர்த்தார்கள்.

இவர்களது பொருள் முதல் வாதக் கூறுகள் பற்றி பின்னர் விரிவாகக் காண்போம். உலகத்திலுள்ள பொருள்களை விரிவாக ஆய்வதைக் கொள்கையாகக் கொண்ட வைசேடிகர்களும் ஆன்மீக வாதத்தை எதிர்த்தார்கள். பூர்வ சாங்கியர்களும் இயற்கை பரிணமக் கொள்கையினடிப்படையில் ஆன்மீக வாதக் கொள்கைகளை எதிர்த்தார்கள். இவ் வான்மீக வாதக்கொள்கைகளை எதிர்த்த மிமாம்சர், வைசேடிகர், லோகாயதர் ஆகியோரின் தத்துவக் கூறுகளைப் பற்றிச் சுருக்கமாக அறிந்து கொள்வோம்.

# 4. மீமாம்சம்-நாத்திக வாதம்

மீமாம்சத்தின் ஸ்தாபகர் ஜைமினி எனும் அறிஞர். தமிழ் நாட்டு நக்கீரர், ஔவையார் என்ற புலவர்கள் பலகாலங்களில் பலர் இருந்ததைப்போன்று பல ஜைமினி முனிவர்கள் வாழ்ந்திருக்கிருர்கள். இது ஒரு கோத்திரப் பெயராக இருக்கலாம். மீமாம்ச சூத்திரம் என்னும் முதல் மீமாம்ச நூலை எழுதியவர் ஜைமினி என்றழைக்கப்படுகிருர். அவர் தமக்கு முன் வாழ்ந்த பல தத்துவ ஞானிகளை மேற்கோள் காட்டுகிருர். இந் நூலின் முதல் உரை நூல் சபர சூத்திரம் என்பது. இதை எழுதியவர் சபரர். அவருக்குப் பின் குமரிலபட்டர், பிரபாகரர் என்ற இருபெரும் தத்துவ ஆசிரியர்கள் வாழ்ந்தனர். இவர்களுடைய தத்துவங்களைச் சங்கரர் எதிர்த்து வாதாடினர். சைவ சித்தாந்தத்தில் பரபக்க மறுப்பில் மீமாம்சத்தைப் பற்றி மறுப்புரை கூறும்போது பிரபாகர மதம் என்றே மீமாம்சம் அழைக்கப்படுகிறது. மீமாம்சம் அகவய ஆன்மீக வாதத்திற்கு அதாவது சங்கரருடைய அத்வைதத்திற்கு அடிப்படையில் மாறுபட்டது.

மீமாம்சத்தில் பிற்காலத்தில் வேறுபாடுகள் தோன்றி இரு தனிப்பிரிவுகள் தோன்றின. அதில் ஒன்று பட்டர் மீமாம்சம் என்றும் மற்ருென்றும் பிரபாகர மீமாம்சம் என்றும் அழைக்கப்படும். இவை இரண்டிற்கும் பொதுவானது கடவுள் மறுப்புக் கொள்கையாகும். அறிஞர் ராதாகிருஷ்ணன் மீமாம்சத்தின் நாத்திகக் கொள்கை பற்றிப் பின்வருமாறு கூறுகிருர். "இந்தத் தத்துவத்தில் கடவுளுக்கு இடமில்லை. பூர்வகால மீமாம்சத்தில் இந்தப் பலவீனமான துளையின் வழியாகப் பிற்காலத்தில் கடவுள்

நுழைத்து விடப்பட்டார். கடவுள் இல்லாத மிமாம்ச தத்துவம் பூர்வ மிமாம்சம் என அழைக்கப்படும்.''

மிமாம்ச சூத்திரத்திற்கு முதலில் உரை எழுதிய சபரர் **நாத்திகர்**. அவர் கடவுளுண்மையை வன்மையாக மறுத்தார். "புலனுணர்வு மூலமாகக் கடவுளை அறிய முடியவில்லை. மற்றெல்லா அறிவு மூலங்களும் புலனுணர்வை அடிப்படையாய்க் கொண்டவை. எனவே எந்த அறிவு மூலமாகவும் கடவுளை அறிய முடியவில்லை. எந்த அறிவுச் சாதனத்தாலும் அறியமுடியாத ஒன்று இருக்கிறது என்று எப்படி முடிவு சொல்ல முடியும்?'' என்றார் சபரர். குமரிலரும் **நாத்திகரே**. அவர் கடவுள் உண்டென்று வாதிக்கும் நியாய வைசேடிக சித்தாந்தங்களை எதிர்த்து வாதாட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நியாய வைசேடிகங்கள் கடவுள் உண்டென்று விவாதிக்க விரிவான நிருபணங்களை உருவாக்கி இருந்தன. குமரிலரும் பிரபாகரரும் கடவுள் நம்பிக்கையை எதிர்த்து விரிவான வாதங்களை உருவாக்கினர். இதற்கு ஓர் உதாரணம் தருவோம். நியாய வைசேடிகர்கள் கடவுள் உண்டென்று கீழ்வருமாறு விவாதித்தார்கள்.

"பாண்டம் இருந்தால் அதைச் செய்த குயவன் இருக்க வேண்டும். குயவன் அறிவுடைய படைப்பாளி. இதுபோலவே பிரபஞ்சம் இருப்பதால் அதற்கு ஒரு படைப்பாளியும் இருக்க வேண்டும். அவன் பரிபூரண ஞானமும் எல்லா இடங்களிலும் நீக்கமற வசிப்பவனுமாக இருத்தல் வேண்டும். இப் பிரபஞ்சத்தை அவன் அணுக்களாய்ப் படைத்து யுகாந்தரங்களில் அழிக்கிறான்.''

பிரபஞ்சப் படைப்பு, பிரபஞ்ச அழிப்புப் பற்றிய இக் கொள்கையை மிமாம்சர்கள் எதித்தார்கள். அவர்கள் வாதம் வருமாறு:

"ஒவ்வொரு பொருளுக்கும் ஆரம்பமும் முடிவும் உண்டு. உதாரணமாக நீ கூறும் பாண்டத்தை எடுத்துக் கொள்வோம். இதனால் பிரபஞ்சம் படைக்கப்பட்டது என்பதோ அல்லது இது அழிக்கப்படும் என்பதோ நிரூபணமாகிவிடவில்லை. புதிதாக

உருவாவதும், இருப்பதும், அழிவதுமான ஒரு தொடர்ந்த செயல் முறைதான் பிரபஞ்சத்தில் காணப்படுகிறது. தனித்தனிப் பொருள்களைப் பொறுத்தவரை நம்மால் அறியப்படுவதற்கு மேல் அவற்றைப் பற்றிக் கற்பனை செய்து கொள்ள வேண்டிய தில்லை. உன்னைப் பெற்றவர்கள் உனது தாயும் தந்தையும். நீ பிறக்க ஒரு கடவுளை கற்பனை செய்துகொள்ளவேண்டியதில்லை.''

கடவுள் கொள்கை தவிர நியாய வைசேடிகமும், மிமாம்சமும் கர்மம் பற்றிய கொள்கையிலும் வேறுபட்டன. நியாய வைசேடிகக் கூற்று வருமாறு: ''நற்செயல்கள், தீச்செயல்களால் புண்ணியமும், பாவமும் முறையே உண்டாகின்றன. இவற்றின் தொகுதி அதிர்ஷ்டம் எனப்படும். இது விளைவுகளைத் தோற்றுவிக்கும். ஆனால் அதிர்ஷ்டம் அறிவற்றது. அது தன்னைத்தான் வழிநடத்திக் கொள்ளாது. எனவே அதை வழிநடத்த அறிபவன் ஒருவன் வேண்டும். எண்ணற்ற ஆன்மாக்களின் அதிர்ஷ்டத்தை வழிநடத்தி யியக்குபவன் எங்கும் வசிப்பவனுகவும் எல்லாம் அறிந்தவனுகவு மிருக்க வேண்டும். ஆதலால் பிரபஞ்சத்தில் ஈஸ்வரனுக்கு அவசியம் ஏற்படுகிறது.''

கர்மவினைகள் என்ற கொள்கையில் அதிர்ஷ்டம் என்ற கருத்தை உருவாக்கி அதை இயக்குவதற்கு ஒரு ஈஸ்வரனை நியாய வைசேடிகர்கள் கற்பித்தார்கள். இந்த வாதத்திற்குப் பிரபாகரர் பின் வருமாறு விடையளித்தார்: ''1. நீங்கள் சொல்லுகிற அதிர்ஷ்டம் அறியமுடியாதது என்று சொல்லுகிறீர்கள். அப்படியானுல் உங்களுடைய கடவுளுக்கு அறிவு இருக்கமுடியாது. கடவுளுக்குஅதுபற்றி அறிவு இருக்கும் என்று நீங்கள் கூறினுல்,அவருக்கு மனம் என்ற ஒன்றும் இருக்கிறது என ஒப்புக் கொள்ளுகிறீர்களா? மனம், உடலோடு சேர்ந்துதான் இருக்கும். கடவுளுக்கு உடல் இருப்பதாக நீங்கள் ஒப்புக் கொள்ளவில்லை. 2. அதிர்ஷ்டத்தை கடவுள் அறியமுடியும் என்று வைத்துக் கொள்வோம். அறிந்தாலும் அதை மேற்பார்வை செய்ய அவரால் முடியாது. அவ்வாறு செய்ய வேண்டுமானுல் கடவுளுக்கும் அதிர்ஷ்டத்திற்கும் ஏதாவதொரு தொடர்பு இருக்க வேண்டும். தொடர்பு என்பது

பொருள்களுக்கிடையில்தான் இருக்க முடியும். அதிர்ஷ்டம் ஒரு குணம். இது ஆன்மாவின் குணம். இந்த குணம் கடவுளோடு எப்படித் தொடர்பு கொள்ளமுமுயும்?''

குமரிலர் தெய்வம் உண்டு என்ற கொள்கையைக் கேலி செய்தார். ''உடலில் இல்லாத ஆன்மா—எதையும் படைக்க முடியாது. பிரபஞ்சத்தைப் படைக்க உடல் வேண்டும். தன் னுடலைத் தானே படைத்துக்கொள்ள முடியாது. அப்படியானால் கடவுளின் உடலைப் படைக்க இன்னொரு படைப்பாளி தேவை.'' இப்படியே முடிவின்றி கூறலாம்...

''ஒரு முட்டாள்கூட நோக்கமில்லாமல் எதையும் செய்ய மாட்டான். துன்பமும் துயரமும் நிறைந்த இந்த உலகில் சர்வ சக்தியும் பெருங்கருணையும் உடைய கடவுள் என்ன நோக்கத்திற் காகப் பிரபஞ்சத்தைப் படைத்திருக்க முடியும்? நோக்கமில்லை அது அவன் திருவிளையாடல் என்றால் கடவுள் சிறுபிள்ளையா? பைத்தியக்காரனா?''

குமரிலர் உலகப் படைப்புப் பற்றிய வேதாந்தக் கொள்கை யையும் மறுத்தார். ''வேதாந்தத்தின் கொள்கைப்படி பிரம்மம் என்னும் தூய உணர்வுதான் இறுதி உண்மையாகும். படைப்புக்குக் காரணம் மாயை. மாயை, கனவு போல் உண்மை யில்லாதது. அப்படியானால் அது எதனைப் படைக்க முடியும். பிரம்மம் மாயையைப் படைக்க முடியாது. ஏனெனில் பிரம்மம் தூய்மையானது; தொடர்பற்றது; விளைவற்றது; கிரியை யில்லாதது''. மேற்கூறியவற்றிலிருந்து ஆன்மீக வாதம், பிரம்மவாதம் கடவுளுண்மை வாதம், அதிர்ஷ்டவாதம் முதலிய கருத்து முதல் வாதக் கருத்துக்களை மிமாம்சர்கள் எதிர்த்தார்கள் என்றும் அதற்காகத் தர்க்க ரீதியாக விரிவான விவாதங்களைப் படைத்தார்களெனவும் கண்டோம்.

### அ. மிமாம்ச நாத்திகம்—காரணம்

இவர்கள், தனிப்பெரும் கடவுள் அல்லது முழுமுதற் கடவுள் எனும் கருத்தை ஏன் எதிர்த்தார்கள்? அவர்களுடைய நோக்கம்

பழைய வேத காலத்து யக்ஞங்களைப் புதுப்பிப்பதும், யக்ஞங்களின் தெய்வங்களை மீண்டும் வழிபடுவதும் ஆகும். மாறிய சூழலில் யக்ஞங்களையும் தெய்வங்களையும் பற்றி அவர்கள் திருத்தியமைத்த விளக்கத்தைக் கூறினார்கள். யக்ஞங்களுக்கும் தேவர்களுக்கும் என்ன தொடர்பு? இக்கேள்விக்குப் பூர்வ மிமாம்சர்கள் அளித்த பதில் வருமாறு: ''வேதங்கள் சடங்காசாரக்கட்டளைகளே! சடங்காசாரங்கள் நடைபெறும்போது தேவர்கள் வழிபடப்படுவதில்லை. தேவர்களுக்கு வஸ்துவான உருவங்களில்லை. அவர்கள் பலிகளை ஏற்றுக் கொள்ளவோ அவற்றால் மகிழ்ச்சியடையவோ முடியாது. அவர்கள் நமது விருப்பங்களை நமக்கு அளிக்க முடியாது. பின் தேவர்கள் என்பவர்கள் யார்?— அவர்கள் யக்ஞங்களுக்கு அவசியமான **பெயர்களும், ஒலிகளும்** மாத்திரமே! மந்திரங்களையே தேவர்கள் என்கிறோம்.''

வேத காலத்து மாபெரும் தெய்வங்களான இந்திரனும் அக்கினியும் பூர்வ மிமாம்சரின் கருத்தில் வெறும் ஒலியாகவும் காற்றாகவும் போய்விட்டனர். இவர்களின் கருத்துப்படி சடங்காசாரங்களுக்கே சொந்த சக்தி இருக்கிறது. அவை தமது சுய விதிகளின் படியே பலன்களைத் தருகின்றன. யக்ஞம் என்ற பொருளுக்குச் சபரர் கூறும் பொருள் இன்றைய மானிடவியல் அறிஞர்கள் கூறும் மந்திரம் (magic) என்ற சொல்லுக்குக் கூறும் பொருளாகவே காணப்படுகிறது.

இனக்குழு மந்திரவாதிக்கு (magician, shaman) தனது மந்திரவாதச் செயல்களையும், அர்த்தங்களையும் விளக்க அவசியமில்லை. அவர்கள் செயலை விளக்க ஒரு கொள்கை (theory) அவசியமில்லை. தத்துவ வளர்ச்சி பெற்ற சூழ்நிலையில் மிமாம்சர்களுக்குத் தங்களது சடங்காசாரச் செயல்களையும், நம்பிக்கைகளையும் கொள்கை மூலம் விளக்க வேண்டியது அவசியமாயிற்று. இதனால்-தான் வேதகாலத்தில் இயல்பாக இருந்த நம்பிக்கைகள், பிரம்மம், கடவுளுண்மை, கர்மம், ஒருமை முதலிய கருத்துக்கள் வளர்ந்து விட்ட சூழலில் சமுதாய அடிப்படை அற்ற, அழிந்து போய் விட்ட பண்டைய சமுதாயத்தின் மேற்கோப்பு நம்பிக்கைகளை நிலைநிறுத்த வேண்டிய முரண்பாட்டில் அவர்கள் சிக்கிக் கொண்டார்கள்.

# 5. சாங்கியம்-(ஜடபரிணாம வாதம்)

பிற்கால இந்தியத் தத்துவங்கள் அனைத்திலும் புகுந்து கொண்டு தனது முற்கால சிந்தனை உள்ளடக்கத்தை இழந்துவிட்ட அவைதீக தத்துவம் சாங்கியமாகும். இதனை அத்வைதியான எனது முதல் எதிரி, ''பிரதானமல்லா'' என்று அழைக்கிறார். கருத்துமுதல்வாதிகளில் எல்லா சித்தாந்திகளும் இதன் தத்துவக் கூறுகளை மறுப்பதில் முக்கிய கவனம் செலுத்துகிறார்கள். ஆயினும்கூட இதன் உள்ளடக்கத்தில் சில கூறுகளைப் பல பிற்கால கருத்து முதல் வாத தத்துவங்கள் தமது உள்ளடக்கத்தில் ஏற்றுக் கொண்டுள்ளன. எனவே இத் தத்துவச் சிந்தனையின் வரலாற்றை ஆழ்ந்து கவனிப்பது அவசியமாகும்.

தமிழகத்துத் தத்துவ நூல்களில் பௌத்த நூல்கள், சைன நூல்கள், வைதீக நூல்கள் அனைத்தும் சாங்கியத்தை மறுத்துரைக்கின்றன. எனவே கருத்து முதல்வாதிகள் தங்கள் கருத்துக்கு முரண்பட்ட கருத்துக்கள் சாங்கியத்தில் இருப்பதாகக் கருதினார்கள் என்பது தெளிவாகிறது. சாங்கியத்தைப் பற்றி முற்கால சாங்கியர்களும், பிற்கால சாங்கியர்களும், சாங்கிய எதிரிகளும் எழுதிய பல நூல்கள் கிடைக்கின்றன. எனவே இதன் வரலாற்றை அறிவது அவ்வளவு கடினமாக இல்லை.

இந்தத் தத்துவத்தின் முதலாசிரியர் கபில முனி என்றழைக்கப்படுகிறார். சாங்கியக் காரிகை எனும் சாங்கியத் தத்துவ நூல் இவரால் எழுதப்பட்டதென கருதப்பட்டது. ஆனால் சம்ஸ்கிருத மொழியியல் ஆராய்ச்சி, வளர்ச்சி பெற்றபின் இந் நூல் மிகப் பிற்

பட்ட காலத்தது என்றும், யாரோ எழுதி மிகமுற்பட்ட காலத்தில் வாழ்ந்த கபிலர் தலையில் சுமத்தியது என்றும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந் நூலை எழுதியவர் ஈஸ்வரகிருஷ்ணர் எனும் பிற்கால சாங்கியர். அவர் இந் நூலின் மூலநூல் மிகவும் பழைமையானது எனக் கூறுகிறார். சாங்கியத் தத்துவம் மிகவும் பழைமையானதெனினும் சாங்கியக் காரிகை எனும் நூல் அத்துணை பழைமையானதன்று. புகழ்வாய்ந்த ஆயுள் வேதியரான சாரகர் தமது ஆயுள் வேத நூலில் சாங்கியத் தத்துவத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார். ஆனால் சாங்கியக் காரிகையை அவர் அறிந்ததாகத் தோன்றவில்லை. சாங்கியத் தத்துவத்தை மகாபாரதத்திலிருந்து மேற்கோள் காட்டியே அவர் குறிப்பிடுகிறார். விஞ்ஞான பிட்சு என்னும் பிற்கால சாங்கியர் காலம், பூர்வ சாங்கியத்தை விழுங்கிவிட்டதால் தான் சாங்கியத் தத்துவம் முழுதையும் தாம் திருப்பி எழுதியதாகச் சொல்லுகிறார். அதைத் தாமே மூல நூலாய்ச் செய்யாமல் சாங்கியச் சூத்திரத்தின் உரையில் மறைந்துபோன சாங்கியத்தைச் சீர்திருத்திப்புதுப்பிக்கப் போவதாகக் கூறுகிறார். ஆனால் விஞ்ஞான பிட்சு செய்ததெல்லாம் **பூர்வ சாங்கியத்தை உபநிஷதக் கருத்துக்களின் வழியே உருமாற்றியதே யாகும்**. சாங்கியத்தின் பூரண நிலையை அறிவதற்கு அவரது உரை பயன்படாது. பூர்வ சாங்கியம் நாத்திகக் கொள்கையுடையது என்பது சாரகரது மேற்கோள்களால் விளங்குகிறது.

### அ. சாங்கியத்தின் நல்வரங்கள்

சாங்கியம், இந்தியத் தத்துவத்திற்கு மூன்று முக்கிய நன்கொடைகள் வழங்கியுள்ளது. 1. பரிணாம சிந்தனை 2. அணுக் கொள்கை 3. அறிதல் கொள்கை

இக் கூறுகள் பல மரபு வழிப்பட்ட தத்துவங்களால் தமது உள்ளடக்கத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டன. முழுமுதல் கடவுள் கொள்கை தோன்றுகிற காலத்திற்கு முன்பேயே சாங்கியத்தின் முக்கியமான தத்துவக் கூறுகள் வழங்கிவந்துள்ளன. இவற்றைச் சாரகருடைய சாரகச் சூத்திரம் எனும் நூலிலிருந்தும், பௌத்த நூல்களிலிருந்தும் அறியலாம். இந் நூல்கள் கி. பி.

முதல், இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவை. ஆனால் ஈஸ்வர கிருஷ்ணரின் புரட்சி நூல், (fabrication) 5-ம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

முற்காலச் சாங்கியம் அல்லது பூர்வசாங்கியத்தின் பிரதான கூறுகளைக் காண்போம். அவர்களுடைய தத்துவத்தின் முக்கியமான கூறு **பரிணாம வாதம்** ஆகும். இவ் வாதம் உலகின் முதல் காரணம் எது என்ற கேள்விக்கு அவர்களுடைய விளக்கமாகும். இக் கேள்விக்கு வேதாந்திகள் பிரம்மம் என்று பதிலளித்தார்கள். நியாய வைசேடிகர்கள் ஈஸ்வரன் என்றார்கள். சாங்கியர்கள் கடவுளை நிராகரித்தார்கள். கனவு நிலை, கனவுக்கு அப்பாற்பட்ட நிலை என்று மூழ்கி அவர்கள் இக் கேள்விக்கு விடைதர முயலவில்லை. தர்க்க ரீதியான பதிலை அளிக்க முயன்றார்கள். காரண, காரியத் தொடர்பு என்ன என்ற கேள்வியைத் தங்கள் தத்துவத்தின் தொடக்கமாகக் கொண்டனர். இக் கேள்விக்குத் தர்க்க முறையில் விடை காண முயன்றார்கள். காரியம் என்பது காரணத்தின் மாற்றம். உலக விவகாரங்களிலிருந்து இதனை ஆராய்ந்தார்கள். காரியம் என்பது காரணத்திலிருந்து முற்றிலும் விலகியதானால் அதாவது காரணத்திலேயே காரியத்தின் முன்னிலை இல்லாமல் நடக்க முடியுமானால் எதுவேண்டுமானாலும் எதிலிருந்தும் தோன்றலாம். ஏன்? அரிசியிலிருந்து கோதுமை கூடத் தோன்றலாம். தோன்றுவதற்கு முன் காரணமில்லாது இருந்தால் எதுவுமே தோன்ற முடியாது. எனவே ஒரே பொருளின் மறை நிலையும் வெளிநிலையுமான இரு அம்சங்கள்தாம் காரண காரியங்கள் (Implicit and Explicit states).

உலகம், அடிப்படையில் பொருள்வயப் பட்டது. அப்படியானால் அதில் நடைபெறும் மாறுதல்கள், மூலப்பொருளின் மாற்றங்களே ஆகும். இம் மூலப் பொருளை அவர்கள் பிரகிருதி அல்லது பிரதானம் என்றனர். சைவசித்தாந்திகள் சாங்கியரின் இக் கருத்தைப் **பகுதி** என்றழைத்தார்கள். மூல நிலையில் பிரகிருதி வெளிப்படாமல் இருக்கிறது. இதனை **அவியக்த நிலை** என்பர். அதாவது பகுதிகளாகவோ கூறுகளாகவோ பிரியாத நிலை. இப் பிரதானத்தில் மூன்று பொருள் வயப்பட்ட வஸ்துக்கள் உள்ளன.

சாங்கியர்கள் அணுக்களை குணங்கள் என்பர். குணம் என்பது பண்பு அல்ல. அது பொருள் வயப்பட்டது(Material&real) இவை சத்துவம், ராஜசம், தாமசம் என வகைப்படுத்தப்படும்.

இவை பொருள் வயப்பட்ட குணங்களே! அக வயப் பட்டவை அல்ல. சத்துவம் என்பது லேசாக இருக்கும் தன்மை. வெளிச்சம், உற்சாகம் முதலியனவற்றைக் குறிக்கும். ராஜசம் இயக்கம், துடிப்பு, வலி—குறிக்கும். தாமசம் கனம், தடை, சோம்பல் முதலியவற்றைக் குறிக்கும். இவையெல்லாம் பிரதானத் தின் பகுதிகள். இவையெல்லாம் பொருள் வயமாக உண்மை யானவை. பிரிவற்ற நிலையில் இவை மூன்றும் உறுதிச் சமநிலையில் (Stable equillibrium) இருந்தன. இச் சமநிலை எவ்வாறோ குலைந்தது. இச் சமநிலை குலைப்பே பரிணாமத்தின் துவக்கநிலை ஆயிற்று. பிரபஞ்ச பரிணாமத்தைத் தெளிவாகக் கூறுகிற பண்டைய உலகத் தத்துவங்களில் இது மிக முக்கியமானது. சீல் எனும் தத்துவப் பேரறிஞர் ''இந்தத் தரிசனம் பிரபஞ்ச பரிணாம செயல்முறை பற்றி விஸ்தாரமான ஒரு விளக்கம் கொடுப் பதால் இது தத்துவச் சிந்தனை வரலாற்றில் ஒரு முக்கியமான இடம் பெறுகிறது'' என்று கூறுகிறார். சமநிலைக் குலைப்பால் பிரிவற்ற நிலை மாறி மாறுதல்கள் தோன்றின. பிரதானத்திலிருந்து மகத் அல்லது புத்தி தோன்றியது. பௌத்தர்கள் இதனை மான் என்பார்கள். மானிலிருந்து அகங்காரம் அதிலிருந்து ஐந்து ஞானேந்திரியங்கள் அல்லது புலனுறுப்புக்கள். இவற்றிலிருந்து ஐந்து கர்மேந்திரியங்கள் அதாவது செயல்பாட்டு உறுப்புக்கள். அதிலிருந்து சூஷ்ம உறுப்புக்கள். அதிலிருந்து மகா பூதங்கள்; நிலம், நீர், தி, காற்று, விண்.

மணிமேகலையில் சமயக் கணக்கர் தம் திறங்கேட்ட காதையில் சாங்கியன் ஒருவன் சாங்கியத் தத்துவத்தின் பரிணாம வாதத்தை மணிமேகலைக்கு விளக்கிக் கூறுகிறான். இச் சாங்கியத் தத்துவம் பூர்வ சாங்கியமாகவே தோன்றுகிறது. சாரக சம்கிதையி லிருந்தும், பண்டைய பௌத்த நூல்களிலிருந்தும் நமக்குக் கிடைக்கும் இத் தத்துவத்தின் சித்திரத்தை மேலும் கொஞ்சம் விளக்கமாகவே மணிமேகலையில் காண்கிறோம். அதாவது

1 பிரகிருதி

2 மகத் அல்லது மான்

3 அகங்காரம்

| | | | |
|---|---|---|---|
| மனஸ் | புலனுறுப்புகள் 5-9 | கர்மேந்திரியங்கள் 10-14 | தன்மாத்திரைகள் 15-19 |
| | | | ஐம்பூதங்கள் 20-24 |

சாத்தனார், தமது பௌத்தக் கொள்கைகளுக்கு ஏற்பத் தமது தத்துவத்திற்கு மாறுபட்ட சாங்கியத்தைத் திரித்துக் கூறவில்லை. பண்டையச் சாங்கியத் தத்துவத்தில் பழைய உருவத்திலேயே அதனை விளக்கியுள்ளார். எனவே பரிணும வாதத்தை மேலும் தெளிவாக அறிந்துகொள்ள மணிமேகலையின் சாங்கிய வாதப் பகுதியை மேற்கோள் காட்டுவோம்.

### ஆ. மணிமேகலையில் சாங்கியம்

சாங்கிய வாதியின் கூற்று :

''தனைவறி யரிதாய்த் தான்முக் குணமாய்
மனநிகழ் வின்றி மாண்பமை பொதுவாய்
எல்லாப் பொருளுந் தோன்றுதற் கிடமெனச்
சொல்லுதன் மூலப் பகுதி,சித் தத்து
மானென் றுரைத்த புத்தி வெளிப்பட்
டதன்கணு காயம் வெளிப்பட் டதன்கண்
வாயு வெளிப்பட் டதன்க ணங்கி
யானது வெளிப்பட் டதன்க ணப்பின்
தன்மை வெளிப்பட் டதின்மண் வெளிப்பட்
டவற்றின் கூட்டத் தின்மனம் வெளிப்பட்
டார்ப்புறு மனத்தாங் கார விகாரமும்
ஆகா யத்திற் செவியொலி விகாரமும்

வாயுவிற் றுெக்கு மூறெனும் விகாரமும்
அங்கியிற் கண்ணு மொளியுமாம் விகாரமும்
தங்கியவப் பில்வாய் அவையெனும் விகாரமும்
நிலக்கண் மூக்கு நாற்ற விகாரமும்
சொலப்பட் டிவற்றிற்பு றுெக்கு விகாரமாம்
வாக்குப் பாணிபா தபாயு பத்தமென
ஆக்கிய விவைவெளிப் பட்டிங் கறைந்த
பூத விகாரத் தான்மலை மரமுதல்
ஓதிய வெளிப்பட் டுலகாய் நிகழ்ந்து
வந்த வழியே பாவைசென் றடங்கி
அந்தமில் பிரளய மாயிறு மளவும்
ஒன்று யெங்கும் பரந்து நித்தியமாம்
அறிதற் கெளிதாய் முக்குண மன்றிப்
பொறியுணர் விக்கும் பொதுவு மன்றி
எப்பொருளுந் தோன்றுதற் கிடமு மன்றி
அப்பொரு ளெல்லாம் அறிந்திடர்க் குணர்வாய்
ஒன்று யெங்கும் பரந்து நித்தியமாய்
நின்றுள வுணர்வாய் நிகழ்தரும் புருடன்''.

மணிமேகலையில் சாத்தனுர் விளக்கும் பரிணுமவாதம் மிகவும் தெளிவாக இருக்கிறது. இதில் பிரபஞ்சம் அனைத்திற்கும் மூலப்பொருளாய் உள்ள பிரதானம் முதலில் வரையறுக்கப்படு கிறது. அது அவியத்தமாய் இருப்பதால், அதனை அறிய இயலாது. அது தானே முக்குணமாய் இருந்தது. அது மனத்தில் நினைவுக்கிடமாகாது. பிரிவின்றி பொதுவாய் இருந்தது. எல்லாப் பொருளும் தோன்றுதற் கிடமாய் இருந்தது. இது மூலப்பகுதி. வேறெந்த நூலும் கூறுத ஒன்றை சாத்தனுர் கூறுகிறுர். அவியத்தமான பிரதானம் மாறுபாடடையும்போது அதனைச் சித்தம் என்றப் பெயரிட்டு அழைத்தார். அதனின்று பொருளின் குணமான மான் வெளிப்படும். இதுதான் பரிணும இயக்கத் திற்குக் காரணம். மானிலிருந்து ஆகாயம், ஆகாயத்திலிருந்து வாயு வாயுவின் கண் அக்கினி, அக்கினியிலிருந்து நீர், நீரிலிருந்து மண்— இப் பஞ்ச பூதங்களிலிருந்து மனம், மனத்திலிலிந்து தான் என்ற

உணர்வு இவற்றிலிருந்தே ஒலி, ஊறு, ஒளி, சுவை, நாற்றம், வாய், கால், கை, பார்வை, உபத்தம், பஞ்சபூதக் கலப்பால் மலை, மரம் முதலியவை வெளிப்பட்டன. இது உலகாய் நிகழ்ந்து பின் தோன்றிய வழியே ஒன்றுடன் ஒன்றாய் ஒடுங்கி, ஒன்றாகிப் பிரளயமாய் ஒடுங்கும் வரை நித்தியப் பொருளாம். பல்வேறு சாங்கிய நூலார் இப் பரிணாமத்தைச் செயல்முறை வரிசையில் வேறுபடுத்திக் கூறியுள்ளனர். இது மிகவும் பழைமையான கருத்தாகையால் அக் கால தத்துவக் கருத்துக்களுக்கென்று சரியான சொல் வழங்குவதில்லை. அதுமட்டுமன்றி பூர்வசாங்கியர் வழங்கிய அதே தர்க்கச் சொற்களைப் பிற்காலத்தவர் வழங்க வில்லை. உதாரணமாகச் சித்தம், மனம், அகங்காரம், புருஷன் என்ற சொற்கள் பூர்வசாங்கிய நூல்களிலும், ஈஸ்வர சாங்கிய நூல் களிலும் மாறுபட்ட பொருள்களில் வழங்கப்பட்டன. 25 தத்துவங்களில் ஒன்றான புருஷன் என்றசொல் அறிதல் உணர்வு (consciousness) என்ற பொருளில் சாரகராலும், சாத்தனாராலும் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. ஆனால் ஈஸ்வர சாங்கியத்தில் அது பிரம்மத்தைப் போலவும் கடவுளைப் போலவும் ஆன கருத் தமைப்பாக மாறிவிடுகிறது. எனவே பூர்வசாங்கியத்தின் பரிணாம வாதத்தை நுணிக்கமாக அறிந்துகொள்ளுவது நமக்குச் சிரமமாகவே உள்ளது. ஆனல் ஈஸ்வர கிருஷ்ணரது காலத்திற்கு முன்பு தோன்றிய நூல்களிலிருந்து சாங்கியம் கூறும் பரிணாமம் உண்மையான இயற்கை பரிணாமம் என்றே விளங்குகிறது.மாற்றத் திற்கு உட்படும் பொருள் பிரகிருதி என்னும் அவியத்தப் பொருள் தான்.அதிலிருந்துவியத்தநிலையான,சித்தம் ஒரு தொடரான பரிணாம மாற்றங்கட்கு உட்படுகிறது. மொத்தத்தில் பொருள் முதல் ரீதி யிலேயே இப் பரிணாம மாற்றங்கள் நிகழுவதாகச் சாங்கியர்கள் எழுதினார்கள். மனம், அகங்காரம் முதலிய அகவுணர்வுகள் பிர தானம் பஞ்சபூதங்களிலிருந்துதான் தோன்றியது. எனவே அடிப் படையில் பொருளே உணர்வுகள் தோன்றுவதற்கு அடிப்படையா யிருக்கிறதென்ற பொருள் முதல் வாதக் கருத்து பூர்வ சாங்கியர் களுக்கு இருந்திருக்கிறது. தற்கால அறிஞர்களால் சாங்கியத்தில் பரிணாமவாதத்தை அறிந்து கொள்வது சிரமமாயிருக்கிறது என்று கூறினோம். உதாரணமாக அகங்காரம் என்றால் என்ன? பூர்வ

சாங்கியம் அதற்களித்த பொருள் என்ன? தற்கால அறிஞர்கள் சாங்கியப் பரிணமத்தை நுணுக்கமாக அறிய முயன்றுள்ளார்கள். கருத்துத் தோன்றிய காலத்தை விட்டு விட்டு 16-ம் நூற்றுண்டின் விஞ்ஞான வளர்ச்சியினடிப்படையில் சீல் எனும் அறிஞர் சாங்கியப் பரிணமத்தை விளக்கியுள்ளார். இது பழைமைக்குத் திரும்பும் போக்கே யாகும்.சில இந்திய அறிஞர்கள் சாங்கியப் பரிணமத்தைக் கருத்து முதல்வாத அடிப்படையில் விளக்க முயன்றுள்ளனர். கருத்து முதல் வாதிகளுள் மாபெரும் மேதையான சங்கரர் சாங்கியத்தைத் தம்முடைய கொள்கைகளுக்கு நேர்முரணனதெனக் கண்டார். இது பொருள் முதல்வாத அடிப்படையில் உள்ளது என்பதை அவர் ஒப்புக் கொண்டு இதற்கு அசேதன காரண வாதம் என்று பெயரிட்டார். இதற்கு அறிவற்ற முதல் காரணம் என்பது பொருள். அதாவது பிரபஞ்சத்தின் முதற்காரணம் அறிவு அல்லது உணர்வு அல்ல. அது அசேதனப் பொருள் (ஜடப்பொருள்). பரிபூரணக் கருத்து முதல் வாதியான சங்கரர் முழுமையான பொருள் முதல்வாதமான சாங்கியத்தைத் தம்முடைய கொள்கையின் முதல் எதிரி என்ருர். அவருடைய நூல்களில் ''பிரதானமல்லா'' எனச் சாங்கியத்தை அழைத்தார்.

## இ. ஈசேஸ்வர சாங்கியம்

ஆனல், கி. பி. 5-ம் நூற்றுண்டிற்குப்பின் சாங்கியரான ஈஸ்வர கிருஷ்ணரும் அவருக்குப் பின் வந்த சாங்கியர்களும் புருஷர்கள் என்ற தத்துவத்தை இப் பரிணமத் திட்டத்தினுள் நுழைத்தனர். இவ் விடைச் செருகல் சாங்கியக் காரிகையில் காணப்படுகிறது. பொருளைச் செயல் படுத்த ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு புருஷனைச் சாங்கியக் காரிகை கற்பிக்கிறது. அசேதமான பொருள்களுக்கெல்லாம் ஓர் ஆன்மாவை அது வழங்குகிறது. இந்தப் பரிணமத்திட்டத்தின் தர்க்க முறைக்கே முரண்பட்ட புருஷர்கள் நுழைந்த பிறகு இப் பரிணம திட்டமே முன்னுக்குப் பின் முரணகிவிட்டது. இதைத் தாக்கி வாதாடுவது கருத்து முதல் வாதிகளுக்கு எளிதாகி விட்டது. எவ்வளவு சுலபமாக,மாறிவிட்ட சாங்கியத்தை எதிர்க்க முடிகிறதென்பதை, சிவஞான சித்தியாரில் காணலாம்.

சாங்கியத்தின் மற்ஞெரு தத்துவக் கூறு **முக்குண வாதம்.** பல புருஷர்கள் கற்பிக்கப்பட்ட போதே 25-வது தத்துவமாகிய உணர்வு பரர்களால் புருஷனுகி விட்டது. அதாவது நியாய வைசேடிகர்களது கடவுளுக்கு நிகரானதாகி விட்டது. சாங்கியர் களில் கருத்து முதல் வாதத்திற்குப் பின்னடைந்து புருஷர்கள் என்ற கருத்தை ஏற்றுக் கொண்டவர்கள் முக்குணங்களுக்கும் கருத்து முதல் ரீதியான பொருளை அளித்தனர். இது முக்குணங் களையும் ஆன்மாவையும் இணைத்து விட்டது.

புருஷர் பற்றி சாரகரது காலத்திலேயே ஐந்து வித கருத்துக்கள் இருந்ததாக அவரே எழுதுகிருர்.

1. புருஷன் என்பது ஐம்பூதங்களும் அறிதல் உணர்வும் சேர்ந்தது.

2. ஐம்பூதங்கள் மட்டுமன்றி வேறு சில தாதுக்களும் உணர்வும் சேர்ந்தது.

3. புருஷன் என்பது 24தாதுக்களின் முழுமையைக் குறிக்கும்.

4. புருஷன் என்பது ஆதி-அனுதி என்று அழிவது அழி வற்றது என இருவகையாக உள்ளது.

5. புருஷன் என்று ஒன்றுமில்லை.

இந்த ஐந்து கொள்கைகளையும் அவர் குறிப்பிட்டுவிட்டு தம் முடைய கருத்தையையும் கூறுகிருர். புருஷன் என்பதை ஆன்மா அல்லது **உணர்வு** (conciousness) எனக் கருதுகிருர். அது பிரகிருதியிலிருந்து தோன்றிய விளைவுப் பொருள் (derivative) என்றும், பிரகிருதி இல்லாமல் அதற்குச் சுயேச்சையான வெளிப் பாடு கிடையாது என அவர் எழுதுகிருர்.


சங்கரர் தம்முடைய தத்துவக் கொள்கைகளுக்கு மாபெரும் ஆபத்தை விளைப்பது சாங்கியம் என்று உணர்ந்தார். பிரபஞ்சத்தின் முதல் காரணம் எது என்ற விஞவோடு சாங்கியர்களின் தத்துவ ஆய்வு தொடங்குவதால் சங்கரரும் அதே விஞவிற்குத் தம்முடைய விடையைக் கூறி விவாதிக்கிருர். சாங்கியர்களின் விடையை

அசேதன காரண வாதம் என்று வரையறுத்த சங்கரர் அதற்கு மாறுதலான தனது விடையைப் பிரம்ம காரண வாதம் என அழைக்கிறார்.

தம்முடைய எதிரிகளின் தாக்குதல்களுக்கு ஈடுகொடுப்பதற்காகப் பிற்காலச் சாங்கியர்கள் தமது தத்துவத்தில் காணப்படும் புருஷனை ஈச்வரத் தன்மை உடையவனாக ஒப்புக் கொண்டனர். முதல் கட்டத்தில் புருஷன் பிரதானத்திலிருந்து தோன்றி செயலற்றதாகி 25 தாதுக்களில் ஒன்றாக இருந்தது. அது சாட்சியாக மட்டுமே இருந்தது. பரிணாம மாற்றங்களில் அதற்குப் பங்கில்லை. 2-ம் கட்டத்தில் புருஷ என்று முரற்றனதாகவும் மாறுதலற்றதாகவும் ஆனால் அதே சமயம் பரிணாமத்தின் முதற்காரணமாகவும் ஆக்கப்பட்டது. இக் கருத்தை ஏற்றுக் கொண்ட பின் சாங்கியத்தின் அடிப்படையான தர்க்க முறை முரண்பட்டிற்குள்ளானது. முன்னிற்குப் பின் முரணான இந்தத் தத்துவச் சிந்தனையில் பாதை காட்ட யாரும் முன் வரவில்லை. கருத்து முதல் வாதிகளின் கொள்கைத் தாக்குதல்களுக்கு இலக்கண ஈஸ்வர சாங்கியம் தத்துவப் போராட்டத்தில் பின்வாங்கித் தோற்றுப் போயிற்று. ஈஸ்வரச் சாங்கியத்தைத் தாக்கி முறியடிப்பதில் வேதாந்திகளும் (உத்திர மிமாம்சர்களும்) நியாய வைசேடிகர்களும். பெரும் பங்கு ஆற்றினர்.

**பிரம்ம பரிணாம வாதம்:** சாங்கிய எதிர்ப்பு வாதங்கள் மூலமாகவே அவர்கள் தங்கள் பிரம்மக் கொள்கையையும் பிரம்ம நியாயக் கொள்கையையும், கடவுள் கொள்கையையும் வளர்ச்சி பெறச் செய்தனர். கருத்து முதல் வாத அர்த்தத்தில் புருஷனைச் சாங்கியக் காரிகையும், பிற்கால நூல்களும் ஒப்புக் கொண்டது. சாங்கியத்தின் தத்துவ வலிமையை குறைத்துவிட்டது. அதன் மூலப் பொருள் மெலிவடைந்தது. அதனுடைய பழைய பரிணாம வாதம் அத்வைதிகளாலும் விசிஷ்டாத்வைதிகளாலும் மாற்றப்பட்டது. மாயை என்பதையும் உண்மையான பரிணாமம் கடவுளிலிருந்து தொடங்குகிறது என்றும் நிரூபிக்கப் பயன்பட்டது. அத்வைதிகள் பிரம்மம் ஒன்றே உள்ள பொருள் (சத்) என்றும் பிரம்மத்தன் ஒரு இயல்பான மாயை என்ற கண்ணாடி வழியே

வக்கரித்துத் தோன்றும் பிம்பமே பிரபஞ்சம் என்றும் இது வெறும் தோற்றம் என்றும் கூறினர்கள். இதனைக் கீழ்வரும் திட்டப்படத்தால் அறியலாம்.





**பிரபஞ்சத் தோற்றம்—சங்கரர்**

A—பிரம்மம் B—மாயை C—பிரபஞ்சமான தோற்றம்
இது அத்வைதிகளின் பிரபஞ்சத் தோற்றம் பற்றியக் கருத்து.

ராமானுஜரின் விசிட்டாத்வைதம் பிரபஞ்சத் தோற்றத்தைப் பின் வருமாறு விளக்கியது. குணமற்ற பிரம்மம், மாயை சேர்க்கையால் குணங்கள் உள்ள பிரம்மமாக மாறுகிறது. குணங்கள் உள்ள பிரம்மம் படைப்புச் சக்தி உள்ளதாக இருக்கிறது. இது உலகைப் படைக்கிறது. சகுணப்பிரம்மம் மாயையின் சேர்க்கையால் தோன்றிய உலகம் **தோற்றமல்ல. உண்மை.** அப்போது ஜீவன்—பிரம்மம் இரண்டும் தனித்துள்ளன. ஆயினும் தொடர்பு கொண்டுள்ளன. மாயை அழியும் போது இவை நெருங்கி வருகின்றன. ஆனல் ஒன்ருவதில்லை. ஜீவன் தோன்றுவதற்கு மூலகாரணமாயிருப்பது பிரம்மமே. ஆனல் தோன்றியபின் அது பிரம்மத்தோடு ஐக்கியமாவது இல்லை. அத்வைதம் பிரம்மம் ஒன்றே உண்மையானது, பிற மாயை என்று கூறும். ஆனல் விசிட்டாத்வைதம் பிரம்மமும் பிரபஞ்சமும் உண்மை எனக் கூறும். மாயை அழிந்ததும் பிரபஞ்சம் மறைந்துவிடும் என அத்வைதம் கூறும்.

மாயை அழிந்தாலும் பிரபஞ்சம் அழியாது என விசிட்டாத்வைதம் கூறும். பேதம் தோற்றமென அத்வைதம் கூறும். அது உண்மை யல்ல என விசிட்டாத்வைதம் கூறும். அத்வைதம் சங்கரருடையது. விசிட்டாத்வைதம் ராமானுஜருடையது.

இதனை கீழ் வரும் திட்டப் படத்தில் விளக்குவோம்.




**பிரபஞ்சத் தோற்றம்—ராமானுஜர்**


B1—பிரம்மம். B2—சகுண பிரம்மம், M—மாயை, P—பிரபஞ்சம், J—ஜீவன்

ராமானுஜர் பேதம் அல்லது வேறுபாடு உண்மையானதெனக் கருதினர். பிரம்மத்திலிருந்து மாயைச் சேர்க்கையால் அணுக்கள் பிரிகின்றன. இந்தப் பேதம் உண்மையானது. அணுக்கள் தோற்ற மல்ல. உண்மை. அவற்றின் சேர்க்கையால் சேதன உலகம் தோன்றுகிறது.

சாங்கியம் பிரதானம் என்னும் பொருளிலிருந்து (matter) பிரபஞ்சம் தோன்றுகிறதென்றும், அசேதனத்தின் மாற்றங்களால் சேதனம் தோன்றும் என்றும் கூறுகிறது.

ஆனல் சங்கரர், ராமானுஜருடைய தத்துவங்கள் தம்முள் வேறுபட்டாலும், பிரம்மம் என்ற ஒரு கற்பனைக் கருத்து (Absolutae idea) மாறுதலுக்குட்பட்டுப் பிரபஞ்சமாகிறது என்று கூறுகிறது. சுருக்கமாகச் சொன்னல் **எண்ணத்திலிருந்து உலகம் தோன்றுகிறது என்று கூறுகிறது** (From consciousness to matter). சாங்கியம் சித்தம், மனம், அகங்காரம், புருஷன்

என்னும் உணர்வு ஆகிய அக வஸ்துக்கள், கிரியைகள் எல்லாம் அபியக்த பிரதானம் என்னும் பிரிவற்ற பொருளிலிருந்து பரிணும ரீதியில் வளர்ச்சி பெற்றது எனக் கூறுகிறது. சங்கரர் அகப் படைப்புகளில் ஒன்ருன பிரம்மம், தன் மாயையால் பிரபஞ்சத்தைத்




பிரபஞ்சத் தோற்றம்—மத்வர்

யாவும் உண்மை — B—பிரம்மம், M—மாயை, J—ஜீவன், A—அணுக்கள்
P—அணுச் சேர்க்கையால் உண்டாகும் பிரபஞ்சம்

தோற்றமாகக் காட்டுகிறது என்கிருர். உலகம் உண்மையல்ல; தோற்றமே மாயை மறைந்ததும் தோற்றமும் மறைந்துவிடும். இராமானுஜர் பிரபஞ்சம் உண்மையென்கிருர், ஜீவன் உண்மை யென்கிருர். ஆனல் அவற்றின் முழுமுதல் காரணம் ஈசுவரன் என்கிருர். இது பிரம்மத்தின் சகுண உருவம் என்கிருர். இவர் உண்மையான உலகமும் மனிதனும், சகுணப் பிரம்மம் என்னும் மனத்தின் படைப்பான ஒரு கருத்தில் இருந்து தோன்றின என்கிருர்.

தத்துவத்தின் அடிப்படைப் பிரச்சினையான இருப்புக்கும், உணர்வுக்கும் இடையே உள்ள உறவை இருவேறு நோக்கில் சாங்கியர்களும், அத்துவைதி, விசிட்டாத்வைதிகளும் காண் கிருர்கள்.

சைவசித்தாந்தம் இத் தத்துவங்களில் வேருனது என்று கூறிக் கொண்டாலும், முடிவில் பதி என்ற சாங்கிய புருஷனது, ஈசுவர

மறுபிறப்பே, முழுமுதல் கடவுளே அவர்களுக்கு முதற் காரணம். மாயைக்கு அத்துவிதம் தரும் பொருளல்லாமல் வேருேர் கிரியை அவர்கள் அளிக்கிருர்கள். முடிவில் அவர்களும் எண்ண முதல் வாதிகளே (theoristic idealists).

## ஈ. இருவகைத் தத்துவ நோக்குகள்

''எண்ணமும் உணர்வும் மூளையின் படைப்புகள்'' என்று எங்கெல்ஸ் கூறுகிருர். இது வெளிப்படை. ஆனல் தத்துவ வாசிரியர்கள் வெளிப்படையான இந்த உண்மையை மறுத்தும் மறைத்தும் எண்ணமும் உணர்வுமே மனிதனையும் உலகையும் படைக்கின்றன என்று நிரூபிக்க அரும்பாடுபடுகிருர்கள். தத்துவத்தின் அடிப்படையான கேள்வி எது முதன்மையானது பொருளா? பணமா? இருப்பா-உணர்வா? என்பது தான். இதற்கு தத்துவ ஆசிரியர்கள் அளிக்கும் பதில்தான் அவர்களை இரு முகாம்களாகப் பிரிக்கிறது. பொருள்தான் முதன்மையானது என்று விடை கூறுபவர்கள் ஒருபுறம். உணர்வு, மனம் அல்லது கருத்துத்தான் முதல் என்று கூறுபவர்கள் மற்றொருபுறம். இந்த இரண்டு தத்துவப் போக்குகள்தான் உள்ளன. இவர்களிடையே அடிப்படையான வேறுபாடு உண்டு. இந்த முகாம்களுக்கு உள்ளேயே உள் வேறுபாடுகள் பல இருக்கலாம். ஆனல் பிரதான வேறுபாடு எது முதன்மையானது என்பதற்கு இரண்டு விடைகளில் எதை பதிலாகக் கூறுகிருர்களோ அதைப் பொறுத்தே இருக்கும்.

இந்தியத் தத்துவத்தில் லோகாயதம் தெளிவாகப் பொருள் தான் முதன்மையானது என்று கூறுகிறது. உணர்வு, மனம் அல்லது கருத்துக்கள் பொருளிலிருந்து விளையும் விளைபொருட்களே என்று லோகாயதம் கூறுகிறது. இந்திய லோகாயதம் மிகப் பழைமையானது. வேதங்களிலேயே இதன் கூறுகள் உள்ளன. பண்டைய தத்துவவாதிகள் அனைவரும் லோகாயதத்தைக் குறிப்பிட்டுள்ளனர். இந்தியக் கருத்து முதல் வாதிகள் லோகாயதத்தின் தத்துவக் கூறுகளை எதிர்த்துள்ளனர். நியாய வைசேடிகம், வேதாந்தம், விசிட்டாத்வைதம், அத்வைதம், சைவ சித்தாந்தம் முதலிய தத்துவங்களும், பௌத்தம், ஜைனம் முதலிய

அவைதீக தத்துவங்களும் லோகாயதத்தைக் குறிப்பிட்டு எதிர்த்துள்ளன. பண்டைய வேதாந்திகளிலிருந்து இன்றைய சைவ சித்தாந்திகள் வரை லோகாயத வாதத்தை எதிர்த்து வந்துள்ளார்கள். பல தத்துவ நூற்களில் லோகாயதம் எதிர்ப்புக்குள்ளாகியுள்ளது. அதனுடைய அடிப்படைத் தத்துவக் கோட்பாடுகள் இன்று நவீன பௌதிகம், ரசாயனம், உடலியல், உயிரியல் முதலிய பல அறிவியல் நூல்களால் நிரூபிக்கப்பட்டுள்ளது. தற்காலப் பொருள் முதல் வாதக் கருத்துகள் விஞ்ஞான நிரூபணத்தின் அடிப்படையில் வலுவாக நிலை கொண்டுள்ளன. ஆனால் பண்டைக் காலத்தில் இருந்த குறைவான விஞ்ஞானத் தொழில் நுணுக்க வளர்ச்சி நமது புராதன பொருள் முதல் வாதிகள் தங்கள் கருத்துக்களைப் போதுமானவையாக்கவில்லை. அவர்கள் தத்துவ வாதிகள் எழுப்பிய பிரச்சினைகட்குப் பொதுப் படையாகத் தான் விடை கூறமுடிந்தது. ஆயினும் அவர்களது அடிப்படையானக் கோட்பாடுகள் மேலும் வளர்ச்சிபெற விஞ்ஞான வளர்ச்சியை எதிர்நோக்கி இருந்தன. உதாரணமாகப் பூதவாதமும், அணுக் கொள்கையும், சுபாவ வாதமும் பிற்கால விஞ்ஞான வளர்ச்சிக்குத் துணை செய்து அவ் வளர்ச்சியினால் தத்துவமும் வளர்ச்சி அடைய காரணமாயிற்று.

# 6. லோகாயதம்

இனி, இந்திய லோகாயதத்தின் வரலாற்று ரீதியான சில கூறுகளைக் காண்போம். ஆரம்பத்தில் இவர்கள் வேத யக்ஞங்களை எதிர்த்தார்கள். இவர்களை வேதவாதிகள் நாத்திகர்கள் என்றழைத்தார்கள். வேதகாலத்தில் நாத்திகன் என்றால் வேதத்தை ஒப்புக் கொள்ளாதவன் என்று பொருள். இவர்களைப் பற்றி பண்டைய மிமாம்ச நூல்களில் மிமாம்சத்திற்கு எதிரானவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்களை வெறுத்து ஒதுக்க வேண்டும் என்று அந்நூல்கள் கூறுகின்றன. யக்ஞங்களாலும் யாசங்களாலும் எவ்விதப் பயனுமில்லை என்று இவர்கள் வாதிட்டார்கள். இதைக் குறித்த கதை ஒன்றுள்ளது. ஒரு சார்வாகன் (லோகாயதவாதி) ஒரு குடிசையின் கூரைமீது ஏறி நின்று கொண்டான். அவ்வூரில் இறந்தவர்களுக்குத் தீ வளர்த்து அவி சொரிந்து பிண்டம் ஊட்டிய ஒரு புரோகிதனை அழைத்துத் தெருவில் ஒரு இலையைப் போடச் சொன்னான் எதற்கென்று புரியாமல் புரோகிதன் அவ்வாறே செய்தான். கூரைமீதுநின்ற சார்வாகன் ஒரு சோற்றுருண்டையை அதன்மீது வைக்கச் சொன்னான். தீயில் உணவைப் போட்டு இறந்தவர்களுக்குப் போய்ச்சேருகிற மந்திரத்தைச் சொல்லச் சொன்னான். புரோகிதன் விழித்தான். சார்வாகன் "உன் மந்திரத்தால் தீயில் கொட்டப்படும் உணவு எங்கேயோ மேலே இருக்கிற கண்காணாத உலகிற்குப் போகும் என்றால், அந்த மந்திரம் தெருவிலிருந்து ஐந்து முழம் உயரம் இருக்கும் இந்த கூரைக்குச் சோற்றை ஏற்றாதோ?" என்று கேட்டான். "அய்யோ! இவன் நாத்திகன்— "இவன் ஊரில் இருந்தாலே மழை பெய்யாது" என்று கூவிக்கொண்டே புரோகிதன் ஓடிவிட்டான். இவ்வாறு மந்திரச் சடங்காசாரங்களால்

பயன் விளையும் என்ற நம்பிக்கையைச் சார்வாகர்கள் எதிர்த்துள்ளார்கள்.

மகாபாரதத்தில் சார்வாகர்களைப் பற்றிக் கதை ஒன்று குறிப்பிடப் பட்டுள்ளது. பாண்டவர்கள் பாரதப்போரில் வெற்றி பெற்று இந்திரப் பிரஸ்தம் என்னும் தலைநகரினுள் நுழைந்தார்கள். கௌரவர்கள் போரில் மாய்ந்து போனார்கள். அவர்கள் ஆட்சியில் நகரத்தில் வாழ்ந்த பிராம்மணர்கள் இப்போது வெற்றி பெற்று நகரினுள் வரும் பாண்டவரை வரவேற்கத் திரளாக வந்தனர். பாண்டவர்களில் மூத்தவனை தரும புத்திரரை மிகைபடப் புகழ்ந்து தங்களை ஆதரித்துப் பல்லாயிரம் ஆண்டுகள் ஆட்சிபுரிய வேண்டுமென வாழ்த்தினார்கள். அவர்களிடமிருந்து விலகிநின்ற நாலைந்துபேர்கள் "இவர்கள் சொல்வதை நம்பாதே." என உரக்கக் கூவினார்கள். தருமபுத்திரர் அவர்களைத் திரும்பிப் பார்த்தார். கூடிநின்ற பிராம்மணர்கள், "அவர்கள் சொல்லுவதைக் கேட்காதீர்! அவர்கள் பூதவாதிகள் சார்வாகர்கள்", என்று கத்தினார்கள். பூதவாதிகளில் ஒருவன் முன் வந்து தருமனைப் பார்த்து தெளிவான குரலில் பேசினான்—"இந்தப் பிராம்மணர்கள் இன்று காலையில் துரியோதனனுக்குச் சொன்ன வாழ்த்தைத் தான் இப்பொழுது உனக்குச் சொல்லியிருக்கிறார்கள். உண்மையில் நீ தருமபுத்திரன் அல்ல. அதர்மத்தைச் செய்து வந்திருக்கிறவன். எதற்காக குருமார்களையும், பாட்டனையும், தந்தையர்களையும், சகோதரர்களையும், நண்பர்களையும் போரில் கொன்று விட்டு இங்கு வந்திருக்கிறாய்? இவற்றைவிட கொடிய பாதகம் என்ன இருக்கிறது? இக் கொடிய பாதகத்தை நீ செய்யக் காரணம் என்ன? அதற்குக் காரணம் இந்த மண்ணை, ஆளவேண்டும் என்னும் ஆசைதானே! முன் வாழ்ந்த மன்னர்கள் பிறஉயிர்களுக்காகத் தன்னுயிர் கொடுத்தார்கள். நீ மண்ணுக்காக உங்கள் குல குருவான துரோணரையும், பாட்டனை பீஷ்மரையும், சிற்றப்பனை விதுரனையும் குந்தியின் சகோதரர்களான மாமன்மார்களையும் துரியோதனன் முதல் நூறு சகோதரர்களையும் சொந்த அண்ணனை கர்ணனையும் கொன்றுவிட்டாய்! நேற்று வரை இந்தப் பிராம்மணர்களுக்கு துரியோதனன் தர்மரட்சகனை

இருந்தான். அவனுக்கு இவர்கள் பல்லாண்டு பாடினுர்கள்! இன்று அவன் களத்தில் செத்துக்கிடக்கிறன். நீ வென்று வருகிருய். நேற்றுத் துரியோதனனைப் புகழ்ந்த அதே வாயால் அவர்கள் இன்று உன்னைப் புகழ்கிருர்கள். இதெல்லாம் எதற்காக? அவர்களது பசுக்களையும், ஆசிரமங்களையும், அடிமைகளையும், யக்ஞ தட்சிணைகளையும் பாதுகாத்துக் கொள்வதற்காகவே. உள்ளதைச் சொல்லும் நாங்கள் நாஸ்திகர்கள்''.— என்று சொன்ஞன். பிராம்மணர்கள், பிராம்மண துரோகமும், ராஜத்துரோகமும் செய்யும் இவர்களைத் தீயிலிட்டு எரியுங்கள் எனக் கூக்குரலிட்டார்கள். அவர்களைப் பிடித்துக்கட்டி ஓமத்தீயில் இட்டுப் பொசுக்கிஞர்கள்.

மிகப்பண்டைக் காலத்தில் சடங்காசார எதிர்ப்பு நிருபணமில்லாத நம்பிக்கைகளுக்கு எதிர்ப்பு இனக்குழு ஒழுக்க விதிகளுக்கு எதிரான கலைகளுக்கு 'எதிர்ப்பு முதலியவற்றைச் சார்வாகர்களின் செயல்களால் காண்கிருேம். ஆனல் அவர்களது தத்துவக் கோட்பாடு எதனையும் மிகப்பழைய நூல்களிலிருந்து நாம் அறிய முடியவில்லை. பண்டைக் காலத்துச் சார்வாகர்களது தத்துவ நூல்களெதுவும் தற்காலத்தில் கிடைக்கவுமில்லை. ஆயினும் அவர்களது எதிரிகளது தத்துவ நூல்களிலிருந்து லோகாயதக் கோட்பாடுகளை அறிகிருேம். எதிரியின் கூற்றை எதிரி கூறும் வாசகம் பூர்வபஷம் எனப்படும். தமிழில் அது பரபக்கம் என்றழைக்கப்படும். இவ்வாறு பூர்வ பஷமாக லோகாயதத்தை பல வகையான தத்துவ நூல்களிலிருந்தும் அறிகிருேம். லோகாயதவாதியே எழுதிய லோகாயத நூல் கிடைக்கவில்லை. ஒரே ஒரு லோகாயத நூல் தான் லோகாயதியாலேயே எழுதப்பட்டது கிடைத்துள்ளது. அவரது பெயர் புரந்தரர். ஆனல் எல்லாத் தத்துவ.ஆசிரியர்களும் தம்முடைய நூல்களிலும் லோகாயதத்தைப் பரபக்கமாகக் கூறி மறுத்துள்ளனர். இந்தத் தத்துவாசிரியர்களின் நூல்கள் வரலாற்று வழியாக பல காலங்களில் கிடைப்பதால் லோகாயதத்தின் கோட்பாடுகளை வரலாற்று .ரீதியாக அறிய முடிகிறது. சங்கரரும் மத்வாசாரியாரும், பிற்கால பௌத்தரும், பிற்கால ஜைனரும் லோகாயத்தின் முக்கிய தத்துவக் கூறுகளை ஒரே விதமாகவே கூறுகின்றனர்.

எனவே வேறுபட்ட தத்துவங்களைப் பின்பற்றும் ஆசிரியர்கள் லோகாயதத்தைப்பற்றி ஒன்றுபடக் கூறுமிடத்து அதனை ஒப்புக் கொள்ளலாம்.

சங்கரர் பரபக்கமாக லோகாயதத்தில் சில கோட்பாடுகளைப் பற்றிக் கூறுகிறார். "லோகாயதிகள் உடம்பு மாத்திரமே ஆன்மா என்று கூறுகிறார்கள். உடம்பினின்று தனித்து ஆன்மா ஒன்று மில்லை. ஐம்பூதச் சேர்க்கையே உடல். மரணத்திற்குப் பின் இது ஐம்பூதங்களாகப் பிரியும். ஆன்மாவும் அழிந்து போகும். பூதச் சேர்க்கையே உணர்வை உண்டாக்கும். உதாரணமாக, மாவையும் வெல்லத்தையும் சில பட்டைகளையும் சேர்த்துக் கொதித்து வடித்தால் மது பிறக்கிறது. பகுதிகளுக்கு இல்லாத தன்மை அவை கூடிய இக் கூட்டுப்பொருள்களுக்கு உள்ளது. அதுபோலவே பூதங்கள் கூடி உணர்வை உண்டாக்கும். உடல் அழியின் உயிர் அழியும். உடல் அழிந்த பின் மோட்சத்திற்குச் செல்ல எதுவும் மிஞ்சியிருப்பதில்லை. A, B யோடு சேர்ந்து வாழ்கிறது. B அழிந்தால் A அழியும். அப்படியானால் Bயின் ஒரு குணமே A. அது போலவே உடலின் ஒரு குணமே உணர்வு."

அநேகமாக அவர்களுடைய கோட்பாடுகளைச் சங்கரர் நேர்மையாகவே கூறியுள்ளார். எனினும் சங்கரருக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட பௌத்த நூலாகிய மணிமேகலை இக்கோட்பாட்டைக் கூறும் விதத்தைக் காண்போம்

## மணிமேகலையில் பூதவாதம்

"தாதகிப் பூவுங் கட்டியு மிட்டு
மற்றுங் கூட்ட மதுக்களி பிறந்தாங்
குற்றிடு பூதத் துணர்வு தோன்றிடும்
அவ் வுணர் வவ்வப் பூதத் தழிவுகளின்
வெவ்வேறு பிரியும் பறையோசை யில் கெடும்
உயிரோருங் கூட்டிய வுணர்வுடைப் பூதமும்
உயிரில் லாத உணர்வில் பூதமும்
அவ்வப் பூத வழியவை பிறக்கும்
மெய்வகை யிதுவே வேறுரை விகற்பமும்

R
N76

உண்மைப் பொருளு முலோகா யதனுணர்வே
கண் கூ டல்லது கருத்தள வழியும்
இம்மையு மிம்மைப் பயனுமிப் பிற்பே
பொய்ம்மை மறுமையுண் டாய் வினை துய்த்தல்.''

இம் மேற்கோளில் 'வேறுரை விகற்பமும்' என்று சாத்தனார் கூறுவதால் அவர் காலத்தில் லோகாயத வாதத்தில் வேறுபாடுகள் கொண்ட உட்பிரிவினரும் இருந்தார்கள் எனத் தெரிகிறது. நீலகேசியும் தத்துவப் போக்குகளில் சில வேறுபாடுகள் கொண்ட பூதவாதிகள் இருந்தார்கள் எனக்கூறும். ஆயினும் சங்கரர் பரபக்கமாகக் கூறிய கொள்கைகள், எல்லா லோகாயத வாதிகளுக்கும் பொதுவானவை: லோகாயதிகளில் ஒரு பிரிவினர் நான்கு பூதங்களையே ஒத்துக் கொண்டனர். ஆகாயம் அல்லது விண்ணை அவர்கள் ஒரு பூதமாக ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்குக் காரணம் அவர்கள் பிரத்தியட்ச காட்சி முறையை மட்டும் தங்கள் அறிதல் முறையாகக் கொண்டிருந்தார்கள். எனவே நேரில் காட்டி நிரூபிக்க முடியாத ஆகாயத்தை அவர்கள் ஒப்புக் கொள்ள வில்லை என்று பிறர் கூறுவர். பூதங்கள் நான்காயினும் சரி, ஐந்தாயினும் சரி, பூதங்களாகிய பொருள் வேறுபாட்டிலிருந்து பிரபஞ்சம் தோன்றுகிறது என்பதை இருவருமே ஏற்றுக் கொண்டிருந்தனர்.

நேர்சாட்சியை மட்டும்தான் அவர்கள் அறிதல் முறையாக ஏற்றுக் கொண்டனர் என்பது எதிரிகள் கூற்று. உண்மையில் அவர்கள் தங்கள் கோட்பாடுகளை விளக்கும் போதே அனுமானத்தையும் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் அனுமான அறிதல் முறையை இல்லாததை நிரூபிக்க பயன்படுத்தலாகாது என வரம்பிட்டனர். உதாரணமாக தீயும் புகையும் தொடர்புடையவை. இரண்டையும் நேர்சாட்சியால் அறியலாம். ஆனால் புகையை மட்டும் கண்டு தீயை அனுமானிக்கலாம். லோகாயத வாதிகள் இந்த அனுமானத்தை ஏற்றுக் கொள்வார்கள். ஏனெனில் இதனால் அறியப்படும் உண்மையை நேர்க் காட்சியில் நிரூபிக்கலாம். இரண்டும் அறியப்படக் கூடியவை. அவர்கள் ஏற்றுக் கொள்ளாத அனுமானத்திற்கு ஒரு காட்டு தருவோம். பாண்டத்தைக் கண்டு

TAMIL NADU ARCHIVES LIBRARY
111409
EGMORE, MADRAS-600 008

குயவனை அனுமானிப்பதைப் போலவே பிரபஞ்சத்தைக் கண்டு அதைச் செய்த கடவுளையும் அனுமானிக்கலாம். இவ்வாறு ஆத்திக வாதிகள் வாதம் செய்வர். லோகாயத வாதிகள் முதல் அனுமானத்தை அனுமான வரம்பை மீறியதென ஒதுக்குவர் ஏனெனில் பாண்டத்திற்கும் குயவனுக்கும் உள்ள தொடர்பு நேர் சாட்சியில் அறியப்படக் கூடியது. அதனால் பாண்டத்தை வைத்துக் குயவனை அனுமானிப்பது சரி! ஆனால் பிரபஞ்சத்திற்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பு நிரூபிக்கப்படாதது. அறியப் படாதது. எனவே வரம்பு மீறியது. இவ்வாறே கடவுள், மோட்சம், தெய்வங்கள் ஆகிய நிரூபிக்க முடியாத எதனையும் அனுமானத்தால் அறிவதான அறிதல் முறையை லோகாயத வாதிகள் நிராகரித்தார்கள்.

மனித வாழ்க்கையின் குறிக்கோள் மோட்சம் அல்லது விடுதலை என்று கருத்து முதல் வாதிகள் கூறினார்கள். லோகாயத வாதிகள் இவ் வுலகில் இன்பம் துய்த்தலே மனித வாழ்வின் குறிக்கோள் எனக் கூறினர். பிற்கால சமய வாதிகளும் தத்துவ வாதிகளும் இக் கொள்கையைப் பெருந்தீனிக் கொள்கை என்றும், குடிவெறிக் கொள்கை என்றும், காமாந்தகரக் கொள்கை என்றும் கேலி செயதார்கள். தமிழ்நாட்டுச் சைவ சித்தாந்திகள் தங்கள் பரபக்கத்தால் சார்வாகனை வர்ணிக்கும் போது இந்தக் கேலியை உண்மையாகவே ஆக்கி விட முயன்றனர். சார்வாகன் சைவ சித்தாந்தியோடு விவாதிக்க வரும்போது வெறி மயக்கத்தில் மலர்மாலை அணிந்து மணப்பொருள்கள் பூசி இரண்டு அழகியப் பெண்களின் தோள்களைத் தழுவிக் கொண்டு தள்ளாடி நடந்து வருவதாகச் சிவஞான சித்தியார் எனும் நூல் வருணித் துள்ளது.

## இந்திய உலகாயதத்தின் குறைபாடுகள்

இந்திய லோகாயத வாதம் முரணற்ற பொருள் முதல் வாதக் கண்ணோட்டமாகும். அதற்குச் சில குறைபாடுகள் இருந்தன. விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியில் அது தன் கோட்பாடு களுக்கு ஆதரவு பெற முடியவில்லை. அதனால் விஞ்ஞான வளர்ச்சி

மிகவும் குறைவாகவே இருந்தது. அதனால் அது ஒரு அறிதல் முறையை உருவாக்கிக் கொள்ளவில்லை. அதன் நிரூபணங்கள் கொச்சையான பொருள் முதல் வாதங்களாக இருக்கின்றன. இத் தத்துவத்திற்கு ஊட்டம் அளிக்கும் வகையில் விஞ்ஞானம் வளரவில்லை. ஆளும் வர்க்கம் இத் தத்துவத்தை அழிக்க முற்பட்டது. கருத்து முதல் வாத தத்துவங்களுக்கே பேராதரவு அளித்தது. இதனால் அத் தத்துவங்களின் தாக்குதல்களுக்கு லோகாயத வாதத் தத்துவங்கள் ஈடு கொடுக்க முடியவில்லை. ஆனால் இந்திய லோகாயதம் உருவாக்கிய சில தத்துவக் கூறுகள் கருத்து முதல் வாத தத்துவங்களால் கிரகிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக பூதவாதம், சுபாவ வாதம், அணுக் கொள்கை முதலியன பல ஆன்மீகவாத தத்துவங்களில் இடம் பெற்றுள்ளன. வைசேடிகம், ஆஜீவகம், ஜைனம், பௌத்தம் முதலிய தத்துவங்கள் பஞ்ச பூதக் கொள்கையையும் அணுக் கொள்கையையும் ஜீரணித்துக் கொண்டு விட்டன.

இந்திய லோகாயத வாதம் தன் முழுமை உருவத்தை இழந்து அழிந்து போயிற்று. இதன் பின்னர் இந்தியத் தத்துவ மரபுகளின் போராட்டங்கள் கருத்து முதல் வாதத் தத்துவங்களுக்கு இடையிலேதான் நடைபெற்றன. நியாய வைசேடிகர்கள், சாங்கியர்கள், மிமாம்சர்களோடு போராடினர். வேதாந்தம், பௌத்தம், ஜைனம் இன்னும் பலவேறு தத்துவங்களோடு போராடியது. பௌத்தம் பிற்காலத்தில் ஜைனம், நியாயம் சாங்கியம் இவற்றோடு போராடிது. உத்திர மிமாம்சம் எனும் வேதாந்தம் முற்காலத்தில் சங்கரரது அத்வைதமாக வளர்ச்சி பெற்றது. இதன் உலக மறுப்பு வாதத்தையும் முழுமையான பிரம்ம ஒருமை வாதத்தையும் ராமானுஜரின் வசிட்டாத்வைதமும், மத்வரின் துவைதமும், மெய்கண்டாருடைய சைவ சித்தாந்தமும் வன்மையாக எதிர்த்தன.

அத்வைதம் பிரம்மம் தவிர வேறு பொருளில்லை என்றது. மாயைச் சேர்க்கையால் பிரம்மமே பிரபஞ்சமாகத் தோற்றமளிக்கிறது என்றது. எனவே பிரபஞ்சம் உண்மையில்லை. பிரம்மத்தை பிரபஞ்சமாகக் காட்டுகிற மாயையும் உண்மையில்லை. பிரம்மமே

உண்மை. இவ்வாறு முற்றிலும் உலக மறுப்பாக இயங்கிய அத்வைதம் செயலுக்குத் தடை விதித்தது. கனவற்ற உறக்கமே அதன் உயர்ந்த லட்சியமாயிற்று. கர்மம் (செயல்) அனைத்தையும் அது இழிவென்று ஒதுக்கியது. இதற்குத் தொழில் புரியும் ஆத்திக வாதிகளிடமிருந்து எதிர்ப்புத் தோன்றிய போது சங்கரர் அவர்களுடைய நிலைப்பாட்டையும் தம்முடைய நிலைப்பாட்டையும் இரண்டு வித சத்தியங்கள் என்று வகுத்தார். தம்முடைய சத்தியம் பரமார்த்திக சத்தியம் அதாவது உயர்ந்த உண்மை என்றும் அவர்கள் சத்தியம் விவகாரிக சத்தியம் அல்லது தாழ்ந்த உண்மை என்றும் பகுபாடு செய்தார். எனினும் உயர்ந்த உண்மையில் தான் அவரது கோட்பாடுகள் அடங்கியிருந்தன. முற்றிலும் உலகை மறுத்த அத்வைதத்திற்கு எதிராக ராமானுஜரும், மத்துவரும், மெய்கண்டாரும் வெவ்வேறு வகையில் பொருளுண்மைக்கும் உலகம் உண்மைக்கும் கருத்து முதல்வாத தத்துவ அமைப்பில் இடம் தேடிந் தந்தனர். சங்கரரது கருத்து முதல் வாத தத்துவ அமைப்பில் பொருள், ஜீவன், பிரபஞ்சம் அனைத்துமே தோற்றங்கள். அனுல் இவர்களுடைய தத்துவங்களில் இவை உண்மைகள். ஆனுல் முதல் காரணம் பிரம்மம், விஷ்னு அல்லது பதி. இவ்வாறு உலக உண்மையை அவர்கள் கருத்து முதல் வாதத்திற்கு உள்ளடக்கினுர்கள். இவர்கள் அனைவருக்கும் உலக விடுதலை, சம்சார விடுதலை என்ற மோட்சம் மனித வாழ்க்கையின் குறிக்கோளாக இருந்தது.

இதுவரை வைதீக தத்துவங்களில் முக்கியமானவற்றினுடைய தத்துவக் கூறுகளை மார்க்சீய வரலாற்றுப் பொருள் முதல் வாத அடிப்படையில் காண முயன்ருேம். இனி அவைதீக தத்துவங்களில் முதன்மையான பௌத்தத்தையும் அவ்வாறே காண முயல்வோம்.

# 7. பௌத்தம்

பௌத்தம், ஜைனம், லோகாயதம் ஆகிய மூன்று தத்துவங்களும் வேதத்தை எதிர்க்கும் தத்துவங்களென வெளிப்படையாகவே கூறிக் கொள்பவை. பௌத்தத்தின் வரலாற்றைத் தெளிவாக அறிய முடிகிறது. புத்தரது பரிநிர்வாணக் காலம் குறித்து வைக்கப் பட்டிருப்பதால், பௌத்த நூல்களின் காலத்தையும், அதன் தத்துவ வளர்ச்சியையும் சரித்திர ரீதியாக அறிவது எளிதாயிருக்கிறது. இங்குத் தத்துவம் என்ற அளவில் அதன் கருத்துத் தோற்றத்தையும், மாற்றங்களையுமே நாம் அறிய முயலுகிறோம்.

## அ. புத்தர் காலத்துப் பௌத்தம்

கௌதமபுத்தர் 80 வயதில் பரிநிர்வாணமடைந்தார் (இறந்தார்). அவரது பரிநிர்வாணம் நிகழ்ந்த காலம் கி. பி. 480 ஆம் ஆண்டு. அவர் உயிர் வாழ்ந்த காலத்தில் அவர் எதனையும் எழுதியதில்லை. அவர் இறந்து 100 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் அவரது உபதேசங்கள் எழுதப்பட்டன. அவருடைய காலத்தில் அவருடைய மாணவர்களாயிருந்த ஆனந்தர், உபகுப்தர் முதலியோரும், அவர்களுடைய மாணவர்களும் முதலாவது பௌத்த சங்கத்தில் கூடி புத்தருடைய உபதேசங்களை எழுதினார்கள். 10,000 பிக்குகள் பௌத்தத் துறவிகள்) கூடி பல மாதங்கள் விவாதித்துப் புத்தரது பேச்சுக்களை எழுத்தில் வடித்துத் தொகுத்தார்கள். இத் தொகை நூல்கள் **'திரிபிடகம்'** என்றழைக்கப்படுகிறது. பிடகம் என்றால் கூடை என்பது பொருள். அவை 1. விநய பிடகம், 2. சுத்த பிடகம், 3. அபிதம்ம பிடகம் என்ற மூன்று பிரிவுகளாகும்.

இவை ஒவ்வொன்றின் உள்ளடக்கம் எவை எனக் கூறுவோம். **விநய பிடகம்,** பிக்குக்கள் ஒழுக்கம் பற்றிய விதிகளை வரையறுத்துக் கூறும் நூல்கள். புத்தர் இறந்த 100 ஆண்டுகளுக்குள்ளேயே நூற்றுக் கணக்கான புத்த சங்கங்கள் தோன்றிவிட்டன. அவை துறவிகளின் மடங்கள். இவற்றை விகாரைகள் என்றழைத்தனர். இத் துறவிகளின் ஒழுக்கம் பற்றிய விதிகள், சங்க ஒழுங்குகள் பற்றிய விதிகள் விநய பிடக நூல்களில் விளக்கப்பட்டன. ஒவ்வொரு நாளும் பிக்குகளும், பிக்குணிகளும் செய்யவேண்டிய கடமைகள் பற்றி இந் நூல்கள் கூறும். பிக்குணிகள் சங்கங்களும் இக் காலத்தில் தோன்றிவிட்டன.

**சுத்த பிடகம்** என்னும் நூற்றொகை புத்தரின் சமயக்கொள்கைகளை விளக்கும் நூல்கள் அடங்கியது. இவற்றிலிருந்துதான் புத்தரின் தத்துவக் கருத்துக்களை அறிந்து கொள்ள முடிகிறது. இது ஐந்து நிகாயங்கள் என்ற பிரிவுகளைக் கொண்டது.

**அபிதம்ம பிடகம்** சுத்த பிடகத்தில் விளக்கப்பட்ட கருத்துக்களை விரிவாக விளக்கும் நூல்கள் இத்தொகுப்பில் உள்ளன. புத்தருடைய கருத்துக்களின் விளக்க உரைகள் இவற்றில் காணப்படும். இது உயர்ந்த சமய நூல் தொகுப்பாகக் கருதப்பட்டது. சுத்த பிடகம் சாவகர் என்ற இல்லறத்தாருக்கும், அபிதம்மம் என்பது பிக்குகள், பிக்குணிகள் என்ற துறவிகளுக்கும் உரியன.

இம் மூன்று பிடகங்களிலும் அடங்கிய நூல்கள் பண்டை மகத நாட்டில் பேச்சு வழக்கில் இருந்த **பாலி** மொழியில் எழுதப்பட்டவை. இவை திருமுறை நூல்களாகக் (canonic texts) கருதப்பட்டன. அதாவது இவையே பௌத்தர்களுக்குப் பிரமாணமான நூல்கள். இவை தவிர "**மிலிந்தபன்ஹா**" என்ற ஒரு நூலும் பௌத்தரால் பெரிதும் போற்றப்பட்டது. கிரேக்க மன்னன் மிலிந்தருக்கும், நாகசேனர் என்ற பௌத்த பிக்குவிற்கும் நடைபெற்ற தத்துவ சம்பந்தமான உரையாடலின் எழுத்து வடிவம் இந்நூல் என்று கருதப்படுகிறது. இந்த அரசன் கி. மு. 125 முதல் 95 வரை வாழ்ந்தவன்.

பாலிமொழி நூல்கள் தவிர, முற்கால சமஸ்கிருதத்தில் (பிராகிருதம்-புராணசம்ஸ்கிருதம்) எழுதப்பட்ட பல நூல்களும்

உள்ளன. புத்தரது வாழ்க்கை வரலாறுகள் பல சம்ஸ்கிருத மொழியில் உள்ளன. அவற்றுள் சில: மஹாவஸ்து, லலிதவிஸ்தாரம், புத்தசரிதம், ஜாதகமாலை, ஆரியசூரா முதலியவை. ஆரியசூரா என்னும் நூல் ஜாதகமாலை என்ற நூலில் காணப்படும் புத்தர் வாழ்க்கைக் கதைகளில் 348ஐ தேர்ந்தெடுத்துத் தொகுக்கப்பட்ட தொகை நூல். ஜாதகமாலையில் 550 கதைகள் உள்ளன.

புத்தர் காலத்துப் பௌத்த சமயக் கருத்துக்களுக்கும் பிற்கால பௌத்தக் கருத்துக்களுக்கும் அடிப்படையான வேறுபாடுகள் உண்டு. ஆயிரம் ஆண்டுகளில் ஏற்பட்ட சமூக மாறுபாடுகளின் பிரதிபலிப்பாக அவை விளங்குகின்றன. பழைய கருத்துக்களும் வளர்க்கப்பட்டன. இதனை தேர வாத பௌத்தம் அல்லது ஹீனயானம் என்றழைப்பார்-புதிய கருத்துக்களையும், அதன் வளர்ச்சியையும் மஹாரியான பௌத்தம் என்றழைப்பர். தத்துவக் கோட்பாடுகள், சமயக்கொள்கைகள், ஒழுக்கமுறைகள் இவற்றால் வேறுபட்ட பௌத்த சமயப் பிரிவுகள் 1000 ஆண்டுத் காலத்தில் தோன்றி ஆயிரக்கணக்கான நூல்கள் எழுந்தன. இவை பௌத்தம் பரவிய நாடுகளின் மொழிகளில் எழுந்தன. இவற்றில் இந்திய ஆய்வாளருக்குக் கிடைப்பன பாலி, பிராக்ருதம், சம்ஸ்கிருதம், திபெத்தியன் ஆகிய மொழிகளில் உள்ளனவே. பிறமொழிகளில் உள்ளவை மொழிபெயர்ப்புகளாகக் கிடைக்கின்றன. தமிழில் தத்துவ நூல்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் காவியங்களிலும் இலக்கிய நூல்களிலும், பௌத்தக் கருத்துகள் காணக்கிடைக்கின்றன. மணிமேகலை இவற்றுள் முக்கியமானது.

### ஆ. ஆரிய சத்தியம்

புத்தர் காலத்தில் புத்தர் உபதேசித்த கொள்கையை ஆரிய சத்தியம் (மேன்மையான உண்மை) என்றழைக்கிறார்கள். புத்தரது காலத்தில் அவர் உபதேசித்ததாக, 100 ஆண்டுகளுக்குப் பின்னர் தொகுக்கப்பட்ட நூல்களில் கூறப்படுவதன் சுருக்கத்தை இங்குத் தருவோம். இதுவே புத்தர் காலத்துப் பௌத்தம்.

உலகத்தின் துன்பம் பற்றிய வருணனையோடு புத்தர் தமது ஆய்வைத் தொடங்குகிறார். உலகம் துன்பமயமானது. அது ஒரு

துன்பக்கடல். அதில் நீந்திக் கரை சேருவது கடினமான காரியம். "எத்தனை பிறவி பிறந்திறந் திளைத்தேன்" என்ற சைவக் கருத்திற்கும், இவருடைய கருத்திற்கும் வேறுபாடில்லை. உலகத்தில் காணப்படும் துன்பம் உண்மையென்று ஒப்புக் கொண்டு, அதன் காரணம் என்னவென்று, புத்தர் விசாரிக்கப் புகுகிறார். தொடர் சங்கிலிபோல 12 காரணங்கள் இருப்பதாக அவர் விளக்குகிறார்.

எதுவும் நிலையானதல்ல. எல்லாம் மாறிக் கொண்டிருப்பவையே. என்றுமுள்ள ஆன்மா, பிரம்மம், கடவுள் என்பன உண்மையல்ல. மாறுதல் என்னும் மண்டிலச் சுழற்சியில் உள்ளவையே உலகிலுள்ள அனைத்தும். இதனை **அநித்திய வாதம்** என்பர். நித்தியமான வஸ்து எதுவுமில்லை என்பது இதன் பொருள். இக் கொள்கையின் ஒரு அம்சம் ஆத்மா இல்லை என்று வாதாடுவது. அதற்கு **அனாத்ம வாதம்** என்று பெயர்.

உயர்ந்த சத்தியம் நால்வகைப்படும். இதைப் புத்தர் ஆரிய சத்தியம் என்பர்.

1. எல்லாம் துக்கமயம் இது துக்கம் என்ற சத்தியம்.
2. துக்கத்திற்குக் காரணம் உண்டு. இது துக்ககாரணம் என்ற சத்தியம்.
3. துக்கத்தைப் போக்கமுடியும். இது துக்க நிவாரணம் என்ற சத்தியம்.
4. துக்கத்தைப் போக்க ஒரு பாதை உண்டு. இது துக்க நிவாரண மார்க்கம் என்னும் சத்தியம். இதை அஷ்டாங்க மார்க்கம் எனப் பௌத்தர் அழைப்பர்.

நான்கு கூறுடைய ஆரிய சத்தியம் என்னும் தமது தத்துவத்தைப் புத்தர் வாரணாசியில் செய்த சொற்பொழிவில் பின்வருமாறு கூறுகிறார்.

1. துக்கம் என்னும் புனிதமான சத்தியம் இதுதான். பிக்குகளே பிணி, துன்பமாகும். மூப்பு, துன்பமாகும். சாக்காடு துன்பமாகும். நேசிப்போரைப் பிரிவது துன்பமாகும். ஆசைப்

படுவது கிடைக்காவிட்டால் துன்பம். உலக பந்தங்களில் சிக்கிக் கொள்ளுவது துன்பமாகும்.

பிக்குகளே, இப்பொழுது நான் சொல்லப்போவது இரண்டாவது சத்தியமாகும். அதுதான் **துக்கத்தின் காரணம்** எதுவென்பது. அது 'உயிர்த்தாகம்' என்பது. உயிரைப் பாது காத்துக் கொள்ளும் ஆசை. இந்த ஆசைதான் பிறப்புத் தொடர்ச்சிக்குக் காரணம். இதுவே இன்ப ஆர்வம், அதிகார ஆசை முதலிய எல்லா ஆசைகளுக்கும் ஆணிவேர். இவ்வாசைகள் ஒன்ருென்று நிறைவேறும்.

பிக்குகளே, இனி மூன்ருவது சத்தியத்தைப்பற்றிச் சொல்லு கிறேன். அதுதான் **துக்க நிவாரணம்**. துக்கத்தைப் போக்குவது எவ்வாறென்று அறிந்து அதனைப் போக்குதல். அடிப்படையான உயிராசையைப் போக்கி எலலா ஆசைகளேயும் வேரோடுகளேவது. நம்மை ஆசைகளிலிருந்து விடுவித்துக் கொள்ளுவது. ஆசைக்கு இடம் கொடாமல் வாழ்வது. இதுவே துக்க நிவாரணம் என்னும் சத்தியம்.

பிக்குகளே, இனிமேல் துக்கத்தைப் போக்குவதற்குரிய வழியைப்பற்றிச் சொல்லுகிறேன். அதுதான் **துக்க நிவாரண மார்க்கம்.** அதனை **'அஷ்டாங்க மார்க்கம்'** (எட்டுறுப்புப் பாதை) என்று அழைப்போம். அப் பாதையின் உறுப்புகளாவன: 1. நன்னம்பிக்கை 2. நல்லுறுதி 3. நற்பேச்சு 4. நற்கிரியை 5. நல்வாழ்க்கை 6. நன்முயற்சி 7. நல்லெண்ணம் 8. நல் தியானம்.

### இ. ஆரிய சத்தியக் கொள்கையின் வரலாற்றுப் பின்னணி

இவ்வாறு உலகத்தைத் துன்பக்கடலாக புத்தர் வருணித்துக் கூறுவது ஏன்? அவருடைய காலத்தில் அவர் கண்காண நடந்த சரித்திர நிகழ்ச்சிகள் அவர் உலகம் துன்பமயம் என்று எண்ணு வதற்குக் காரணமாயிருந்தன. அவருடைய வாழ்க்கைச் சரிதை யைக் கூறும் நூல்களிலிருந்து அவரது காலத்துச் சமுதாய நிகழ்ச்சி களே அறிந்து கொள்ளலாம். அவரே ஒரு குலக்குழுவைச் சேர்ந் தவர். அவர் காலத்தில் மிகப்பல இனக்குழுக்கள் வாழ்ந்திருந்தன.

இவரது குலத்திற்குச் 'சாக்கியர்' என்று பெயர். இவரையே சாக்கிய முனி என்று பௌத்தர்கள் அழைத்தனர். இவருடைய காலத்தில் மாபெரும் பேரரசுகள் தோன்றி இனக்குழுக்கள் மீது படையெடுத்து அவர்களுடைய சமூக வாழ்க்கையை அழித்தன. வஜ்ஜியர்கள், சாக்கியர்கள் ஆகிய குலக்குழுக்களின் சமுதாய வாழ்க்கை அழிக்கப்பட்டது பற்றி சமகாலச்சான்றுகள் உள்ளன. புத்தர் வாழ்க்கையைக் கூறும் நூல்களிலேயே இதற்குச்சான்றுகள் உள்ளன. இதில் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுவோம்.

அஜாதசத்ரு என்னும் பேரரசன் வஜ்ஜியர்கள்மீது படையெடுத்து வெற்றி பெற்றான். இவ் வெற்றியை வாழ்த்துமாறு வேண்டிக் கொண்டு தனது அமைச்சன் ஒருவனைப் புத்தரிடம் அனுப்பினான். புத்தர் மௌனமாயிருந்தார். அஜாதசத்ருவின் அமைச்சன் போனபின்னர் அவர் தமது சீடர்களிடம் கூறினார்.

"ராஜ்யங்களை ஆளுகிற அரசர்கள் பொருளைக் குவித்து வைத்துள்ளார்கள். ஒருவர்மீது ஒருவர் பொறாமை கொண்டு, ஒருவர் பொருளை மற்றொருவர் பிடுங்கிக் கொள்ளப்பார்க்கிறார்கள். இதற்காகப் பல போர்களை நடத்துகிறார்கள். இதோடு வரிவிதிப்பு, அடிமை முறை,வன்முறையால் பொருளைப் பிடுங்கிக் கொள்ளுதல், கொலை, கொள்ளை, வட்டி வாங்குதல் முதலிய முறைகளெல்லாம் வாழ்க்கையில் புகுந்துவிட்டன." இத்தகைய பல சம்பவங்கள் ஜாதகக் கதைகளில் கூறப்படுகின்றன. இவையெல்லாம் புத்தர் காலத்து நிகழ்ச்சிகள். இந்தக் காலத்தில் இது துக்க மயமான வாழ்க்கையை மாற்றுவதற்கு என்ன செய்வது? அவர் எதார்த்தத்தை நேருக்கு நேர் கண்டதால்— கடவுளை நம்பவில்லை. துக்கங்களை மாற்றுவதற்கு யாக யக்ஞங்கள் முதலிய சடங்காசாரங்களை நடத்துவதிலும் அவருக்கு நம்பிக்கையில்லை. வாழ்க்கையைத் துறந்து ஆசிரமங்களில் வாழும் துறவு வாழ்க்கையிலும் அவர் மனம் செல்லவில்லை. உபநிஷத ஆன்மீகக் கருத்துக்களான பிரம்மம், மாயை ஆகியவற்றில் அவர் மனம் ஈடுபடவில்லை. அப்பாலைத் தத்துவங்களை அவர் போதிக்கவில்லை. நடைமுறை சாத்தியமான ஒரு தீர்வை அவர் நாடினார். அவருடைய காலத்தில் சமூக வளர்ச்சி குறித்த சமூக நியதிகளை அவரால் புரிந்து கொள்ள

முடியவில்லை. ஒரு உண்மையான நடைமுறைப் பிரச்சினைக்கு ஒரு கருத்துவயமான கற்பனைத் தீர்வை அவர் கண்டுபிடித்தார். அவர் கூறினர்.— ''இந்த வாழ்க்கையில், மனத்தில் தோன்றுகிற கள்வெறி போன்ற ஆசைகளை அடக்குவதற்கு நான் உங்களுக்கு ஒரு கொள்கையை உபதேசிக்கிறேன்''. இவ்வாறே கடவுளில்லாத ஒரு சமயத்தை அவர் கண்டு பிடித்தார். உள்ளத்தை தூய்மையாக்கும் ஒரு திட்டத்தை அவர் உபதேசித்தார். அதாவது புதிய சமுதாயத்தில் நன்னம்பிக்கை நல்லுறுதி போன்ற மதிப்புக்கள் நசுக்கப்படுவதை அவர் கண்டார். அவர் காலத்தில் தோன்றி வளர்ந்து வந்த சமுதாயம் வர்க்கச் சமுதாயமாகும். இச் சமுதாயத்தில் பழங்கால மதிப்புக்களைச் செயல்படுத்த முடியவில்லை. அதனுல் மக்கள் அதர்மம் நிறைந்த இச்சமுதாயத்திலிருந்து வெளியேறி நன்மதிப்புக்களை நடைமுறையாக்கக்கூடிய சங்க அமைப்பில் வாழவேண்டும் என அவர் போதித்தார், அவர் கூறிய சங்கம் பௌத்த பிக்குகளின் சங்கமாகும். இனக்குழு பொதுவாழ்க்கையை முன் மாதிரியாகக் கொண்ட ஒரு ஸ்தாபனமே பௌத்த சங்கமாகும். இவ் விரண்டு ஸ்தாபனங்களிலும் தனியுடைமை முறை இல்லை. உறுப்பினர் அனைவரும் சமம். பூரணமான ஜனநாயக உரிமைகள் உறுப்பினர்களுக்கு உண்டு. ஆனுல் உற்பத்தி உறவுகளுக்கு வெளியே சமுதாயத்திலிருந்து வெளியேறியவர்களைக் கொண்டு அழிந்துவிட்ட சமுதாயத்தின் வாழ்க்கை மதிப்புக்களை லட்சியங்களாகக் கொண்டு அமைக்கப்பட்டது பௌத்த சங்கம்.

துக்கத்தின் காரணத்தைத் தேடும் பொழுது இயற்கை காரண காரிய கொள்கை(பிரத்யாத்ய சமுத்பாவ)யிலிருந்து அவர் தொடங்கினுர். இதன் பொருளாவது ''அது நிலை கொண்டிருக்கும் பொழுது இது மாறுகிறது. அது தோன்றும் பொழுதே இதுவும் தோன்றி விடுகிறது. அது இல்லாத பொழுது இதுவும் இல்லாமல் போய் விடுகிறது. எதுவும் நிலைத்திருப்பதில்லை. நமது மனமும் புறப் பொருள் உலகமும் எப்பொழுதும் மாறுகிற நிலைமையில் உள்ளன.'' இரண்டு உவமைகள் இக் கொள்கையை விளக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒன்று, ஜுவாலை எரிதல். இரண்டு

நீரோடையின் ஓட்டம். ஒரே விதமான நிகழ்ச்சிகள் ஒன்றையொன்று தொடர்ந்து வருவதால் ஜுவாலையும், நீரோட்டமும் ஒரே விதமாகத் தோன்றுகின்றன. ஆனால், உண்மையில் அப்படியல்ல. சிறிது கால இடைவெளியில் எரிகிற துகள்களின் தனித்தனி எரிதல் நிகழ்ச்சியே ஒரே ஜுவாலையாகத் தோன்றுகிறது. தனித்தனி துகளின் வேகமான ஓட்டமே நீரின் ஓட்டமாகக் காணப்படுகிறது. எல்லாப் பொருள்களும் நிலைத்திராமல் மாறிக்கொண்டிருக்கின்றதெனும் கொள்கைக்கு அநித்திய வாதம் என்று பெயர். எல்லாப் பொருள்களும், மாறுதல்களும் ஒரு கணமே நிலைத்திருக்கிறது எனும் கொள்கைக்கு க்ஷணிக வாதம் என்று பெயர். எனவே என்றும் நிலைத்திருக்கும் பிரம்மா, ஆன்மா என்ற கருத்துக்களை பௌத்தம் மறுத்தது.

இதே நூற்றுண்டில் கிரேக்கத் தத்துவ ஆசிரியர் கிராக்ளிட்டஸ், புத்தருடைய அநித்ய வாதத்தையும் க்ஷணிக வாதத்தையும் ஒத்திருக்கும் ஒரு கொள்கையைப் போதித்தார். கிராக்ளிட்டஸ் பற்றி எங்கெல்ஸ் எழுதுவதாவது: "மிகச் சிறிய துகளிலிருந்து மிகப் பெரிய பொருள் வரை, ஒரு மணல் தூளிலிருந்து சூரியன் வரை, ஒரு செல்லிலிருந்து மனிதன் வரை இவ்வுலகில் அனைத்தும், தோன்றி மாறுதலடைந்து அழிந்து கொண்டிருக்கின்றன. சலனமும் மாறுதலும் உலகின் அனைத்தினுடைய இயற்கை. கிரேக்கர்கள் இம் முடிவுக்கு வருவதற்கு இயற்கை பற்றிய அவர்களது ஆர்வமும், ஆய்வுமே காரணம். இம் முடிவு அனுபவத்தின் அடிப்படையில் உருவானது. எனவே தெளிவான உருவத்தில் இம் முடிவு கூறப்பட்டுள்ளது. ஆரம்பகால பௌத்தத்தில் இந்திய தத்துவத்திலேயே முதன் முறையாக இயக்கவியல் சிந்தனை காணப்படுகிறது. ஆனல் கிராக்ளிட்டஸ் போன்ற கிரேக்க தத்துவ ஞானிகளின் சிந்தனையையும் முடிவுகளையும் போன்று புத்தரது சிந்தனையும், முடிவுகளும் விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் எழுந்தவை அல்ல. ஆனல் உபநிஷத பிரம்மா, ஆன்மா முதலியவற்றை எதிர்த்து எழுந்த சமயவாதமாகும்.

### ஈ. முதல் பிரிவினை

புத்தர் மறைவிற்குப்பின் 200 ஆண்டுகளில் மொத்தம் 18 பௌத்தப் பிரிவுகள் தோன்றிவிட்டன. அவை தனித்தனிச்

சங்கங்களாகத் தத்துவ வேறுபாடுகளோடும், சமய ஒழுக்க வேறு பாடுகளோடும் இயங்கத் தொடங்கின. அதற்குப்பின் 18 பிரிவு களும் பிளவுபட்டு முதல் நூற்ருண்டின் இறுதியில் நூற்றுக் கணக்கான பிரிவுகளாக இயங்கின. நமக்கு அவற்றின் தத்துவ வேறுபாடே முக்கியமானது. ஆயினும் புத்தர் காலத்துப் பௌத்தம், முதன் முதலில் இரண்டாகப் பிரிந்ததும், அதற்குப் பின் 18 பிரிவுகளாகப் பிரிந்ததுமான வரலாறும், பிரிவ தற்குக் காரணமான தத்துவ வேறுபாடு தோன்றியதன் அடிப் படையை இங்குக் காண்போம். முதன்முதலில் பௌத்தம் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்தது. பிற்காலத்தார், அதை ஈனயானம், மஹா யானம் என்று அழைக்கிருர்கள். ஈனயானம் என்பது பழைய மதம். அதிலிருந்து பிரிந்தது மஹாயானம். பழைய மதத்தை தேரவாதம் என்றும் அழைப்பதுண்டு.

மஹாவம்சம் என்னும் பௌத்த சமய வரலாற்று நூல் இலங்கையில் தோன்றியது. அதுஆதி சங்கம் பிளவுண்ட விதத்தை 4-வது அத்தியாயம் 8 முதல் 65 சுலோகங்களில் கூறுகிறது. அதன் சுருக்கத்தை இங்குத் தருவோம். இது தேரவாத பௌத்த நூல்.

''காலசாகன் ஆட்சியின் பத்தாவது ஆண்டின் முடிவில் சம்புத்தர் (கௌத்தம புத்தர்) பரிநிர்வாணமடைந்து 100 ஆண்டுகள கழிந்திருந்தன. (ம. வ—8)

அச்சமயம் வைசாலியில் வஜ்ஜியப் பிரிவைச் சேர்ந்த பிக்குகள் பத்து அம்சங்கள் நியாயமானவை என்று வெட்கமின்றிப் பிரசாரம் செய்தனர். (ம. வ. 9)

அதாவது 'கொம்பில் உப்பு, 'இரண்டு விரல் அகலம்' 'கிராமவிஜயம்' 'வாசம்' 'சம்மதம்' 'கடையாத பால்' 'புளிக்காத கள்' (ம. வ. 10)

'நூல் இல்லாத ஆசனம்', 'தங்கம்' ஆகியவை'' (மா. வ: 111)

இவற்றின் பொருளை விளக்குவோம் 1. 'கொம்பில் உப்பு'— உணவுப் பொருள்களைப் பக்குவப்படுத்த கொம்புக் குப்பியில்

உப்பு சேகரித்து வைத்துக் கொள்ளலாம். 2. இரண்டு விரல் அகலம்—உரிய நேரத்திற்குப் பின்னும் சூரியநிழல் இரண்டு விரல் அகலம் அதிகமாவதற்குமுன்னும் மதிய உணவு அருந்தலாம். 3. கிராம விஜயம்—உணவுண்ட பின்னும் மக்கள் அழைத்தால் கிராமத்திற்குச் சென்று உணவருந்தச் செல்லலாம். 4. வாசம்—அந்தந்தப் பகுதியில் வாழும் பிக்குகள், தனித்தனியே கூடி உபோசத விருந்தை நடத்தலாம் 5. அனுமதியின்றிச் சங்கக் கூட்டத்திற்கு வராத பிக்குகளின் அனுமதியைப் பின் பெற்று விடலாம் என்ற அனுமானத்தில் அதிகாரப் பூர்வமான சங்க நடவடிக்கைகளை நடத்தலாம். 6. சம்மதம் புத்தரின் நடைமுறை என்பதால் சில காரியங்களைச் செய்யலாம். 7. கடையாத பால்—உணவு நேரம் கடந்த பின்னரும் கடையாத பால் அருந்தலாம். 8. புளிக்காத கள்—புளிக்காத கள்ளைக் குடிக்கலாம். 9. நூல் இல்லா ஆசனம்—நிர்ணயிக்கப்பட்ட முறையில் இல்லாத பாய்களை உபயோகிக்கலாம். 10. ஜாதரூபராஜதம்—தங்கம் வெள்ளி முதலிய உலோகங்களை நன்கொடையாகப் பெற்றுக் கொள்ளலாம்.

மகாவம்சம் குறிப்பிடும் வைசாலி ராஜ்யத்து, விஜ்ஜியப் பிரிவைச் சேர்ந்த பௌத்த சங்கப் பிக்குகள், சில கண்டிப்பான கட்டுப்பாடுகளைத் தளர்த்தி மக்களிடமும், அரசனிடமும் சில பொருள்களை வாங்கிக் கொள்ளும் வழக்கத்தை ஏற்படுத்தி அவற்றையே ஒழுக்க விதிகளாக்கிக் கொண்டனர் என்பதும் இச் சுலோகங்களிலிருந்து தெரிகிறது.

இப் பிரச்சினை குறித்து நடந்த நடவடிக்கைகளைப் பற்றி மகாவம்சம் கூறுவதைக் காண்போம். இந்தப் பிரச்சினையை முடிவுகட்ட பாரதம் முழுவதிலுமுள்ள தேரர்களுக்கு அறிவித்து பிக்குகளின் மகாசங்கம் ஒன்றை யாசதேரர் அகோ கங்கமலையில் கூட்டினார். சங்கங்களின் தலைவர்களுக்கு 'ஸ்தவீர' என்று பெயர். அச் சொல்லின் தமிழ்த்திரிபே தேரர் என்பது. தேரர் களின் தலைவருக்கு 'மகாஸ்தவீர' மகாதேரர் என்று பெயர். யாசதேரர் அப்பொழுது மகாதேரராக இருந்தார். தேரர்கள் வைசாலித்தேரர்களின் தலைவரான ரேவததேரரின் தலைமையில் கூடினர். வியாச தேரர் வஜ்ஜியப் பிக்குகளின் பத்து ஒழுக்க

முறைகள் வினய பிடகம் என்னும் பண்டைய ஒழுக்க நூலின் விதிகளுக்கு உடன்பட்டவையா என்று வினவினர். அவை தவருனவை என்று வைசாலி பிக்குகள் கூறினர். அப்படியானல் புத்த சங்கத்தைக் கூட்டி அவை தவருனவை என்று முடிவு கட்ட வேண்டும் என்று வியாச தேரர் கேட்டுக் கொண்டார்.

தவருன வழியைப் புகுத்திய வஜ்ஜிய பிக்குகள் ரேவத தேரரைத் தங்கள் கட்சியில் சேர்க்க முயற்சித்தனர். அவருக்குக் காணிக்கையாக பிக்குகளுக்குத் தேவையான பல பொருட்களுடன் வைசாலிக்குப் புறப்பட்டு வந்தனர். வரும் வழியில் புருஷபுரம் சென்று காலசோக மன்னனைச் சந்தித்துத் தங்கள் விசாலரயைக் கைப்பற்றிக் கொள்ள ஆயிரக்கணக்கான பிக்குகள் திரண்டு வருவதாகவும் அதனைப் பாதுகாத்துக் கொடுக்கும்படியாகவும் வேண்டினர். அரசன் அதனை நம்பி பாதுகாப்பு அளிக்கச் சம்மதித்தான். ஆனல் அன்றிரவு துறவியான தேரி நந்தா என்னும் அவனுடைய சகோதரி அரசனது கனவில் தோன்றி ரேவத தேரரின் தலைமையை வெறுக்கும் பிட்சுகளின் உண்மையான பாதையைப் பின்பற்றுபவர்களை அரசன் ஆதரிக்க வேண்டுமென்று சொன்னுள். அரசன் மறுநாள் அவர்கள் கொள்கைகளுக்கும் சங்கத்திற்கும் பாதுகாவலனுக இருக்கப்போவதாகவாக்களித்தான்.

இதற்குப் பிறகு இப்பத்து ஒழுக்க முறைகள் குறித்து முடிவு செய்ய உபகுழு முறையில் [உபாஹிகம்] பிட்சுகளை ரேவததேரர் நியமித்தார். அவர்கள் திரிபிடகத்தைக் கற்றுத் தேர்ந்து தச சிலத்தை உணர்ந்து வாழ்ந்தவர்கள். உபகுழு உறுப்பினர்கள் சப்த காமி தேரரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். பல நாட்கள் விவாதித்த பின்னர் அவர் பத்து அம்சங்களும் பௌத்த சங்க மரபுகளுக்கும் பிட்சுகளின் ஒழுக்க நெறிகளுக்கும் முரணுனவை என அறிவித்தார். இதன்பின் பிட்சுகள் மகாசபை கூடி இம்முடிவை உறுதி செய்தது. இவ்வாறு பத்து ஒழுக்க விதிகளைப் பின்பற்றிய பிட்சுகளின் போதனைகளை இம் மகாசபை மறுத்தது.

இதன் பின்னர் ரேவததேரர் பிட்சுகளின் மகாசபையினின்று 700 பிட்சுகளை இழந்து விட்டார். இவர்கள் காலசோபரது

பாதுகாப்பில் ரேவததேரர் தலைமையில் கூடித் தர்ம கோட்பாடு களைத் தொகுத்தனர். ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுப் பின்னர் பரப்பப்பட்ட தர்மக் கோட்பாடுகளை இவர்கள் ஏற்றுக் கொண்டவர்களாதலால் இவர்கள் 8 மாதங்களில் அனைத்து நூல் களையும் தொகுத்து விட்டார்கள்.

ஆரம்ப காலத்தில் புத்தரின் சீடர்களும் அவர் காலத்து தேரர் களும் கூடித் தொகுத்த தர்மக் கோட்பாடுகள் தேரவாதம் எனப் பட்டது. இத் தேரவாத மரபு முதல் 100 வருஷத்தில் ஒன்ருகவும் ஒன்றுபட்டதாகவும் இருந்தது. ஆனல் இதன் பின்னர் பிறதர்மக் கோட்பாடுகள் எழுந்தன. மேலே விவரித்த மகா சபையை நடத்திய தேரர்கள் தவருன வழி என நிராகரிக்கப் பட்ட பாதையில் சென்ற 10,000 பிட்சுகள் மகாசம்ஹிகா என்ற ஒரு பிரிவை நிறுவினர். இவ்விரண்டு பிரிவுகளிலிருந்து பல பிரிவுகள் தோன்றின. இவ்வாறு புத்தர் மறைவிற்குப் பின் 200 ஆண்டுகளில் இப்பெரும் பிரிவுகளிலிருந்து ஆறு உபபிரிவுகள் தோன்றின. இவ்விபரம் இலங்கையில் நான்கு முதல் ஆறும் நூற்ருண்டு வரை எழுதப்பட்ட மகாவம்சத்திலிருந்து கிடைக் கிறது. எனவே எழுதப்படுவதற்கு முன்பே ஆசாரிய பரம்பரை என்ற செவிவழிக் கதைகள் வழங்கியிருந்தன. அவற்றை ஆதாரமாகக் கொண்டே பிற்காலச் சங்க வரலாற்றுக் கதைகள் தோன்றின. இயற்கைக்கு அதீதமான கதைகளை விட்டுவிட்டுப் பார்த்தால் இவை சங்கம் இரண்டாகப் பிரிந்த நிகழ்ச்சியை விரிவாகக் கூறுகின்றன. அசோகருக்கு முன்பே காலசாகர் காலத்தில் சங்கத்தில் முதல் வேற்றுமை தோன்றியது. அது பௌத்த பிக்குகளிடையே பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியது என்பதனை முற்கூறிய பகுதி தெளிவாகக் கூறுகிறது.

எதற்காகக் கருத்து வேற்றுமை ஏற்பட்டதென்பதை மேற்கண்டப் மேற்கோள் பகுதி தெளிவாக்கவில்லை; மேற் பார்வைக்குப் புத்தப் பிக்குகளின் நடைமுறை வாழ்க்கையில் பத்து விதமான கட்டுப்பாடுகள் இருத்தல் வேண்டுமா வேண் டாமா என்பது பற்றி விவாதம் எழுந்ததாகத் தோன்றுகிறது. இப்பிரச்சினை பற்றிப் பிக்குகளுக்கு ஆர்வம் இருந்தபோதிலும்

அரசனுக்கும் மற்றவர்களுக்கும் அவ்வளவு ஆர்வம் இருந்துவிட முடியாது. எனவே பொதுமக்களுக்கும் மக்களுக்கும் ஆர்வம் ஏற்படுத்திய வகையில் ஏதேனும் அடிப்படையான வேறுபாடு இருந்திருத்தல் வேண்டும். இதனை நான்காவது அத்தியாயம் 63 வது சுலோகம் குறிப்பிடுகிறது. "தர்ம போதனையிலேயே பிக்குகளிடையே வேறுபாடு தோன்றிவிட்டது. அதாவது தத்துவக் கருத்துக்களில் மாறுபாடு காணப்பட்டது." தேரவாதிகள் தங்கள் சங்கத்தைப் பற்றிய அக்கறை மட்டுமே கொண்டன ரென்றும் ஆனல் பிற்கால மகாசங்கிகள் அரசனேடும் மக்களோடும் நெருங்கிய உறவு கொண்டு வாழ முனைந்தன ரென்றும் அதனுல் பல பொருட்கள் வாங்கிக் கொண்டு அவர்களோடு பழகலாம் என்ற விதிகளைத் தங்கள் சங்கங்களில் கடைப்பிடித்தார்களென்றும் தெரிகிறது.

இதை எதிர்த்துத்தான் தேரவாதிகள் அவர்களைச் சங்கத்திலிருந்து விலக்கினர். ஆயினும் அவர்கள் பணிந்து போகவில்லை. தனியான சங்கம் அமைத்து மஹாசங்கிகர்கள் என்று தங்களுக்குப் பெயர் வைத்துக் கொண்டார்கள்.

# 8. புதிய பௌத்தம்

## அ. மஹாயானம் — நாகார்ச்சுனர்

இதனைக் குறித்துத் தேவி பிரசாத் சட்டோபாத்யாயா தனது 'ஆன்மீக வாதம்—ஓர் அறிமுகம்' என்ற கட்டுரையில் விளக்கம் கூறுகிறார். மஹாயான பௌத்தம் தேரவாதத்தினின்றும் அடிப் படைத் தத்துவத்தில் வேறுபட்டது. ஆயினும் புத்தருடைய போதனைகளிலிருந்துதான் இத்தத்துவம் தோன்றியது என்பதைக் காட்ட மஹாயான பௌத்தத்தை நிறுவிய நாகார்ச்சுனர் கையாண்ட முறைகளை தேவி பிரசாத் சுட்டிக்காட்டுகிறார். அவரது விளக்கத்தை இங்கு காண்போம்.

"ஆன்மீக தத்துவவாதிகள் என்ற முறையில் பௌத்தர்களும் கடைசியில் தமது சொந்தக் கொள்கைக்கு ஒருவிதமான தெய்வீக அங்கீகாரத்தையோ அல்லது முன்னோர் நூல் முடிவையோ சான்று காட்ட வேண்டியதாயிற்று. அவர்களைப் (மஹாயானிகள்) பொறுத்த மட்டில் இது தனித்தன்மையான கடினமான பிரச்சினை யாயிருந்தது. அவர்களுடைய சமய ஸ்தாபகர் வரலாற்றுக் காலத் தில் வாழ்ந்த மனிதர். தன் பக்கத்திலிருப்பவன் துன்பத்தைப் பார்க்கப் பொறாதவர். அதனால் மனம் நெகிழ்ந்து மனத்தில் ஒரு சாந்தியை ஏற்படுத்த உபதேசித்த மனிதர். எனவே அவர் அப்பாலைத் தத்துவம் (metophysics) எதையும் உபதேசிக்காத யதார்த்தவாதியாக இருந்தார். ஆண்டவனிடம் அவர் நம்பிக்கை வைக்கவில்லை. அவருக்குச் செலுத்துகிற பிரார்த்தனைகளும், வேள்விகளும் மனிதகுல துன்ப துயரங்களுக்கு ஒரு மாற்றாக ஆக முடியாதென அவர் உபதேசித்தார். புத்தர் வற்புறுத்திச் சொன்ன தெல்லாம், பிறப்பிறப்பைப் பற்றி புரிந்து கொள்வதைப் பற்றி யும், அதிலிருந்து விடுதலை பெறுவதைப் பற்றியும்தான். விடுதலை பெறுவதற்குரிய வழி ஒரு குறிப்பிட்ட ஒழுக்க நெறியைப் பின்

பற்றுவதுதான் என்று புத்தர் போதித்தார். மஹாயான பௌத்தர் களின் அபரிமிதமான அப்பாலைத் தத்துவங்களைப் போன்ற அவர் காலத்துத் தத்துவங்களை அவர் வெறுத்துப் பேசியிருந்தார். இந் நிலை அவர்களுக்கு மிகவும் சங்கடத்தை விளைவித்தது. பௌத்த சமய வரலாற்றிலிருந்து புத்தர் ஒரு வரலாற்று மனிதர் என்ற உண்மை மறைந்து போகும் வரை இது நீடித்தது.

"இத்தகைய சூழ்நிலைகளில் மஹாயானர்கள் தமது ஆன்மீக அப்பாலைத் தத்துவங்களுக்கு (idealistic metaphysics) தெய்வீக அங்கீகாரத்தையோ, புராதன பௌத்தத்தின் கொள்கை ரீதி யான உடன்பாட்டையோ பெறுவது எவ்வாறு சாத்தியமாகும்?

"மஹாயானக் கொள்கையின உண்மையான தோற்றம் பற்றிய வரலாற்றை ஆராய வேண்டியது இன்றுகூட முக்கியமான விஷயமாகவே உள்ளது. பௌத்த மரபுப்படி சொல்லப்படுகின்ற ஒன்றை நாம் முழுமையாக மறுத்துவிட முடியாது. புத்தர் இறந்த நூறுண்டுகளுக்குப் பின், சங்கத்திலிருந்து வெளியேறிய மஹா சங்கிகர்கள்தாம் மஹாயானத்தின் முதல் முன்னேடிகள். லோகோத்தார புத்தர் என்று அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட கொள்கையே பிரிவு ஏற்பட்ட இடம் எனலாம். புத்தரை ஒரு வரலாற்று மனிதராக ஏற்றுக் கொள்ள அவர்கள் தயாராக இல்லை. அவர் அமானுஷ்ய சக்தியுடையவர் என்றும், தெய்வீக புருஷர் என்றும் மஹா சங்கிகர்களால் எண்ணப்பட்டார். அவர்களைப் பின் பற்றிப் புதிதாகத் தோன்றிய மஹாயானர்கள் புத்தரைத் தெய்வமாக ஆக்கிவிட்டார்கள். புத்தரின் வரலாற்று மனிதத் தன் மையை ஒதுக்கித் தள்ளும் அளவுக்குக் கற்பனைகளும், மாயங்களும், மூட நம்பிக்கைகளும் மலிந்த புதிய புத்த சரித்திரங்கள் புதிய நம்பிக்கைக்கேற்ற முறையில் எழுதப்பட வேண்டியதாயிற்று. மஹாவஸ்து என்ற நூலிலும் லலித விஸ்தாரம் என்ற நூலிலும் புத்தரது வாழ்க்கை வரலாறு இவ்வாறுதான் எழுதப்பட்டிருக் கிறது. முதல் நூல் மஹா சங்கிகர்களுடையது; இரண்டாவது இக் கொள்கைக் கேற்ப மஹாயானர்கள் எழுதியது.

"புத்தரின் மூலக் கொள்கையோடு மஹாயான பௌத்தம் தொடர்புடையது என்று காட்ட இரண்டு விஷயங்கள் தேவைப்

பட்டன. அதைச் செய்வதற்கு நம்ப முடியாத புராணக் கதைகளை உருவாக்க வேண்டும். சாஸ்திரீய நூல்களைப் போலியாகத் தயாரித்தாக வேண்டும். மஹாயானர்கள் இவ்விரண்டு காரியங்களையுமே செய்தார்கள். "மஹாயானம் என்பது புத்தரது கொள்கையைத் தவிர வேறொன்றும் இல்லை. அது முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், மறை பொருள் கொண்டதாகவும் இருந்ததால் தான் புத்தரால் வெளியிடப் படாமல் இருந்தது. இக்காரணத்தால் தான் பாலி மொழித் தத்துவ சாஸ்திரங்களில் அது இடம் பெறவில்லை," என்று அவர்கள் கூறினார்கள். "தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலருக்கு மட்டுமே புத்தர் இந்த மேலான உண்மையைப் போதித்தார். இந்த உண்மை அவரது மறைவுக்கு 500 ஆண்டுகள் கழித்துத்தான் வெளியிடப்பட வேண்டும் என்று அவர் கட்டளையிட்டார். அதாவது புத்த சமயத்தார் எல்லோரும் தாழ்ந்த உண்மையைக் கடைப்பிடித்து ஒழுகிய பின்னரே, இந்த மேலான உண்மை பிரசாரம் செய்யப்பட வேண்டும்," என்ற ஒரு வதந்தியையும் அவர்கள் கிளப்பினார்கள்.

"இந்த ஐநூறு ஆண்டுகள் என்ற கணக்கே வேண்டுமென்று சொல்லப்பட்டதாகும். ஏனெனில் கிட்டத்தட்ட இந்தக் காலத்தில்தான் மஹாயானக் கொள்கை விளக்க நூல்கள் பல வெளி வந்தன. கலப்பான சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட இவை மஹாயான சூத்திரங்கள் என்றழைக்கப் பட்டன. இவற்றில் முக்கியத்துவம் வாய்ந்தவை பிரக்ஞா—பராமிதை, சமாதி ராஜ்யம், லங்காவதாரம், ஸத்தர்ம புண்டரீகம் போன்றவையாகும்.

"இவைகளின் அடிப்படை நோக்கம் புத்தரைக் கருணையும், பேரறிவும் கொண்ட கடவுளாக ஆக்குவதும், புத்தரின் வழிபாட்டை ஏற்படுத்துவதுமேயாகும்.

"புத்தரின் கொள்கைகளில் ஒன்று கடவுள் மறுப்புக் கொள்கை. புத்தரது கொள்கைகளே தங்கள் கொள்கை என்று கூறிக்கொண்ட மஹாயானிகள், புத்தரையே கடவுளாக்கி, அவரையே தெய்வமாக வழிபட்டு, அவரது கொள்கையை முதுகில் குத்திக்கொண்டார்கள். மஹாயானம் எல்லாவிதமான

மூடநம்பிக்கைகளுக்கும் இருப்பிடமாயிற்று. பிற்காலத்திய நூல்களுக்கு இத்தகைய உயர்ந்த சாஸ்திரிய சம்மதத்தை அளிப்பதற்கு இந்த நூல்கள் பிற்காலத்தில் திடீரென வந்து விடவில்லை என்று தம்மைப் பின்பற்றுபவர்களை நம்ப வைக்க பல புனை கதைகளை இயற்றினார்கள். நாகார்ஜுனர் மகாசங்கிதையின் ஒரு பிரிவான சர்வாஸ்திவாதியாக இருந்தபோது நாகர் இன மக்களிடையே பிரக்ஞாபாராமிதை என்னும் நூலைக் கண்டு பிடித்தார் என ஒரு கதையை உருவாக்கிப் பரப்பினார்கள். உண்மையில் நாகார்ஜுனரே இந்நூலின் ஆசிரியர். நாகார்ஜுனர் எந்தக் கொள்கைக்காகத் தமக்கே உரிய முறையில் போராடி வந்தாரோ அதே தத்துவக் கொள்கைகள் பிரக்ஞா பாராமிதையில் மந்திரச் சொற்களில் அழகாகப் புனையப்பட்டு புத்தரின் அங்கீகாரத்தோடு கொள்கை ரீதியாக வழங்கப்பட்டுள்ளது. உண்மையில் இது புத்தரின் கொள்கை அன்று. பிற்காலத் தேவைகளுக்கு ஏற்பப் புத்தரின் கொள்கைகளினின்றும் மாறுபட்ட ஒரு கொள்கையே இந்நூலில் கூறப்பட்டுள்ளது.''

## ஆ. அப்பாலைத் தத்துவம்

''மகாயான சூத்திரத்தில் பலவித சமயக் கருத்துக்களிடையே அப்பாலைத் தத்துவத்தின் முன்னிலை அம்சங்கள் காணப்படுகின்றன. இது உபநிஷதத்தில் காணப்படும் உலக வாழ்வின் உண்மையான இயல்புக் கொள்கையின் மறுதலிப்பாக இருக்கிறது. உலகை உண்மை என்று கூறும் அனுபவரீதியான எதார்த்த உண்மையானது நமது உலக வாழ்வைப் பொறுத்த மட்டிலுமே உண்மை. எனவே அது தாழ்ந்த உண்மை. உயர்ந்த உண்மை அன்று. உயர்ந்த உண்மை அல்லது பரமார்த்திக சத்தியம் என்பது உலகம் பொய் என்பதும் சூன்யமே உண்மை என்பதும் ஆகும். இவ்வுலக மறுப்புக் கொள்கையிலிருந்து மாத்யமிகம், யோகாச்சாரம் என்ற இரண்டு கொள்கைகள் தோன்றின.''

மேற்கூறிய கருத்துக்கள் மார்க்சிய இந்தியத் தத்துவப் பேராசிரியர் தேவிபிரசாத் சட்டோபாத்தியாயா ''இந்தியத் தத்துவம்'' என்ற நூலில் ''புதிய பௌத்தப் பிரிவுகள்'' என்ற

பிரிவில் எழுதியுள்ளவை ஆகும். மேற்கூறியவற்றிலிருந்து பௌத்தப்பிரிவுகள் தோன்றிய வரலாறு தெரிய வருகின்றது. பழைய பௌத்தத்திற்கும், புதிய பௌத்தப்பிரிவுகளுக்கும் அடிப்படையில் தத்துவ சமயக் கோட்பாடுகளில் வேறுபாடுகள் உள்ளன. பழைய பௌத்தத்தின் கோட்பாடுகளை முன்னரே விளக்கினோம். அதன் தத்துவம் எவ்விதச் சிக்கலும் இல்லாதது. அதன்படி உலக நிகழ்ச்சிகள் அனைத்தும் மூன்று தன்மைகள் உடையன. அவை: 1. அநித்தியம் 2. துக்கம் 3. அனாத்மம் என்பவையாகும்.

இவற்றின் பொருள் வருமாறு:

1. அனைத்தும் மாறும் தன்மையுடையவை. யாவும் நிலையற்றவை. அழியாததும் நிலையற்றதுமான பொருள் எதுவும் இல்லை. 2. அனைத்தும் துன்பமயம். பிரிவும் வாழ்க்கையும் துன்ப மயமே. 3. இவ்வுலகின் யான், எனது என்றழைக்க எதுவுமே இல்லை. எனவே ஆன்மா என்று ஒரு வஸ்து இல்லை. 4. கூட்டுப் பொருள்களனைத்தும் ஜடவஸ்துக்களாலும் ஜடமற்ற வஸ்துக்களாலும் ஆகியவை. ஜடவஸ்துக்கள் நாமரூபம் உடையவை. அதாவது பெயரிட்டு அழைக்கப் பெறுதலும் வடிவமுடையதாதலும் அவற்றிற்கு உண்டு. மாறாக—இவ்விரண்டு தன்மைகள் இல்லாதவை ஜடமற்ற வஸ்துக்கள். அவற்றின் மூலங்கள் ஐந்து வகைப்படும். இவ்வைந்து மூலங்களைப் பிற்கால பௌத்தர் பஞ்சஸ் சந்தம் என்றழைப்பர். அவை 1. ரூபம் (appearance) 2. வேதனை (Sensations) 3. சஞ்ஜ்யா (Perception) 4. சம்ஸ்காரம் (Mental formatives) 2. விஞ்ஞானம் (consciousness) ஆகியவை ஆகும். இவையாவும் மனத்திலுள் உள்ளன. இவ்வைவகை மூலங்களால் ஜடமற்ற வஸ்துக்கள் தோன்றும். இவை 12 உறுப்புகளாகவும் 18 தாதுக்களாகவும் வகைப்படுத்தப் பட்டுள்ளன.

பஞ்சஸ்கந்தங்களின் பெயர்களைச் சாத்தனார் மொழி பெயர்த்தனிக்கிறார். அவை: 1. உருவம் 2. வேதனை 3. குறிப்பு 4. பாவனை 5. விஞ்ஞானம் ஆகியவை. தாதுக்கள் புறப்பொருள்கள் ஒலி, ஒளி, மணம், சுவை, ஊறு முதலியனவும் மனத்தால் அறியப்படுவனவும் ஆகும்.

மேற்கூறிய கருத்துக்களில் நாம் காணும் தத்துவக் கொள்கை பிரபஞ்சத்தினையும், அவற்றின் உறுப்புக்களையும் உருவாக்கும் பொருள்கள் தன்மையவனாவாகும். இதை தன்மைவாதம் (P!uralism) எனக் கூறலாம். இவ்வாறு உலகை அறிந்து அதன் நிலையாமையை உணர்ந்து நான்கு உண்மைகளை அறிந்து சீலம், பிரக்ஞை, தியானம் மூன்றையும் அனுஷ்டித்து துக்கமற்ற நிர்வாண நிலையை அடையலாம். இந்த நிர்வாண நிலையே பழைய பௌத்தர்களான தேர வாதிகளின் உயர்ந்த லட்சியமாகும்.

தேரவாதிகளின் கொள்கையில் அப்பாலைத் தத்துவங்கள் (Metaphysics) அதிகமாக இல்லை. புத்தர் தருக்கவியலையும் அப்பாலைக் கொள்கைகளையும் விரும்பவில்லை. வையாபுரிப் பிள்ளையவர்களும் இதற்கு ஓர் உதாரணம் காட்டி இக்கூற்றை விளக்கியுள்ளார்கள். மாலுங்கியர் என்பவரது புதல்வர்கள் புத்தரிடம் பிறப்பு-இறப்பு, இறப்பின் பின் மனித நிலை பற்றிக் கேள்விகள் கேட்டனர். இதற்குப் பதிலாக புத்தர் 'ஒரு உவமைக் கதை கூறினார்.

ஒருவன் விஷமூட்டிய அம்பினால் காயமடைந்து வருந்திக் கொண்டிருக்கிறான். அவனுடைய நண்பர் ஒருவர் வேகமாகச் சென்று வைத்தியரை அழைத்து வருகிறார். வைத்தியர் அம்பை வெளியே எடுக்கப் போகும் நிலையில், காயமடைந்தவன், "நிறுத் துங்கள்! எனது கேள்விகளுக்குரிய பதிலைச் சொன்னால்தான் அம்பை எடுக்கலாம். இதோ எனது கேள்விகள்," என்று கீழ்க் கண்டவற்றைக் கேட்கிறான்.

1. யார் இந்த அம்பை எய்தது?

2. இதை எய்தவன் க்ஷத்திரியனா, பிராமணனா, வைசியனா, சூத்திரனா?

3. அவன் எந்தக் குலத்தைச் சேர்ந்தவன்?

4. அவன் நெடியவனா, அல்லது குறுகியவனா?

5. அம்பு எந்த வகையைச் சார்ந்தது?

6. அது எந்தக் கொல்லன் உலையில் செய்தது?

இதற்கெல்லாம் வைத்தியன் பதில் சொல்லத் தொடங்கினால், இந்தவிடைகளைச் சொல்லி முடிக்குமுன் காயமுற்றவன் இறந்து விடுவான். இதைப்போலவேதான் உலகிற்கு அப்பாற்பட்ட விஷயங்களைக் குறித்துக் கேள்விகள் கேட்கும் மாணுக்கனும் துக்கம், துக்க உற்பத்தி, துக்க நிவாரணம் துக்க நிவாரண மார்க்கம் என்னும் நான்கு சத்தியங்களை தெரிந்து கொள்ளுமுன்பு இறந்து போய்விடுவான் என்பது நிச்சயம். இதிலிருந்து தர்க்க விவாதங்கள், அப்பாலைக் கோட்பாடுகள், உலகம் உண்மையா பொய்யா, ஆன்மா உண்டா இல்லையா, என்ற அப்பால விவாதங் கள் ஆகியவற்றை அவர் விரும்பவில்லை என்பது தெரிகிறது.

இனி, மகாசங்கிகர்கள் எனப்படும் பிற்கால பௌத்தப் பிரிவு களுக்கு மூலமாக இருந்த மகாசங்கிகர்கள் தத்துவத்தையும் சமயக் கோட்பாடுகளையும் சுருக்கமாகக் காண்போம். இவர்கள் தாம் மூதன் முதலில் பிரிவற்ற பௌத்த சங்கத்திலிருந்து விலகியவர்கள். இவர்களது தத்துவமும் கோட்பாடுகளும் பிற்கால மகாயானப் பிரிவுகள் தோன்றுவதற்கு இடைப்பட்ட கருத்துக்களாக இருந் தன. இவர்கள் பிரிந்து சென்ற வரலாற்றை முன்னர் கண்டோம். ஆயின் தத்துவத்தில் சில அடிப்படைக் கருத்துக்களில் தேரவாதி களோடு உடன்படுகிறார்கள். நான்கு உண்மைகள், அஷ்டாங்கப் பாதை, அனாத்ம வாதம், கர்மவாதம் அல்லது காரியகாரணத் தொடர்ச்சி, 36 பிரபஞ்ச மூலங்கள், படிப்படியான வளர்ச்சியால் முழு நிர்வாணம் எய்துதல் போன்ற கொள்கைகள் இவர்களுக்கும் உடன்பாடே.

### இ. தத்துவ வேறுபாடுகள்—தேரவாதம்-மஹாயானம்

ஆனால் புதிய பௌத்தர்கள் தேரவாதத்தினின்றும் எக் கொள்கைகளில் வேறுபடுகிறார்கள்? இவர்கள் தேரவாதத்தினின் றும் வேறுபடும் சில அம்சங்களை மட்டும் இங்கு கூறுவோம்— இவர்கள், புத்தர்கள் லோகோத்தார தன்மையுடையவர்கள் என நம்பினார்கள். அதாவது புத்தர்களிடம் அசுத்தத்தன்மை எதுவும் இல்லை; அவர்களது உடலும் ஆற்றலும் எல்லையற்றவை. அவர் களுக்கு தீர்க்க ஆயுள் உண்டு. அவர்களுக்கு உறக்கமும் உணவும் அவசியமில்லை. ஆசைகளை வென்று விட்டவர்கள்

ஆதலால் அவர்கள் மனம் நிலைத்த அமைதியில் இருக்கும். ஒரு கணத்தில் அனைத்தையும் அறியும் ஆற்றல் அவர்களுக்கு இருக்கும். புத்தர்கள் மனிதத் தன்மைகளுக்கு அப்பாற்பட்டவர்கள். புத்தர்கள் எண்ணற்றவர்கள். அவர்கள் சாதாரண மனிதர்களைப்போலப் பிறப்பதில்லை. தாயின் கருவில் வளர்ச்சியுறும் அவஸ்தை அவர்களுக்கு இல்லை. ஆசை, கோபம், குரோதம் என்னும் உணர்ச்சிகள் அவர்களிடம் தோன்றமாட்டா. பிற்காலத்தில் புத்தர்கள் ஆகப் போகும் அவதார புருஷர்கள். அவர்கள் போதிசத்துவர்கள் என்றழைக்கப்படுவார்கள். இக்கொள்கையில் தான் முக்கியமான வேறுபாடு தோன்றுகிறது. புத்தரைத் தெய்வமாக்கி அவருடைய போதனைகளைப் புனிதமாக்கி பௌத்தத்தை வெகுஜன மதமாக்கும் அம்சங்களை இங்கே காண்கிறோம்.

இவை தவிர மகாசங்கிகர்கள் தேரவாதத்தினின்றும் சில தத்துவ அம்சங்களிலும் வேறுபட்டனர். ரூபம் என்றழைக்கப்படும் ஜடப் பொறிகளும் மனமும் அப்பொறிகளின் விஞ்ஞானம் என்னும் உணர்வில்லாமல் அறியமாட்டா.

பிரக்ஞை என்னும் அறிவுணர்ச்சியால் மட்டும் நிர்வாண நிலை அறிய முடியும்.

ஐந்து விஞ்ஞானங்கள் பற்றையும் விளக்கலாம். பற்றின்மையையும் விளக்கலாம்.

சிராவகம் முன்னேறிய நிலைமையிலிருந்து பின்னேறலாம். ஆனால் ஆருகதர் என்னும் துக்க நிவாரணப் பாதையில் முன்னேறும் பிட்சுக்கள் முன்னேறிய நிலையிலிருந்து பின்னேற முடியாது. இக்கொள்கையினால் சிராவகர் என்றும் உலக வாழ்க்கையில் ஒரு தொழில் புரிந்து கொண்டே சாதாரண பௌத்த ஒழுக்க நெறியைப் பின்பற்றுபவர்களைவிட, உலகைத் துறந்து தொழில் புரியாமல், சாவகர்களின் தானத்தினால் பெறும் உணவு உடை உறையுளை நுகர்ந்து துறவுநிலை பூண்டு நிர்வாண நிலைக்கு முயலும் பிட்சுக்களே உயர்ந்தவர்கள் என்கிறது. இதனால் அறிவாளிகளான துறவிகள்; உழைப்பாளிகளான சாவகர்களைவிட மேன்மையானவர்கள் என்றும், துறவிகளைக் காப்பதே உழைப்பாளிகளது கடமையென்றும் வற்புறுத்துவதற்கான ஒழுக்க நெறி

அடிப்படை நிறுவப்படுகிறது. இந்த தத்துவத்தை மறுத்தே, துறவறம், இல்லறம் இரண்டையும் ஆராய்ந்த வள்ளுவர், இல்லறம் துறவறத்தைவிட மேலானது என்று, உழைப்பில் ஈடு பட்ட இல்லறத்தார் தொழில் புரியாவிட்டால், துறவிகள் துறவறத்தில் வாழ முடியாதெனவும் கூறினார். அவர் சாவகர் நிலையை மேன்மைப்படுத்தி, அவர்கள் வாழ்க்கையையே துறவத் திற்கு அடிப்படையென்றும், உழவும் தொழிலும் இன்றி, உண்பதும் உடுப்பதும் துறவிகளுக்கு இல்லாமற் போய்விடும் என்றும், இவையின்றித் துறவறம் நோற்பது இயலாது என்றும் கூறுகிறார்.

"உழவினார் கைம்மடங்கினில்லை விழைவதூஉம்
விட்டோமென்பார்க்கு நிலை".


உழவுத் தொழில் புரிவோர் ஐந்து விரல்களையும் மடக்கிக் கொண்டு, தொழில் புரிவதில்லை என்று முடிவு செய்துவிட்டால், ஆசைகளை விட்டுவிட்டு நிர்வாணம் பெறமுயலுகிறோம் என்று சொல்லும் துறவிகள், அந்நிலையில் நிலைத்திருக்க முடியாது என்பது வள்ளுவர் கருத்து. எனவே துறவத்தைத் தாங்கி நிற்பதே இல்லறத்தாரான உழவர்களது உழைப்பு என்று வள்ளுவர் கூறுகிறார். மனிதனது இயற்கை நிலை தூய்மையானது. உபகிலே சங்கள்தான் அவற்றைக் கறைப்படுத்துகின்றன.

இவற்றினின்றும் முக்கியமாக செயல்களைவிட உணர்வாலும் அறிவாலும்தான் மனிதன் நிர்வான நிலை அடையும் வழி இருக் கிறது என்ற கொள்கையை நோக்கி மஹாயானர்களின் தத்துவப் போக்குகள் சென்றன. புறவாழ்வை மறுத்து அகவயமான அப்பாலைத் தத்துவ அம்சங்கள், இவர்களது தத்துவங்களில் வலுப்பெற்றன. இதன் உயர்நிலை வளர்ச்சியாக மஹாயானத்தின் பல பிரிவுகளின் தத்துவங்களும் அப்பாலைத் தத்துவப் போக்கில் முன்னேறிச் சென்றன.

### ஈ. மஹாயானப் பிரிவுகள்

மஹாசங்கிகம் பிளவுபடாத பழைய பௌத்தத்திலிருந்து பிரிந்த பின்னர், அதன் தத்துவத்தின் பல கூறுகளைத் தனித்

தனியே வளர்த்துக் கொண்டு, பல தத்துவப் பிரிவுகள் தோன்றி, அவற்றின் அடிப்படையில் பல பௌத்த சமயப் பிரிவுகள் தோன்றின. மஹாசங்கிக பௌத்தத்திலிருந்து பிரிந்த மஹாயானப் பிரிவுகளைக் கீழ் வரும் கொடி வழியில் காணலாம்.




மஹாசங்கிகத்திலிருந்து பிரிந்த இப்பிரிவுகளை கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் இணைக்கச் சில தத்துவ இணைப்பு முயற்சிகள் நடந்தன. இவ்வாறு இருபெரும் தத்துவ—சமயப் பிரிவுகள் தோன்றின. அவற்றுள் ஒன்று நாகார்ச்சுனர் தோற்றுவித்த **மாத்யமிகம்** என்பதும், மைத்ரேயநாதர் தோற்றுவித்த **யோகாச்சாரம்** அல்லது விஞ்ஞானவாதமும் ஆகும். இவையிரண்டும் வரலாற்று முக்கியத்துவம் உடையவை. இவை பிற்காலத்தில் செல்வாக்குப் பெற்று, சீனம், கொரியா, ஜப்பான் முதலிய நாடுகளுக்குப் பரவியது. மாத்யமிகம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலும், பிந்தியது கி. பி. 3ம் நூற்றாண்டிலும் தோன்றியவை.

இவற்றுள் நாகார்ச்சுனருடைய மாத்யமிகமே முக்கியமானது. விஞ்ஞானவாதிகள் பெரும்பாலும் தத்துவச் சிந்தனைகளில் நாகார்ச்சுனரைப் பின்பற்றுகிறார்கள். வேறுபடும் அம்சங்கள் பெயரிலும், சில ஒழுக்க முறைகளிலுமே இருந்தன. இருவருமே செயலை மறந்து அறிவை உயர்த்தினார்கள். இதனால் புத்தரை தெய்வமாக்கிவிட்டு, அவரது போதனைகளை மறுத்து அவரது

சிந்தனைகளுக்கு எதிரான அப்பாலைத் தத்துவத்தை உருவாக்கி விளக்கினார்கள்.

நாசார்ச்சுனர் எழுதிய மாத்யமிக சாரிகை என்னும் நூலில் மாத்யமிகப் பிரிவினரின் தத்துவக் கோட்பாடுகள் வரவேற்கப் பட்டு தர்க்கரீதியாக விளக்கப்பட்டுள்ளன. இது தேரவாதத்திற்கு முற்றிலும் மாறுபட்டது. தேரவாத நூல்களான பாலிப் பிடகங்களில் கூறப்படும் ஒழுக்கமுறையான மாத்யமிகத்தை இது தத்துவ இயலாக மாற்றி விளக்குகிறது. தேரவாதம் புலனின்பம் துய்த்தலாகிய வாழ்க்கையையும் அதனை முற்றிலும் வெறுத்துக் கடுந்துறவு பூண்டு வாழும் வாழ்க்கையை விட்டு நடுப் பாதையாகப் புலனடக்கத்தையும் தீயனவற்றையும் விலக்கி நல்லனவற்றைக் கடைப்பிடிக்கும் அஷ்டாங்கப் பாதையை விளக்குகிறது. தேரவாதத்தில் மாத்யமிகம் எனும் சொல்லுக்கு இதுவே பொருள். ஆனால் நாகார்ச்சுனரின் மாத்யமிகக் காரிகை இத்தகைய நடுப்பாதையை முற்றிலும் வேறான பொருளில்—தத்துவப் பொருளில் விளக்குகிறது. தேரவாதத்தில் மாத்யமிகம் செயல் ஒழுங்கு பற்றியது. நாகார்சுனரின் மாத்யமிகம் அப்பாலைத் தத்துவ ரீதியானது.

ஆத்மா, அனாத்மா, உலகம் உண்மை, உலகம் இன்மை, நிலைத்தல், நிலையாமை முதலிய முரண்பட்ட கொள்கைகளை நாகார்ச்சுனர் சுட்டிக்காட்டி உலகம் உண்மை என்றோ உண்மை அல்ல என்றோ ஒரு சார்பு நிலையை மாத்யமிகர்கள் ஏற்றுக் கொள்வதில்லை என்று கூறுகிறார். இம் முரண்பாடுகளுக்கிடையில் அவர்கள் நடுநிலை ஏற்றுக் கொள்கிறார்கள். இந்நிலையை ஏற்றுக் கொள்வதற்கு உண்மை என்பது பற்றியும் ஒரு தத்துவ விளக்கத்தைக் கூறுகிறார்கள். உண்மைகள் தராதரமானவை என்றும் (Relative) அவற்றுள் ஒன்று கீழான உண்மையானசம் விருத்தி சத்தியம் என்றும் மற்றொன்று மேலான உண்மையான பரமார்த்திகை சத்தியமென்றும் வகைப்படுத்திக் கொள்ளுவார்கள். இவற்றுள் மனிதன், புலன், காட்சி, அனுபவங்களாலும் அதன் அடிப்படைகளை விட்டு விலகாத அனுபவத்தாலும் பெறுகிற உண்மை சம்விருத்தி சத்தியம் என்ற கீழான உண்மையாகும்.

மனித அனுபவங்களைக் கடந்த அகவய அனுபவங்களால் எழும் மேலான உண்மை பரமார்த்திக உண்மையாகும். இல்லாததை இருப்பதென மயங்கும் பேதமையின் விளைவே கீழான உண்மை. உலகனைத்தும் எதிரொலிபோல் உண்மையில்லாதது என்று அறிவதே மேலான உண்மை அல்லது பரமார்திக சத்தியம். இவற்றுள் கீழான உண்மை பாதை மாற்றுகிறது; இரண்டாவது உண்மைதான் மனிதன் அடைய வேண்டிய பாதையைக்காட்டுவது. கீழான உண்மைமூலம் உலகை அறிந்து மேலான உண்மை மூலம் உலகம் பொய் அல்லது சூனியம் என்றுணர்தல் வேண்டும்.

இக் கொள்கை பிரம்மவாதிகள், அத்வைதிகள் கையாளும் நேதி நியாயம் என்ற எதிர்மறை விவாதத்தினலேயே விளக்கப் படும். தாாதர சத்தியம் என்னும் தத்துவக் கருத்தை நான்கு வகை எதிர்மறைகளால் நாகார்ச்சுனர் விளக்குகிறுர்.

"தோற்றமுமில்லை; முடிவுமில்லை
நிலைத்தலுமில்லை; நிலையாமையுமில்லை
ஒருமையுமில்லை; பன்மையுமில்லை
உருவாவதில்லை; மறைவதுமில்லை

இவ்விரட்டை முரண்பாடுகளைக் கடந்து நிற்பது சூன்யம். சூன்யம்—

எல்லையற்றது; நாமகரணமற்றது
அது ஒன்றே உள்ளது; மற்றவை
பேதமையினல் கீழான உண்மையாய் நமக்குப் புலனுவது.

## உ. உயர்ந்த உண்மையும் தாழ்ந்த உண்மையும்

இதுவே உயர்ந்த உண்மை என்று நிலைநாட்ட நாகார்ச்சுனர் தர்க்கவியலைத் திறமையாகக் கைபாண்டார். புத்தர் போதித்த அருள்மொழிகள் என்று கருதப்பட்ட பாலி நூலின் கருத்துக் களுக்கு நாகார்ச்சுனரின் உயர்ந்த உண்மை முரண்பட்டிருந்ததால் தமது புதிய கொள்கைகளைப் புத்தரோடு இணைக்க வேண்டிய

அவசியம் அவருக்கு ஏற்பட்டது. இந்த உயர்ந்த உண்மையைப் புத்தர் கூறியதாகவே கூறிப் பரப்புவதற்கு நாகார்ச்சுனர் ஒரு கதை புனைந்தார். அக்கதை வருமாறு :

சாதாரண அறிவுடையவர்களுக்காக உவமைக் கதைகளாகவும், நீதிக் கதைகளாகவும், ஜாதகக் கதைகளாகவும், மாயா ஜாலங்களாகவும், தனியாகத் தர்மத்தை உபதேசித்ததாகவும், தூய்மையானவர்களும் சத்யத்தைக் கடைப்பிடிப்பவர்களும், தர்மப்பாதையில் முன்னேறியவர்களுமான பிக்குகளுக்குப் பழைய கீழான தர்மத்தைவிட முன்னேறிய தர்மத்தைப் புத்தர் போதித்த தாகவும் நாகார்ச்சுனர் கூறினர்.

இவ்வாறு தர்மப் பாதையில் முன்னேறியவர்களுக்காகப் உபதேசிக்கப்பட்ட உண்மையே தங்களுடைய மாத்யமிகம் என்று நாகார்ச்சுனர் கூறினர். இந்தக் கதையில்தான் எல்லோரும் புத்தர்களாகும் பாதையில் முன்னேறும் போதி சத்துவர்களாகலாமென்றும், இறுதியில் புத்தர்களாகலாம் என்றும் புத்தர் செல்லுவதாக நாகார்ச்சுனர் சொல்லுகிறார்.

இவ்வாறு தர்மப் பாதையில் முன்னேறியவர்களுக்காகப் புத்தரால் உபதேசிக்கப்பட்ட உண்மையே தம்முடைய மாத்யமிக தத்துவம் என்று நாகார்ச்சுனர் கூறுகிறார். இதற்கு மேல் புத்தர் இருவகை உண்மைகளை ஒன்றை மந்த அறிவு படைத்தவர்களுக்கும் மற்றொன்றைக் கூர்மையான அறிவு படைத்தவர்களுக்கும் போதித்ததற்கு என்ன காரணம் என்று காட்ட ஒரு உவமைக் கதையைப் புத்தரே சொன்னதாக நாகார்ச்சுனர் சொல்லுகிறார். அக்கதை வருமாறு:

ஒரு வீடு எரிந்து கொண்டிருந்தது. தகப்பன் வீட்டிற்கு வெளியில் இருந்தான். அவனுடைய குழந்தைகள் வீட்டினுள் இருந்தனர். தகப்பன் "தீ உங்களைப் பொசுக்கி விடும். இந்த ஜன்னல் வழியாக வாருங்கள்" என அழைத்தான். குழந்தைகள் விளையாட்டில் கண்ணுயிருந்ததால் தந்தையின் பேச்சைக் கேட்கவில்லை. அவன் அவர்கள் மனத்தை வெளியே திருப்ப "இங்கே வாருங்கள்; மூன்று தேர்கள் இருக்கின்றன. விளையாடலாம்"

என்ருன். அவர்கள் வெளியேவந்து விட்டார்கள். அவர்கள் விளையாடத் தேரையும் வாங்கிக் கொடுத்தான். பின்னர், எரிந்த வீட்டினுள் இருந்தால் என்ன நிகழ்ந்திருக்கும் என்பதை எரிந்து கரியாகப் போன பொருள்களைக் காட்டி விளக்கினன். வீடு எரியும்போது வெளியே வரவேண்டியதன் அவசியத்தையும் சொன்னன். குழந்தைகள் தாங்கள் வெளியே வந்தது எப்படிச் சரியானது என்று அறிந்தார்கள்.

தேரை விளையாடக் கொடுத்தது போல்தான் முன்னேருத வனுக்குக் கீழான ஒரு பாதையையும், மனப் பக்குவம் உள்ள அறிந்து கொள்ளக் கூடியவனுக்கு மேலான ஒரு பாதையையும். புத்தரே அமைத்துக் கொடுத்ததாகவும் நாகார்ச்சுனர் கூறுகிருர்.

மேற்கூறியவற்றிலிருந்து சில உண்மைகள் வெளியாகின்றன தத்துவக் கொள்கைகளிலும் சமயக் கோட்பாடுகளிலும் புத்தரின் கொள்கைகள் எனப்பட்டவைகளிலிருந்து மாறுபட்டவற்றிற்குப் புத்தரின் அங்கீகாரம் பெற இக்கதைகளை நாகார்ச்சுனர் புனைந்தார். புத்தர்கள் பலர் என்றும் அவர்களில் சாக்கிய முனிவர் ஒருவர் என்றும் கூறினர். எத்தனையோ கோடி புத்தர்கள் போதித்த நான்கு உண்மைகளும் 8 உறுப்புப் பாதையும் மந்த புத்தி உடைய வர்களுக்கென்றும், பக்குவமில்லாதவர்களுக்கென்றும், தம் முடைய அப்பாலைத் தத்துவமும், தர்க்க நெறியும் கூர்மையான அறிவுடையவர்களுக்கெனவும் நாகார்ச்சுனர் கூறினர். போதி சத்துவர் என்னும் கருத்தை மகாசங்கிகர்களது லோகோத்தார த்தர் எனும் கருத்திலிருந்து வளர்த்துக் கொண்டார்.

மஹாயானத்தின் மற்ருெரு பிரிவினரான யோகாச்சாரர் என்ற விஞ்ஞானவாதிகளும் தங்களது கொள்கைகளைப் புத்தரது கொள்கைகளோடு இணைத்துவிட நாகார்ச்சுனரது புனைகதை வழியையே பின்பற்றினர்.

நிர்வாண நிலையடைய தியானமே (சிந்தனை) சிறந்த வழி யென்று கூறினர். யோகம் அல்லது செயல் நடைமுறை வழியே யோகம் கீழான வழி அப்பாலை அம்சத்தில் தங்களுடைய விஞ்ஞானம் மட்டுமே உண்மையென்றும், மற்றவை தோற்ற

மெனவும் வாதித்தனர். விஞ்ஞானம் சித்தம் (மனம்) அதுவே மேலான உண்மையென வாதித்தனர். உலகமும் உலக நிகழ்ச்சிகளும் வெறும் தோற்றமே. மேலான உண்மை சூன்யம் (வெறுமை) என்ற சூன்யவாதிகளது கொள்கைக்கு எதிராக விஞ்ஞானவாதிகள் சித்தம் அல்லது விஞ்ஞானம் மட்டுமே என்று கூறுகிறார்கள். ஆயினும் இவர்களிருவருமே, மனிதன் மனத்திலுள்ள ஒரு கருத்தையே, சூன்யமாயினும் சரி, விஞ்ஞானமாயினும் சரி, உண்மையென ஒப்புக் கொண்டு, உலகத்தைத் தோற்றம் என்று கூறுகிறார்கள். அதாவது நிழலே உண்மை, நிழல் எதன் பிரதிபலிப்போ அப்பொருள் தோற்றம் என்று சொல்லுவது போன்றது இவர்களது அடிப்படைத் தத்துவம். உலகத்தை மறுத்து, உலகத்தை அறியும் மனிதனையும் மறுத்து இவையனைத்தும் தோற்றம் என்றும், புற உலகின் உள்ளப் பிரதிபலிப்பான அறிவு, மனம், சித்தம் இவற்றையோ, இவற்றையும் மறுத்து விட்டு இல்லாத, கற்பனையான சூன்யத்தையோ இவர்கள் மேலான உண்மையென்றும் கூறுகிறார்கள். இவை அகவய ஒருமைத் தத்துவமாகவோ (Subjective monism) கருத்துவய ஒருமைத்தத்துவமாகவோ உள்ளன.

### ஊ. மஹாயானமும் சங்கரரும்

சங்கரரது அத்துவைதத்தை அவருடைய கருத்து முதல்வாத எதிரிகளே (idealist opponents) பிரசன்ன பௌத்தம் (மாறுவேஷ பௌத்தம்) என்று திட்டுவார்கள். இரண்டு அம்சங்களை அவர்கள் மஹாயான பௌத்தத்தின் தத்துவங்களிலிருந்து திருடி மாறுவேடம் அளித்திருப்பதாகக் குற்றம் சாட்டுவர். ஒன்று, தராதர உண்மைக் கொள்கை. சங்கரர், சம்விருத்தி சத்தியம் என்பதை (உலகம் உண்மை என்ற கருத்து) விவகாரிக சத்தியம் என்றும், பிரம்மம் என்ற ஒன்றே உண்மையானது என்ற தமது கருத்தைப் பரமார்த்திக சத்தியம் என்றும் அழைப்பர். சூன்யவாதத்தின் 'மேலான உண்மை' சூன்யதா. 'சங்கரரின் 'மேலான உண்மை பிரம்மம். அப்பாலைத் தத்துவ சிந்தனைப் பாதைகளில் ஒற்றுமை மிகுதி. ஆயினும் பௌத்தத் தத்துவத்தை எதிர்ப்பது போன்ற ஒரு நிழல் போரை அவர் விரிவாகவே தமது தத்துவ

உரைகளில் எழுதுகிறார். எனவே இவர்களிடையே அடிப்படையான கருத்துக்களில் ஒற்றுமை அதிகம். மரபு வழிப்பட்ட வைதிக நெறியின் மொழிகளில் சங்கரர் பேசினாலும் அவைதிக நெறியின் 'மேலான 'உண்மை'களை ஒத்த ஒரு பிரபஞ்சமூலத்தையே அவர் நிலைநாட்டுகிறார். இவர்களனைவருமே கருத்துமுதல் வாதிகள். இவர்களது ஒருமைவாதம் (monism) அகவயக் கருத்து முதல் வாதமே (Subjective idealist monism)

புத்தர் தோன்றி 600 ஆண்டுகளில் மக்களது துன்பத்தைக் கண்டு இரக்கம் கொண்டு அதன் காரணத்தை அறிந்து அதனை நிவர்த்திக்க வேண்டுமென்பதற்காகச் சிந்தித்து, ஒரு கருத்துக் கோட்பாட்டையும், ஒழுக்க முறையையும் உருவாக்கிய புத்தரது கொள்கைகள், வைதீகத் தத்துவங்களின் எதிர்ப்பைச் சமாளிப்பதற்காகக் கருத்து முதல்வாதக் கூறுகளுக்கு இடம் கொடுத்து இறுதியில் கருத்து முதல் அப்பாலைத் தத்துவமாகவும், லோகாத்தார புத்தர் என்ற தெய்வக் கொள்கையாகவும் மாறிவிட்டது.

தேரவாதம், மஹாசங்கிகம், மாத்யமிகம் யோகாசாரம், சௌத்திராந்திகம் முதலிய பல பிரிவுகளைச் சேர்ந்த பௌத்த பிட்சுகள் தமிழ் நாட்டில் சமயப் பிரசாரம் செய்து வந்தனர். பௌத்தத்தை எதிர்த்த சமணர்கள் தங்கள் நூலான நீலகேசியில் இப்பிரிவுகளின் கருத்துக்களையும் சமய ஒழுக்க முறைகளையும் கண்டனம் செய்து வாதாடினர். நூலின் பாதிப்பகுதியில் பௌத்தத்தின் நான்கு பிரிவுகளோடு நீலகேசி வாதம் செய்ததாகக் கூறப்பட்டுள்ளது. குண்டலகேசி வாதச்சருக்கம், அருக்க சந்திர வாதச் சருக்கம், மொக்கவாதச் சருக்கம், புத்தவாதச் சருக்கம் ஆகிய நான்கு சருக்கங்களில் நீலகேசி என்னும் சமணப் பெண் துறவி, பௌத்தச் சமயப் பிரிவுகளோடு வாதாடுவதாக எழுதப் பட்டுள்ளது.

## எ. தமிழகத்தில் பௌத்தம்

தமிழகத்தின் பழைய பௌத்தமும், புதிய பௌத்தமும் எத்தன்மையான சிந்தனைகளைத் தோற்றுவித்தன,] அவை எவ்வாறு சமணத்தாலும், வைதிகச் சமயங்களாலும் எத்தன்மையான

சிந்தனைகளால் மறுக்கப்பட்டன என்பதை ஆராய்வது தமிழகத்தின் சிந்தனை வரலாற்றை அறிவதற்கு அவசியமாகும். இத்துறையில் மிகக் குறைவான முயற்சிகளே ஆய்வாளர்களால் செய்யப்பட்டுள்ளன. இத்துறை ஆராய்ச்சிகளால் சைவமே தொன்று தொட்டுத் தமிழர் சமயமாக, அவர்கள் சிந்தனையில் செல்வாக்குப் பெற்றிருந்தது என்ற ஒரு சார்புக் கருத்திற்கு உண்மை மாறுபட்டிருக்கிறது என்பதை உணரவும் சைவம் தவிர, அதற்கு மாறுபட்ட பல்வேறு பௌத்தத் தத்துவக் கருத்துக்களும், தருக்க முறைகளும், அவற்றை எதிர்த்த சமணர் சிந்தனைகளும், தருக்கு முறைகளும் தமிழர் சிந்தனை வரலாற்றில் இடம் பெற்றன என்றும், இம்முரண்பாடுகள் காரணமாகச் சிந்தனைகளும், தருக்க முறைகளும் ஆழமும் அகற்சியும் பெற்றுத் தமிழர் தத்துவவியல் வளர்ந்தது என்டதையும் அறியமுடியும்.

---